# விதைகள்...

## பாகம்-9

# விதைகள்...

## பகுதி – 9

பழைய ஏற்பாட்டில் “?” யோடு நின்று போன காரியங்களுக்கு ஒரு “!” யோடு பதில் கொடுக்க வந்த புதிய ஏற்பாட்டின் நாயகராம் கர்த்தர் இயேசுவின் நாமத்தில் தேவனுடைய சபைக்கும், சகல ஜனங்களுக்கும் வாழ்த்துதலைக் கூறிக்கொள்கிறோம்.

விதைகள் பகுதி – 1, 2, 3, 4, 5, என்று எழுதப்பட்ட புத்தகங்கள் **(e-books)** நியாயப்பிரமாண வாத்தியாரிடம் படித்து முடித்துவிட்டு வெளியேறி விசுவாசப்பிரமாண எல்லைக்குள் செல்லும் வழியில் எழுதப்பட்டவை. இதில் பகுதி – 1, 2, 3 கணுக்கால் அளவான நீரில் நடக்கும்போதும், பகுதி – 4, 5 முழங்கால் அளவாக அது உயர்ந்தபோதும் எழுதப்பட்டவை.
விதைகள் பகுதி 6, 7 இடுப்பளவாக பரிசுத்தாவியானவரின் நீரூற்றின் உயரம் அதிகரித்தபோது எழுதப்பட்டவை. இவைகள் சுவிசேஷத்தின் இரகசியங்களைக் கட்டவிழ்ப்பவை.
பகுதி – 8 நீச்சலாழத்திற்குள் ஆவியானவருடன் அமிழ்ந்தபோது படம் பிடிக்கப்பட்டவை! இந்த 9–வது பகுதியும், இனி வரப்போகிற புத்தகங்களும் பரிசுத்தாவியானவருடன் ஆழ்கடலுக்குள் உங்களை மூழ்கடித்து, பல உன்னத அனுபவங்களை எனக்குப் பெற்றுத் தந்ததைப் போல், உங்களுக்கும் பெற்றுத்தரும் என்று நீங்கள் நிச்சயம் நம்பலாம். வெறும் அனுபவங்களோடு நின்றுவிடாமல், அதற்குச் செயல் வடிவம் கொடுக்க உங்களைத் தூண்டிவிடும் ஒரு பகுதியாகவும் விதைகள் – 9 இருக்கும். பூமியின் சாபத்தை மாற்றும் பணியில் நம் பங்கை வெற்றியாக செய்து முடித்து ஜெயக்கொடியை ஏற்றத்தான் போகிறோம்!
யெகோவா நிசி...
அவர் நாமம் மாத்திரம் மகிமைப்படுவதாக!

முதல் 5 புத்தகங்கள் தடையேதும் இல்லாமல் இலகுவாக வெளியிடப்பட்டன. 6, 7, 8 புத்தகங்கள்? சாத்தான் சாபத்தின் வல்லமைகளோடு எதிர்த்துப் போராடுவதைப் பார்க்க முடிந்தது. என்றாலும் இரகசியம் நமக்கு வெளிப்பட்டுவிட்டதால் இனிமேல் அவன் நமக்கு ஒரு தூசிதான்!

“இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. எபே. 3:6” அது என்ன இரகசியம்? சுவிசேஷத்தின் இரகசியத்தைத்தான் பவுல் இங்கே சொல்கிறார். சுவிசேஷம் எல்லோருக்கும் தெரிகிறது, அதற்குள்ளாக மறைந்திருக்கும் இரகசியம் எத்தனை பேருக்குத் தெரியும்? ஆனால் பரிசுத்தாவியானவரால் அந்த இரகசியம்

இரகசியமாகவே இருந்துவிடாமல் வெட்ட வெளிச்சமாகிக்கொண்டு வருகிறபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். தொடர்ச்சியாக வேதத்தில் புதைந்து கிடக்கும் ஆசீர்வாதத்திற்கேதுவான இரகசியங்களை ஆராய்வதும், அதை உபதேசிப்பதும், அதை ஏற்றுக்கொண்டு ஆசீர்வாதமாக இருப்பதும் தேவனுடைய பரிபூரணமான சித்தமாகும்.

தேவ பிள்ளைகளின் எல்லைகளுக்குள் ஆசீர்வாதங்கள் நுழைய நுழைய இந்த உலகத்தை ஆக்கிரமித்துக் கிரியை நடப்பித்துக்கொண்டிருக்கும் சாபக்கேடுகள் தானாகவே நம் எல்லைகளி**லி**ருந்து விடை பெற்றுச் சென்று விடும்.

(பிரியா விடை அல்ல, நிரந்தரமாக பிரியும் விடை!)

மனுக்குலம் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் தேவனுடைய ஆசை. ஏனென்றால்

மனுக்குலத்தின் வெற்றி அவருடைய வெற்றியாக இருப்பதால்....

மனிதனை மனுபுத்திரன் என்றுதான் வேதம் அழைக்கிறது. அப்படியானால் மனிதனை அவர் புத்திரர்களாக – பிள்ளைகளாகத்தான் உருவாக்கியிருக்கிறார் என்று அறியலாம்.

உங்களது சந்தேகங்கள் – கேள்விகள் – ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள்.

தொடர்பு கொள்ளுங்கள்.

எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,

தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91-461-23 77889

அலைபேசி: +0-9003456506 & +0-9442466250

Email: sovereignjesus@gmail.com
sovereignjesus@hotmail.com
Web : www.sovereignjesus.com

**Our Address:**

**Sis. LATHA DAVID**

SOVEREIGN JESUS MINISTRIES

**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST)**
**TUTICORIN-628 008**

**Ph.: +91-461-23 77 88 9**
**Mobile: +0-9003456506 & +0-9442466250**
Email: sovereignjesus@gmail.com
sovereignjesus@hotmail.com
Web : www.sovereignjesus.com

“பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக, அவர்கள் ... பூமியனைத்தையும் ... ஆளக்கடவர்கள் என்றார். ஆதி. 1:26”

உண்டாக்குவோமாக என்று பன்மையில் சொல்லியிருப்பதால் தேவன் என்பவர் ஒன்றிற்கு மேற்பட்ட ஆள்தத்துவங்களை உள்ளடக்கியவர் என்பது தெரிகிறது. அவர் பிதா – குமாரன் – பரிசுத்தாவியாக இருக்கிறார். அவர் தன்னைப் போலவே நம்மை பெற்றெடுத்தார் என்பதைக் கீழே வரும் வசனத்தை வாசிப்பீர்களானால் இன்னும் தெளிவாகப் புரியும்.

“ஆதாம் ... தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று அவனுக்கு சேத் என்று பேரிட்டான். ஆதி. 5:3”

சாயலில் மட்டுமல்ல, முழுவதுமாக எல்லா விஷயத்திலும் அவரைப் போலவே நம்மை உருவாக்கியிருக்கிறார் என்று சொன்னால் நம்புவது கஷ்டமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது? நம்பினாலும், நம்பாவிட்டாலும் உண்மை அதுதான். இவ்வளவு காலமாக சத்தியம் மறைபொருளாக இரகசியத்தில் வைக்கப்பட்டிருந்தாலும் அது சத்தியமாகத்தான் இருந்தது, எந்த மாறுதலும் இல்லை. இக்காலங்களில் ஆவியானவரால் வெளிப்படுத்தப்படுகிறது, அவ்வளவுதான்.

“உலகத்தோற்றத்திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். 1 கொரி. 2:7” உலகத்தோற்கத்திற்கு முன்பே தேவன் தனக்காக அல்ல நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தின தேவஞானம் என்று பார்க்கிறோம். தேவன் அவரைப் போலவே நம்மை உருவாக்கியிருப்பதால் அவருடைய ஞானமும் நமக்குள்தான் இருக்கிறது. அதனால் இனிமேல் உம்முடைய ஞானத்தால் என்னை நிரப்பும் என்று ஜெபிக்கத் தேவையில்லை. அவர் ஏற்கெனவே நமக்கு தந்திருக்கும் அவருடைய ஞானத்திற்காக நன்றி செலுத்தி, அந்த ஞானத்தை சரியானபடி இயக்க வேண்டும்.

நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தின எதையும் தேவன் நமக்கு மறைக்கவில்லை, சாத்தான்தான் அதை நமக்கு மறைத்துவிட்டான். நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களாயிருந்த நாம் சாத்தானை மேற்கொள்ள முடியாமல் போனதானல், திராணியில்லாமல் போனதால் அவை மறைக்கப்பட்டதான இரகசியமாகிப் போனது. இயேசு கிறிஸ்து சிலுவையில் முடிந்தது என்று முழங்கியபோது, தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாக கிழிந்தபோது, தேவன் தேவாலயத்தில் இருந்து வெளியேறி நமக்குள்ளாகவே நேரிடையாக வசிக்க வந்துவிட்ட பிறகு ... இந்த இரகசியம் வெளிப்பட்டது.

நம் ஜெபங்களுக்கான பதில்களை தேவன் இப்போதோ, இனிமேலோ தரப்போவதில்லை. அதை ஏற்கெனவே **Programme** செய்து உன்னதங்களில் வைத்திருக்கிறார். நம் பிரச்சனைக்கு ஏற்ற வசனத்தை தேடி எடுத்து, அதை வாயில் வைத்து, பல் – நாக்கு – தொண்டை – மூளைக்கு சரியான தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அப்போது அந்த வசனம் வார்த்தையுருவத்தில் ஒரு சத்தத்துடன் வெளிப்பட்டு உன்னதங்களில் இருக்கிற பொருத்தமான பதிலை **Click** செய்கிறது. (புரோகிராம் பைல் **(Programme File)** மேலே ஹர்சரை **(Cursor)** நிறுத்தி கிளிக் செய்வதைப் போல) உடனே பதில் இறங்குகிறது, அதாவது நம் வேண்டுதலின்படி நமக்குக் கிடைக்கிறது. (புரோகிராமில் இருக்கும் காரியங்கள் மானிட்டரில் வெளிப்படுவதைப் போல)

நாம் உச்சரிக்கும் வசனத்தின்படி தேவ தூதர்கள் செயல்படுகிறார்களாம். “கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, ... சங். 103:20”

நாம் எந்த வசனத்தை சொல்கிறோமோ, அதைக் கேட்டு, தேவதூதர்கள் அதன்படி செயல்படுகிறார்கள். அதாவது தேவன்தான் செயல்படுகிறார், தன் தூதர்கள் மூலமாக. தேவதூதர்கள் வேதத்தின் வார்த்தையின்படி மாத்திரம்தான் செயல்படுகிறார்கள். வசனத்தில் இல்லாத, வசனத்திற்கு சம்பந்தமில்லாத வார்த்தைகளை உபயோகித்து 1 மணி நேரம் ஜெபித்தாலும் அவர்கள் செயல்படுவதில்லை. உபவாசத்தினாலும், அழுகையினாலும், புலம்பல்களினாலும் அவர்களைச் செயல்பட வைக்க முடியாது. விதிமுறைப்படித்தான் **(Rules and Regulations)** ஜெபித்தாக வேண்டும். விதிமுறைக்கு மாறாக நம்விருப்பப்படி, நமக்குத் தெரிந்திருக்கிறபடி, புறஜாதியாரின் முறைமையின்படி நாம் ஜெபிக்கும்போது; தவறான வார்த்தைகள் வெளிப்பட்டு

விபரீதத்தை உருவாக்குவதுதான் மிச்சம். உபவாசம், அழுகை, புலம்பல் தவறு என்று சொல்லவில்லை, அதற்கு எதிராகவும் வரவில்லை. உபவாசம் நல்லது, சரீர ஆரோக்கியத்திற்கு நல்லது. உபவாசிக்கும்போது நம் சரீர பலம் குறைந்து, ஆவியின் சக்தி அதிகரிப்பதால், ஆவி உயர்நிலை அடைந்து தேவனோடு எளிதாக தொடர்பு கொள்கிறது. இது ஒரு நல்ல பயிற்சி, அதனால் செய்யலாம், ஆனால் உபவாசத்தால் தேவனை செயல்பட வைக்க முடியாது, வார்த்தையினால்தான் செயல்பட வைக்க முடியும்.

அழுகை, புலம்பல் நல்லது. கண் சுத்தமாகிறது, மனது இலேசாகிறது, மன இறுக்கம் குறைகிறது. நல்லது, செய்யலாம், ஆனால் கண்ணீர் தேவனை செயல்பட வைப்பதில்லை. நம் வார்த்தைகள்தான் தேவனுடைய கட்டளைப்படி தேவதூதர்களைச் செயல்பட வைக்கிறது. மணிக்கணக்காக வாயில் வந்ததையெல்லாம் புலம்பித் தீர்த்துவிட்டு, ஆமென் என்கிறோமே! ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது என்ற அர்த்தம்! வார்த்தைகளை நிதானிக்காமல் ஆமென் போடாதீர்கள், அது **Dangerous** ஆமென் ஆகிவிடும்!

தேவனைப் போலவே தேவனால் படைக்கப்பட்டிருக்கும் நாம்; அவர் பரலோகத்தை நிர்வகிப்பதைப் போலவே இந்த பூலோகத்தை நிர்வகிக்க வேண்டும். அதற்கு பரலோக **Rules and Regulations** இவ்வுலகத்திலும் இயக்கப்பட வேண்டும். அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகளைத்தான் தேவன் வேதத்தில் வார்த்தை ரூபத்தில் எழுதித் தந்திருக்கிறார். அந்த வார்த்தைகளின்படி செயல்பட்டால்தான் தேவ சித்தம் இந்த பூமியில் நிறைவேறும் – பரலோகம் போலவும் மாறும். அந்த வார்த்தைகளை வாசிக்காமல், புரிந்து கொள்ளாமல், நம் விருப்பப்படி செயல்பட்டோமானால் சாத்தானுடைய சித்தம் இந்த பூமியில் நிறைவேறும் – பூமி நரகம் போல மாறும். உலகம் தோன்றி சுமார் 6500 வருஷ காலமாக இந்த கண்றாவிதான் இந்த உலகத்தின் மீது நடந்து வருகிறது. இந்த வேதனை தரும் சாபச்சூழ்நிலையை மாற்றுவதற்காகத்தான் நாம் இந்நாட்களில் எழுப்பப்பட்டிருக்கிறோம்.

இத்தனையாண்டு காலமாக ஆளுகை செய்து கொண்டிருக்கும் சாபக்கேடுகளை ஒரே நாளில் **Recover** செய்ய முடியாதுதான்... என்றாலும் தேவனால் முடியாத காரியம் எதுவுமில்லை. அவரைப் போலவே இருக்கும் நம்மால் முடியாத காரியமும் ஒன்றுமில்லை – இது வாக்குத்தத்தம். தொடர்ச்சியாக அவருடைய வார்த்தைகளைப் பேசிப் பேசி; பூமியின் மேல் அனுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். "... வசனங்கள் பூச்சக்கரத்துக் (பூமியின்) கடைசிவரைக்கும் செல்லுகிறது; ...சங். 19:4"

"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள். ஏசா. 43:21" என்ற வசனத்தின் படி அவருடைய துதியைச் சொல்லி வருவதுதான் நம் வேலை. இதற்காகத்தான் நம்மை ஏற்படுத்தியிருக்கிறாராம். துதி என்றால் எப்போதும் "ஸ்தோத்திரம்" என்று உச்சரித்துக்கொண்டே இருப்பதுதான் என்று நினைத்திருந்தேன். அது நல்லதுதான் என்றாலும்; துதி என்பது அவரை பிரஸ்தாபிப்பதாகும். "கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள்; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள். 1 நாளா. 16:8"

"மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. ரோம. 9:17" தேவனையும், அவருடைய மகத்துவங்களையும், நமக்கு அவர் கொடுத்திருக்கும் ஆளுகை அதிகாரங்களையும் உலகத்திற்கு எடுத்துச் சொல்**லி** வருவதுதான் அது. துதி என்பது; நம் வாயி**லி**ருந்து புறப்படுகிற வார்த்தைகள் அவருடைய விருப்பத்தை இந்த உலகத்தின்மீது செய்வதாக இருக்க வேண்டும். இந்தத் துதியை சரிவர ஒழுங்கும் கிரமுமமாக செய்யும்போது, 6500 வயதான இந்த பூமி, தான் உருண்டு வந்த சாபத்தீடான பாதையில் இருந்து பின்னோக்கி **(reverse order-ல்)** உருண்டு போய் மீண்டும் ஏதேனை அடையும்!

"பாழாய்க்கிடந்த இத்தேசம், ஏதேன் தோட்டத்தைப்போலாயிற்றென்றும், அவாந்தரமும் பாழும் நிர்மூலமுமாயிருந்த பட்டணங்கள் அரணிப்பானவைகளும் குடியேற்றப்பட்டவைகளுமாய் இருக்கிறது என்றும் சொல்லுவார்கள். எசே. 36:35". இந்த பூமி ஆதியில் இருந்ததைப் போலவே நன்றாக

ஏதேன் தோட்டத்தைப் போல, புதிய பூமியாக, சாப நியதி **(principle)** வேலை செய்யாத பூமியாக மாறப்போகிறது என்றெல்லாம் எதிர்பார்த்து மகிழ்கிறோம், பாடல்கள் பாடுகிறோம், கனவு காண்கிறோம், பூரிப்படைகிறோம், நல்லதுதான். ஆனால் இவையெல்லாம் எப்படி நடக்கப் போகின்றன? தானாகவா, அல்லது தேவனே செய்துவிடுவாரா? அல்லது இதில் நம் பங்கு ஏதாவது இருக்கிறதா?

ஏதாவது அல்ல, முழுவதுமாகவே நம் பங்குதான் இதில் இருக்கிறது. இந்தப் பூமியை தேவன் நம் பொறுப்பில்தான் விட்டிருக்கிறார். முதலில் அது பரலோகம் போல் இருந்தது, பிறகு சாபத்தால் நரகம் போலாக்கப்பட்டது என்பதெல்லாம் நமக்குத் தெரியும், முன்னமே பார்த்தோம். நாம்தான் இந்த பூமியின் ஆளுகை செய்பவர்கள் **(Managers!)** ஆனால் நம்மை அம்போ என்று தனியாக விட்டுவிடாமல், நம் அனுமதியோடு நம் மத்தியில் கடந்து வந்து (அவரின் பிரசன்னம்) நம் அனுமதியுடன் (விசுவாச வார்த்தைகள்) நமக்கு உதவி செய்கிறார், ஆலோசனை தருகிறார், யுத்தம் செய்கிறார், ஏன் நமக்காக எல்லாவற்றையுமே செய்து முடித்து விடுகிறார்! அதாவது தேவனுடைய நேரடி மேற்பார்வையில்தான் நாம் செயல்படுகிறோம். என்ன பாக்கியம், எவர்க்குண்டு இந்த சிலாக்கியம்!

அப்படியானால் நம் வேலைதான் என்ன? உலகம் ஆதிநிலையை அடையக்கூடிய வசனங்கள் அடிப்படையிலான வார்த்தைகளை எடுத்து இந்த உலகத்தின் மீது தீர்க்கதரிசனமாகச் சொல்ல வேண்டும். இதைக்கூட செய்ய முடியவில்லையா? கஷ்டம்தான். என்றாலும் தேவன் கோபித்துக் கொள்வதில்லை, சும்மாயிருங்கள் என்று சொல்கிறார். ஒன்று சரியான வார்த்தைகளை அறிக்கை செய்ய வேண்டும், அது முடியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு “சும்மா” இருக்க வேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்தாலே போதும்; தேவ சித்தம் இந்த உலகத்தில் நிறைவேற ஆரம்பிக்கும். எதற்கு இந்த வீண் வம்பு, பேசாமல் இருந்துவிட்டுப் போவோம் என்று **2nd choice** ஐ பிடித்துக் கொண்டோமென்றால் ... அதுதான் கஷ்டம் என்பது போகப் போக புரிய ஆரம்பிக்கும். ஏனென்றால்,

“நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. யாக். 3:8” – அதனால்தான் சொல்லுகிறோம்! பிரச்சனை இப்படி இருக்கிறதே என்று எல்லோரும் ஒட்டுமொத்தமாக தப்பிக்க முயற்சிப்பது சரியான அணுகுமுறையல்ல. விசுவாசிக்கத் திராணியில்லாமல் போய், பயம் மேலோங்கி நிற்கும் சமயங்களில் மாத்திரம் வாயை மூடிக் கொள்வது நல்லது. நம் இருதயத்தில் விசுவாசம் நிரம்பியிருக்கும்போது, நாம் பேசுவதற்கு பயப்பட வேண்டிய அவசியம் இல்லையே?

“நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும். லூக். 6:45” அதிக நேரம் வேதம் வாசித்து, இருதயத்தை வசனத்தினால் நிரப்பி வைத்துக் கொள்வோமானால், வாயைத் திறக்கும்போது என்ன வரும் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. வீட்டின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் வாட்டர் டேங்கில் தண்ணீர் நிரம்பியிருக்கிறது. பாத்ரூமில் **tap** ஐ திறக்கும்போது என்றைக்காவது எண்ணெய் வந்ததுண்டா? டீ தயாரித்து பிளாஸ்கில் ஊற்றி வைத்துவிட்டு, ஒரு மணி நேரம் கழித்து அதை கப்பில் ஊற்றும் போது காப்பி வந்துவிடுமோ என்று நான் ஒரு நாளும் சந்தேகப்பட்டதில்லை. சட்டியில் இருப்பதுதான் அகப்பையில் வரும் என்பது கிராமத்தான் பழமொழி, கவனியுங்கள், ஒரு கிராமத்தானுக்கே இந்த விஷயம் தெரிந்திருக்கிறது!

“என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது; ... சங். 45:1” – பிறகென்ன, வாயைத் திறந்தால் நல்ல விசேஷம்தான் வெளியே வரும்! “கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். சங். 1:2” “அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். சங். 1:3” காரணம், எப்போதும் வேத தியானத்தில் இருக்கும் மனிதனின் மனதில் வசனங்கள்தான் இருக்கும். அதனால் அவன் பேசும்போது அதைச்சார்ந்த வார்த்தைகள்தான் வெளிப்படும். அவைகள் அப்படியே நடக்கும், அதனால் அவன் செழிக்கிறான். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இதே சங். 1:2,3 வசனங்களின் **negative statement** எப்படி இருக்கிறது என்று பார்ப்போமா? "வேதம் வாசிப்பதில் ஆர்வம் காட்டாமல், கண்டகண்ட கதை புத்தகங்களை (கதைவிடும் புத்தகங்கள் – குமுதம், ஆனந்த விகடன் மற்றும் பல) எப்போதும் வாசித்துக்கொண்டிருக்கிற மனிதன் துர்ப்பாக்கியவான்! அவன் தண்ணீரே இல்லாத இடத்தில் வளர்ந்து காய்ந்து, கருகி, இலைகளெல்லாம் உதிர்ந்து போன மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வது ஒன்றும் உருப்படாது!" இப்படிப்பட்டவன் பேசும்போது, வசனம் சாராத கண்ட கண்ட வார்த்தைகளைத்தான் பேசுவான், கதைவிடுவான். கடைசியில் அவன் பேசியவைகள்தான் அவன் வாழ்க்கையில் நடந்து கொண்டிருக்கும். அதில் தேவனுடைய விருப்பத்திற்கேதுவானது எதுவுமே இருக்காது.

உலக மக்களின் கை ஓங்கியிருக்கிறதுதான், என்றாலும் கலங்கத் தேவையில்லை. இந்த நிலை நீடிக்கப் போவதில்லை. சபையில் சுவிசேஷ இரகசியம் கட்டவிழ்க்கப்பட ஆரம்பித்திருக்கிறது. சபை விசுவாசிகளின் நியாயப்பிரமாண மயக்கத்தின் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டு வருகிறது. எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

வெற்றி முரசு கொட்டும் நாள் வந்துவிட்டது, இந்தியாவின் (பூமியின் சகல ஜனங்களின்) எழுப்புதலோ கொழுந்துவிட்டது! எழுப்புதல் என்றால் என்னவென்று தெரியாமலேயே நிறைய பிரசங்கங்கள் செய்யப்பட்டன. பளிச்சென்று இரண்டே வரியில் சொல்கிறோம் கவனியுங்கள். நியாயப்பிரமாணக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து, ஜன்னல் வழியாக கையைவிட்டு கதவை உட்புறமாக தாழ்ப்பாள் போடுங்கள். (இரட்சிப்பின் போதையில் வந்து கொண்டிருக்கும் இளம் விசுவாசிகள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்துவிடாமல் இருக்க). புதிய விசுவாசப் பிரமாணத்தின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து, ஜன்னல் வழியாக கையைவிட்டு கதவை வெளிப்புறமாகத் தாழ்ப்பாள் போடுங்கள். (இளம் விசுவாசிகள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வர வசதியாக).

இந்த நிகழ்வு தொடர்ச்சியாக நடக்க ஆரம்பித்துவிட்டால், அதுதான் எழுப்புதல். சொல்லப்போனால் இந்நிகழ்வு ஆதி அப்போஸ்தலர் காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. பரி. பவுல் இந்த சத்தியத்தைப் போதித்ததினால்தான் எதிர்ப்புகளுக்கு ஆளானார், சிரச்சேதமும் பண்ணப்பட்டார். "... இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷணவார்த்தைகளையும் ஓயாமற் பேசுகிறான்; ... இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக் கேட்டோம் என்றார்கள். அப். 6:13, 14" கவனித்தீர்களா? இதே குற்றச்சாட்டுக்கள் புரிந்து கொள்ளாதவர்களாலே நம் மேலும் உங்கள் மேலும் வரலாம். அதற்கெல்லாம் பயந்தால் நல்ல போராட்டம் என்பது கனவுடனேயே நின்று போகும். விசுவாசத்தையும் கோட்டைவிட வேண்டியதுதான்.

என்றாலும் கி.பி. சரித்திரக் காலத்தில் சபையில் தொடர்ச்சியாக இந்த உபதேசத்தில் தீப்பொறிகள் அங்குமிங்குமாக பற்றவைக்கப்பட்டுக் கொண்டேதான் இருந்தன. சபையெங்கும் நியாயப்பிரமாண உபதேசங்கள் காட்டாற்று வெள்ளம்போல கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்ததால் இவையெல்லாம் அணைந்து போயின. இனிமேல் அவ்விதமாக அணைந்து போகாதபடி பரிசுத்தாவியானவர் நவீன யுக்திகளை, அதற்கேற்ற **Modern technology** ஐ ஆவிக்குரிய ரீதியில் தருவார். "அப்போது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை, கேடுசெய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஏசா. 11:6, 7, 8, 9"

இந்த வசனங்களை வாசிக்கும் போது ஏதேன் தோட்டத்து ஞாபகம் வருகிறதல்லவா? உண்மைதான், ஏதேன் தோட்டச் சூழல் மீண்டும் வரப்போகிறது. ஆனால் அது தானாக உருவாகப் போவதுமில்லை, தேவன் அதைத் திடீரென்று கொண்டு வந்து தந்துவிடப் போவதுமில்லை. இந்த பூமியின் மேல் அதிகாரிகளாக இருக்கும் மனுபுத்திரரின் கையில்தான் இந்த வேலையைச் செய்ய

விட்டிருக்கிறார். அது சாத்தியம்தானா? ஏன் இல்லை? நிச்சயமாகவே சாத்தியம். நீயும் ஆச்சு, உன் பூமியும் ஆச்சு என்று தேவன் நம்மை அம்போ என்று விட்டுவிடவில்லையே!

அழகான பரலோகம் போன்ற பூமியைத் தந்தார். அது சாபத்தால் தன் சௌந்தர்யத்தை இழந்த போது, அதைச் சரிசெய்ய தன் குமாரனையே தந்தார். அதுமட்டுமா பரலோகத்தையே **(empty)** வெறுமையாக்கி அதன் சகல ஐசுவரியங்களையும் இயேசுவுக்குள் வைத்துத் தந்தார். இந்தச் சத்தியத்தை அறிந்து கொள்வதற்கான வெளிச்சமும் தந்தார், பிரகாசமுள்ள மனக்கண்களைத் தந்தார், உணர்வையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தந்தார். அதுமட்டுமா? பெற்றுக் கொள்வதற்கேதுவான விசுவாசத்தை இருதயத்தில் விதையாகப் போட்டு வளர வைத்தார். அந்த விசுவாசத்தின் மூலமாக ஆசீர்வாதங்களை எடுக்க ஏதுவான ஆவியும் ஜீவனுமான வார்த்தைகளை நம் வாயில் தந்தார். ஒரே வாக்கியத்தில் சொல்வதென்றால், அவருடைய சகல தெய்வீகத்தையும் நமக்குள் வைத்துவிட்டார். ஆனால் தேவப் பிள்ளைகளோ ... வெளியே தலைகாட்ட முடியாத அளவிலான வெட்கக்கேடுகளுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

மேலே நமக்காக கொடுக்கப்பட்டிருக்கும் வசதி வாய்ப்புகளை ஏற்றவிதமாகப் பயன்படுத்தினால் பூமியை அதன் ஆரம்ப நிலைக்கு கொண்டு வரலாம். எல்லாம் நம் கையில்தான் இருக்கிறது. எல்லாம் தேவன் பார்த்துக் கொள்வார் என்று சாக்குப் போக்குச் சொல்லி ஓடி தப்பிக்க முடியாது. ஏனென்றால் அவருடைய விரல்களே நாம் தான்! "... நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; ... எபே. 2:10." நம் விருப்பம் இல்லாமல், ஒத்துழைப்பு இல்லாமல் தேவன் நம் எல்லைகளுக்குள் நுழைவதில்லை! நம் தேவன் மகா பெரியவர், சர்வவல்லமையுள்ளவர், அவரால் நுழைய முடியாது என்பதனால் அல்ல, நுழையக்கூடாது என்பதனால்தான்.

ஏன் அவரே பூமியில் இறங்கி, பூமியின் சாபத்தை மாற்றி, சாத்தானைச் சங்கரித்து, எல்லோரையும் பரிசுத்தமாக்கி ஒரே நிமிஷத்தில் பரலோகமாக்கிவிட்டுப் போய்விடலாமே என்று உங்களைப் போலவே நானும் ஒரு காலத்தில் யோசித்ததுண்டுதான். செய்யலாம்தான்... அப்படியானால் அவர் மனுக்குலத்தை படைத்திருக்க வேண்டிய அவசியமில்லையே! 25 வயதாகியும் எந்த வேலைக்கும் போகாமல் பொறுப்பில்லாமல் வீட்டில் உட்கார்ந்து தண்டச்சோறு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் தன் மகனைப் பார்த்து தகப்பனார் அங்கலாய்க்கிறார்: "இந்த வயசான காலத்தில் நான் இவனுக்கு சோறு போட வேண்டியதிருக்கே, இவனை இதற்குத்தானா பெற்றேன்? இந்த பிள்ளையை பெறாமலேயே இருந்திருக்கலாமே!" இப்போது புரிந்திருக்கும். "... நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். எபே. 4:30"

தேவன் மனிதனின் அனுமதியுடன்தான் எதையும் இந்த பூமியில் செய்கிறார் என்பதற்கு வேதத்திலிருந்தே ஒரு நல்ல உதாரணத்தைப் பார்ப்போம். ஆதி. 18:20–33 ல் வரும் சம்பவம் இதை தெளிவாக்குகிறது. சோதோம் கொமோராவின் கொடிய பாவம் விஷக்கிருமியாகப் பூமியில் பரவி ஜனங்களைக் கொல்வதற்குள் அந்த நகரத்தை அழிக்க தேவன் முடிவெடுக்கிறார் ... அடிக்கடி வாசித்து எல்லோரும் தெரிந்து வைத்திருக்கும் சம்பவம்தான் இது. தேவன் இந்த முடிவை எடுத்தாலும் அதை இந்த பூமியில் செய்யுமுன்னதாக மக்களின் பிரதிநிதியாக **(as a leader)** இருக்கும் ஆபிரகாமிடம் காரியத்தை தெரிவித்து, அவனுடைய கருத்தை கேட்டறிகிறார். முதலில் ஆபிரகாம் தேவனுடைய முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறான், பரிந்து பேசுகிறான், ஜனங்களைக் காப்பாற்ற விரும்புகிறான். தேவனும் ஆபிரகாமும் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். அவன் பூமியின் ஜனங்களின் மொத்தப் பிரதிநிதி, ஆளுகையை பெற்றவன் என்பதால் தேவன் பொறுமையாகப் பதில் சொல்கிறார். தேவனுக்கு கோபம் வராதிருப்பதாக என்று அவன்தான் பயந்துபோய் சொல்கிறானே தவிர, ஆரம்பத்தில் இருந்தே தேவன் அவனிடம் கோபப்படவே இல்லை என்பதை இந்த பகுதியை வாசித்தால் புரியும்.

பாவிகளின் பாவத்தினால் அந்த பட்டணத்தில் வசிக்கும் நீதிமான்கள் சாகக்கூடாது என்று ஆபிரகாம் விரும்புகிறான். அது மிகச் சரியான தேவசித்தத்திற்கிசைவான சிந்தனைதான். அதனால்தான் தேவன் அவன் பேச்சுக்கு எதிரிடையாக பேசாமல் பொறுமையாக பதில் அளிக்கிறார். 50 நீதிமான்கள், 45, 40, 30, 20 நீதிமான்கள் என்று சொல்லிக்கொண்டே வந்தவன் 10 நீதிமான்கள் வந்தவுடன் பேச்சை நிறுத்தி விடுகிறான். அவன் முடிவில் எந்த எதிர்ப்பும் **(objection)**

தெரிவிக்கவில்லை என்பதைக் கவனியுங்கள். அவன் எதிர்ப்பு தெரிவிக்காமல் பேச்சை நிறுத்தியபிறகுதான் தேவன் கடந்து போகிறார். ஒரு வேளை அவன் தேசத்தை அழிக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தால் தேவன் நிச்சயம் அழித்திருக்க மாட்டார். ஆனால் உலகத்தின் நிலைமை என்னவாகும்? உலகமுழுவதுமாக கெட்டுப் போயிருக்கும். அதனால்தான் நோயினால் பாதிக்கப்பட்ட உடலுறுப்பை (கர்ப்பப் பையில் கட்டியையும், குடலில் புற்று நோய் கண்ட குடல் பகுதியையும் அகற்றுவதைப் போல) **operation** செய்து அகற்றுவதைப் போல இந்தக் காரியத்தை தேவன் செய்ய வேண்டியதாயிருந்தது.

ஒரு நீதிமானிமித்தம்? என்று கேள்வி கேட்பதற்கு முன்னதாகவே தேவன் நகர்ந்து போய்விட்டதற்கு இதுதான் காரணம். இல்லாவிட்டால் நீதிமானாகிய லோத்தின் நிமித்தமாக பட்டணத்தை அழிக்க முடியாமல் போய்விடுமே. தன்னுடைய சித்தமும் பூமியில் செய்யப்பட வேண்டும், அதே நேரத்தில் அதற்கு மனிதனுடைய மனவிருப்பமும் ஒத்துழைப்பும் வேண்டும். தேவன் மிக ஞானமாக செயல்படுவதைக் கவனியுங்கள்!

தேவன் பாவிக்கு எதிரானவர் அல்ல, பாவத்திற்குத்தான் எதிரானவர். தேவன் பாவிகளை அழிக்கவில்லை, பாவத்தைதான் அழிக்கிறார் என்று பார்க்கிறோம். பாவம் செய்தால் அழிவு என்பது ஒரு நியதி **(Principle)**. அந்த நியதி தன்னிச்சையாகத் தன் வேலையைச் செய்து கொண்டேதான் இருக்கும். நோயாளிக்கு மருத்துவம் பார்க்கும் டாக்டர் நோயாளிக்கு எதிரியல்ல, அவனிடமிருக்கும் நோய்க்குத்தான் எதிரி. ஆனால் அவர் அந்த நோயை நோயாளியின் உடலிலிருந்து அகற்றும் முயற்சியில் நோயாளியின் உடம்பில் பல பிரச்சனைகள் வரத்தான் செய்கின்றன. இதனால் பக்கவிளைவுகள், பலவீனங்கள், சில நேரங்களில் மரணம் கூட வரத்தான் செய்கின்றன. இதே காரியம்தான் பாவிகளின் மேலும் நடக்கிறது. வேதத்தின் பழைய ஏற்பாடு முழுவதிலும் இப்படிப்பட்ட சம்பவங்களை ஏராளமாகப் பார்க்க முடியும். தேவனை மகா கொடூரமானவராக, பயங்கரமானவராக சித்தரித்திருப்பார்கள். உண்மை அதுவல்ல, தேவன் அன்பாகவே இருக்கிறார், அதைத் தவிர வேறு எப்படிப்பட்டவராகவும் அவரால் இருக்கவே முடியாது. நோயாளிக்கு ஆப்பரேஷன் செய்வதற்காக பயங்கரமான கருவிகளுடனும், கூர்மையான ஊசி, பளபளக்கும் கத்திகளுடன் வரும் டாக்டர் கொடூரமானவரா? அந்த பட்டணத்தார்களின் பாவமே அவர்களின் மேல் கந்தகத்தையும், அக்கினியையும் வரவழைத்தது.

தேவன் படைத்ததெல்லாம் நல்லதாகவே இருந்தது. ஏனென்றால் நன்றாக இருந்த பரலோகத்தின் காரியங்களை உபயோகித்துதான் தேவன் சகலத்தையும் (பூமியையும்) உருவாக்கினார். அதனால் எல்லாமே நன்மையானதை, வெளிப்படுத்தும் வண்ணமாகத்தான் படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் மனுக்குலத்தின் பாவத்தை பூமியால் சகிக்க முடியவில்லை, காரணம் நம் பூமி நல்ல பூமி! மனிதன் பாவம் செய்யும்போது தேவனுடைய நல்ல கிரியைகளினால் (பூமியும் அதில் ஒன்று) அவனோடு ஒத்துப் போக முடிவதில்லை, அதனால் எதிர்விளைவுகளை உண்டாக்குகிறது. கந்தகம், அக்கினி விஷயம் கூட மனிதனுடன் ஒத்துப்போக முடியாத இயற்கையின் சீற்றம்தான்!

"லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து எல்லோரையும் அழித்துப் போட்டது. லூக். 17:29" என்று இந்த வசனத்தில் தெளிவாக இருக்கிறது. தேவன் நல்லவர், நன்மை மாத்திரம் செய்கிறவர் என்பதற்கான மாற்றுக் கருத்து வேதத்தில் இல்லவே இல்லை. வேதத்தை எழுதியவர்களின் எழுத்து நடையும், மொழி பெயர்ப்பும், வாசிப்பவர்களின் நுனிப் புல் மேய்ச்சலும், பிரகாசமில்லாத கண்களால் வாசிப்பதாலும் தேவனை தவறாகப் புரிந்து கொண்டவர்கள் கணக்கிலடங்காதவர்களாகிப் போனார்கள். நாம் அந்த கணக்கில் அடங்கிப் போகாதவர்களாக இருக்க எச்சரிக்கையாயிருப்போம்.

நாம் தேவனை எவ்விதத்தில் புரிந்து கொள்கிறோமோ, அவ்விதத்தில்தான் அவர் நமக்கு வெளிப்படுவார். மஞ்சள் கண்ணாடியை மாட்டிக் கொண்டு ஐயோ தீ தீ என்று கத்தாதிருப்போம். சிவப்புக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு ஐயோ இரத்தம் என்று கதறாதிருப்போம். இருக்கவே இருக்கு அழகான பச்சைக் கண்ணாடி, போட்டுத்தான் பாருங்களேன்! "புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபாடுகிறவராகவும் தோன்றுவீர். சங். 18:26".

தேவன் இந்தப் பூமியை நம்மை நம்பி ஒப்படைத்திருக்கிறார். ஆளுகை செய்யும்

அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். நம் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பூமியை நாம்தான் பாதுகாக்க வேண்டும். ஆனால் தனியாக அல்ல, அவருடைய ஆலோசனைகள், உதவிகள், ஞானம், பலத்துடன். இந்தப் பூமியின் சாப **Principle**-ஐ செயலிழக்க வைத்து, ஆசீர்வாத நியதியை **(Principle)** வேலை செய்ய வைக்கத் தேவன் நமக்குத் தந்திருக்கும் காரியங்களில் மிக முக்கியமானது இரண்டு. அவை இயேசுவால் நம் இருதயத்தில் துவக்கப்பட்டிருக்கும் விசுவாசமும், ஆவியும் ஜீவனுமான வார்த்தைகளும்.

நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பூமி போன்ற இந்தப் பெரிய காரியத்தைச் செய்வதற்கு மிக முக்கியமான இன்னொன்று நமக்கும் தேவனுக்கும் இடையிலான தொடர்பாகும். அது மிக நெருக்கமானதாக, 24 மணி நேர தொடர்புடையதாக, **Mutual understanding** உடையதாக இருப்பது அவசியம். மண்ணான மனிதன் காணக்கூடாதவாறு ஆவியாக இருக்கும் தேவனை; கண்டு தொடர்பு கொள்ளும்படி வடிவமைக்கப்பட்டிருப்பது நம் விசுவாசம் மாத்திரம்தான். "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாக இருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். எபி. 11:6" தேவனை அறியாத உலக ஜனங்களுக்கு விசுவாசம் இல்லாத காரணத்தால் அவர்கள் மாம்ச கண்களால் தேவனைப் பார்க்க விரும்புகிறார்கள், ஆனால் அது முடியாத ஒன்று. அவர்களுடைய இந்த அறியாமையை பயன்படுத்திக் கொள்ளும் சாத்தான், கண்களால் காணக்கூடிய விக்கிரகங்களை உருவாக்க வைத்து அவர்கள் முன் நிறுத்தி விடுகிறான்! அதுமட்டுமல்ல அதை நமஸ்கரிக்க வைத்து, அவர்களை ஆளுகை செய்து, அவர்களைக் கொண்டே நாம் தேவனுடைய சித்தத்தை இந்தப் பூமியின் மீது நிலைநிறுத்த முடியாதபடி கெடுத்து வருகிறான். நம் உடன் பிறப்புகளாகிய அவர்களோ அந்தோ பரிதாபம், எடுப்பார் கைப்பிள்ளையாகி அவனுக்காக வேலை செய்கிறார்கள். அந்த பிள்ளைகளை சத்துருவிடமிருந்து பிடுங்குவது தேவ சித்தமாகும்.

## ஏமாளிகளே !:

இனிமேலாவது ஏமாறாமலிருங்கள். சாத்தான் உலகம் முழுவதையும் மோசம் போக்கிவிட்டான். உலகத் தோற்றமுதற்கொண்டு ஆதாமிலிருந்து இந்தக் கால கடைசி வினாடி மனிதன் வரை ஒருவனு(ளு)ம் அவனிடமிருந்து தப்பவில்லை, இயேசுவைத் தவிர! "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் ... வெளி. 12:9" ஏன் இப்படி நடக்கிறது? உலகம் தோன்றிய ஆரம்பக்காலக் கட்டத்திற்குள் மீண்டுமாகப் போனால்தான் புரியும். ஆசீர்வாதமாக தேவனால் உருவாக்கப்பட்ட பூமியில் சாபம் எப்படி இயங்க ஆரம்பித்தது என்பது தெரிந்த ஒன்றுதான். சாத்தானின் வாயின் வார்த்தைகளினால் இந்தச் சாப விதை முளைக்க ஆரம்பித்தது. ஆசீர்வாத பூமியின் சத்தை உறிஞ்சி ஓங்கி வளர்ந்தது. மனிதர்கள் மீண்டும் மீண்டுமாக அதையே அறுவடை செய்து புசித்தார்கள். என்ன செய்வது, பூமியில் இருப்பதைத்தானே புசிக்க முடியும்?

பழைய ஏற்பாட்டின் காலத்தின் சாத்தான் தோற்கடிக்கப்படவில்லை. இயேசு வெளிப்படவில்லை, மக்கள் விசுவாசத்துக்குள் வரவில்லை. அதனால் சாத்தான் அவர்களை ஏமாற்றிக் கொண்டே இருந்தான், அவர்களும் ஏமாந்து கொண்டே இருந்தார்கள். ஆனால் இயேசுவால் சாத்தான் தோற்கடிக்கப்பட்டப் பிறகு, சாபத்துக்கு முடிவு கட்டப்பட்டது. என்றாலும் சிலுவையில் என்ன நடந்தது என்றே தெரியாத தேவப்பிள்ளைகள் தொடர்ந்து சாத்தானால் மோசம் போய்க் கொண்டே இருக்கிறார்கள். அதாவது சாத்தான் ஜனங்களை மூளைச் சலவை (மதிமயக்கம் – **Hypnotism**) செய்து வைத்திருக்கிறான் என்று கூடச் சொல்லலாம். வசனங்கள் – பிரசங்கங்கள் – விசுவாசம் ஆகியவற்றால் மயக்கம் தெளிந்து எழுந்த சிலர் உண்மையைச் சொன்னாலும் விசுவாசிக்க திராணியில்லை. உலகத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் சாப வியாதியின் கிருமிகளைக் கொல்ல மருந்து கண்டுபிடித்திருக்கிறோம் என்று ஒருவன் சொன்னால் அதை நம்புவதற்குச் சக்தியில்லை. சாபத்தால் பாதிக்கப்பட்ட மூளையிலிருந்து பயம், சந்தேகம், குழப்பம்தான் வெளியே வருகிறது. ஏற்றுக் கொள்ளாமல், செழிப்பின் உபதேசம் என்று சாத்தான் சொல்லிக் கொடுத்த தாரக மந்திரத்தை உச்சரித்து, சத்தியத்தைப் போதிப்பவனை சபைக்கு வெளியே தள்ளி விடுகிறார்கள்.

உண்மையில் சாத்தானுக்கு இப்போது எந்த வல்லமையும் கிடையாது, அதை சிலுவையில்

உரிந்துவிட்டார் இயேசு. இப்போது அவன் காலி டப்பா, அவன் ஒன்றுமேயில்லை,

மீண்டும் மீண்டுமாக சலிப்புத் தட்டினாலும் சொல்கிறோம். செழிப்பைத் தவிர உபதேசம் பண்ண வேதத்தில் எதுவும் இல்லை. செழிப்பான பரலோகத்திலிருக்கும் தேவன் ஆதியில் பூமியை செழிப்பாகவே உண்டாக்கினார். ஏதேன் தோட்டத்தில் செழிப்பு பொங்கியது. சாத்தானால், அவன் வார்த்தைகளால் சாபம் உலகத்திற்குள் பிரவேசித்தபோது அந்த செழிப்பு கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து முடிவில் **zero**-வாகிப் போனது. அது **absolute zero**-வாகிவிடாதபடி, சத்தியம் தெரிந்த தேவப்பிள்ளைகள் விழிபிதுங்க, நாக்கு வெளியே தள்ள, தொண்டை கட்ட, மயங்கி விழாத குறையாக கத்திக் கத்தி பிரசங்கம் பண்ணிக் கொண்டிருப்பதால் மட்டுமே காக்கப்பட்டு வருகிறது!

செழிப்பு என்றால் பணம் மட்டுமல்ல, நன்றாக இருப்பது என்று அர்த்தம். அதாவது பரலோகத்தில் தேவன் இருப்பதைப் போல, ஏதேன் தோட்டத்தில் ஆதி. 2ம் அதிகாரம் வரையிலும் ஆதாமும் ஏவாளும் இருந்ததைப் போல இருப்பது என்றுதான் அர்த்தம். உலக வழக்கத்தில் சொன்னால், ஒரு குறைவுமில்லாமல், பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்வது என்று அர்த்தம். வாழ்க வளமுடன், பல்லாண்டு வாழ்க போன்ற வார்த்தைகளெல்லாம் தேவனிடமிருந்து உலக மக்களுக்குள் வந்ததுதான். நன்றாக இருக்கத்தான் உபதேசம் தேவையாயிருக்கிறது. செழிப்பை பிரசங்கிக்கக்கூடாதென்றால் ... அப்போ? தரித்திரத்தை பிரசங்கிக்கவா? கெட்டுப் போவதற்கு யாரும் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லையே? யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே மனிதர்கள் தங்கள் பாவங்களில், வியாதிகளில், தரித்திரத்தில் கெட்டழிந்து நாசமாய்ப் போய்க் கொண்டிருக்கிறார்களே? சாப அரக்கனின் இந்த கோர தாண்டவத்தை நிறுத்தி, மக்களை மீட்டு, அவர்களை நன்றாக வாழ வைக்கத்தான் இந்த செழிப்பான, ஐசுவரியமான, பணம் பற்றின உபதேசங்கள். இதுவெல்லாம் கெட்ட வார்த்தைகள் அல்ல, இவையெல்லாம் தவறான காரியங்கள் என்று வேதம் உபதேசிக்கவும் இல்லை.

விசுவாசிக்காமல் போகிற இருதயங்கள் தானாகவே அவிசுவாசத்தைக் கக்குகிறது. அந்த அவிசுவாசத்தைத் தீவனமாகக் கொண்டு சாபம் ஓங்கி வளர்கிறது புல் போல. சாத்தான் மனிதர்களை அதன் மீது புல் மேயச் செய்கிறான்.

சாத்தான் பாம்பு போல விஷத்தைக் கொத்தி கொத்தி இறக்கிக் கொண்டிருக்கிறான். கிராமப்புறங்களில் விஷப்பாம்பு கண்ணில் பட்டுவிட்டால் அதைக் கொல்வதற்கு அவர்கள் பல யுக்திகளை செய்வதைப் பார்த்திருக்கிறேன். கல்லால் அல்லது கட்டையால் அடிப்பார்கள். துப்பாக்கி வைத்திருப்பவர்கள் யாராவது இருந்தால் சுட்டுவீழ்த்துவார்கள். பாம்பு புற்றின் வாசல் பகுதியில் தீ வைப்பார்கள், வெப்பம் தாங்காமல் பாம்பு வெளியே வரும்போது கொன்றுவிடுவார்கள். அல்லது உள்ளேயே வெந்து செத்துப் போகும். அல்லது பாம்பு பிடிப்பவர்கள் (பாம்பாட்டி) வந்து, பாம்பின் வால் பகுதியை பிடித்து சுற்றி, அதற்கு மயக்கத்தை வரவழைத்து பிடித்துக் கொண்டுப் போவார்கள்.

இயேசு சிலுவையில் சாத்தானை ஜெயித்து சாத்தான் மேல் நமக்கு முழு அதிகாரத்தையும் கொடுத்து விட்டார். அவனை நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், அவனுடைய வல்லமைகளை எப்படி வேண்டுமானாலும் அழிக்கலாம். விஷ முறிவு மருந்து நம் கையில் இருக்கிறது. ஆவியும் ஜீவனுமான வார்த்தைகள்தான் அது. சாத்தானால் மோசம் போக்கப்பட்டு, பொழுது விடிந்த பிறகும் தூங்கிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களே, எழும்புங்கள்! **Action Kings** நாம்தான்! சாபத்தினால் உலர்ந்து போய் எலும்புக்கூடாகக் கிடக்கும் தேவபிள்ளைகளே, உயிரடைவீர்களாக! "எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகாபெரிய சேனையாய் நின்றார்கள். எசே. 37:10"

## ஆதி அன்பை மறந்தாய்!:

"... நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனம்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால்... நீ மனம்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதினிடத்தினின்று நீக்கிவிடுவேன். வெளி. 2:4, 5"

இயேசுவை ஏற்றுக் கொண்டு, பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட நான் மீண்டுமாக சினிமா பார்த்த போது, ஆனந்த விகடன் தொடர்கதை வாசித்தபோது, ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டதாக நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அதுவல்ல, தேவனோடிருந்த என் ஆதி அன்பை வேறெங்கோயோ தொலைத்துவிட்டதாக உணர்ந்தேன். நினைத்துப் பார்த்தேன் ... அந்த ஆதி அன்பை ஆதியாகமம் 3 அதிகாரத்தின் துவக்கத்தில் தொலைத்து விட்டதைக் கண்டுபிடித்தேன்.

ஆவியானவரோடு ஏதேன் தோட்டத்திற்குள் நுழைந்து, நன்மைதீமை அறியத்தக்க மரத்தின் பக்கத்தில் நின்றபடி அங்கே நடந்ததைக் கவனித்தபோதுதான் இது புரிந்தது. தேவனோடு உலாவிக்கொண்டிருந்த ஆதாமும் ஏவாளும் முதல் முதலில் சாத்தானோடு பேச்சுக் கொடுத்தபோதுதான் இந்த விபரீதம் நடந்தது. ஆதி. 3:1 ல் சாத்தான் மனுக்குலத்திற்குள் தன் நச்சு நாக்கினால் பாவ விஷத்தைக் கொத்தி இறக்கும் காட்சியைப் பார்க்கிறோம்.

ஆதியில் ஏதேன் தோட்டத்தில் மனுக்குலம் எதையெல்லாம் இழந்தது என்பதையும், அதை மீட்பது எப்படி என்பதையும் கொஞ்சம் பார்ப்போம். இழந்த காரியங்கள் கணக்கிலடங்காதது, எல்லாவற்றையும் எழுத முடியாததாகையால் ஒரு சில காரியங்களை மட்டும் பார்ப்போம். பூமிக்கு ஒளியைக் கொடுக்கும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைப் படைப்பதற்கு முன்னதாகவே பூமியில் வெளிச்சம் இருந்தது என்பதை ஆதி.1:3ல் பார்க்கிறோம். அது தேவனிடமிருந்து புறப்படும் வெளிச்சம், இக்காலங்களில் அது இல்லை என்பதைப் பார்க்கிறோம். சூரியன் இல்லையென்றால் பூமியின் கதை முடிந்தது என்பதான சூழ்நிலைதான் இப்போது இருக்கிறது.

தேவன் பூமியை உருவாக்கிய ஆரம்பக்கட்டத்தில் ஆகாய விரிவிற்கு மேலாக ஒரு ஜலத்திரை(**Water Canopy**) இருந்ததாகப் பார்க்கிறோம். அதனால் சூரியனின் ஒளி பூமியை நேரடியாக தாக்காமல் அந்த ஜலத்திரையின் வழியாகக் கசிந்தது. இதனால் பூமியின் மேல் ஒரு நல்ல சீதோஷ்ணநிலை இருந்தது. ஒரு வாழைப் பழத்தை மரத்தில் இருந்து பறித்து வைத்து ஒரு மாதம் ஆனாலும் அது அழுகாது. அக்காலக்கட்டத்தில் பூமியில் வியாதியே இருந்ததில்லை இந்த ஜலத்திரை அமைப்பினால்... நிலப்பரப்பு, கடல், வளிமண்டலம், தாவரங்கள், ஜீவராசிகள் எல்லாம் எந்தவிதமாக பாதிப்புமில்லாமல் நன்றாக, செழிப்போடு, சந்தோஷத்தோடு இருந்தன. சூரியனின் கேடிழைக்கும் **X'rays, Ultra violet rays** பூமியைத் தாக்காதபடி ஜலத்திரை தடுத்து வந்தது. ஓசோன் படல விரிசல்களும் இல்லாமலிருந்தது.

தேவன் தான் உருவாக்கின எல்லாவற்றையும் பார்த்து நல்லது என்று கண்டார். பூமியும் அதன் நிறைவும் நல்லதாக இருந்தது. அதில் ஒன்றுகூட கெட்டதாக இருக்கவில்லை. ஆனால் இன்று நாம் காணும் உலகத்தில்? தேவனா இந்த உலகத்தை உண்டாக்கினார் என்று குழம்ப வைக்கிறது. இன்று நாம் கண்களால் காணும் உலகத்தைத்தான் தேவன் உருவாக்கினார் என்று மனிதர்கள் அறியாமையினால் முடிவெடுக்கின்றனர். அதனால்தான் அவர்களுடைய உள்மனம் தேவன் நல்லவர் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள தயங்குகிறது, இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதற்கும் இது தடையாக அமைந்துவிடுகிறது.

தேவன் சிருஷ்டித்த பூமி ஆசீர்வாதமாக இருந்தது, அது நல்லதையே வெளிப்படுத்தியது, சந்தோஷமானவைகளை வெளிப்படுத்தியது. இயற்கை என்று அழைக்கப்படுகிற கடல், நிலம், காற்று, தாவரங்கள், ஜீவஜந்துக்கள் மனிதனை நேசித்தன. உலகத்திற்குள் சாபம் நுழைவதற்கு முன்னதாக எந்த உயிரினமும் கொடூரமானதாக இருக்க வில்லை. டயோனாசார் கூட சாதுவானதாகத்தான் இருந்தன, அவைகளுக்கும் தேவன் புற்பூண்டுகளைத்தான் ஆகாரமாகக் கொடுத்திருந்தார். புலியும் சிங்கமும் புற்களை சாப்பிட்டன, திமிங்கலமும் மனிதனை விழுங்கவில்லை. சாபம் கிரியை நடப்பிக்க ஆரம்பித்தபிறகுதான் அவைகள் மனிதனுக்கு எதிரியாக **(Man eater)** ஆக மாறின.

முட்செடிகள், களைகள், விஷச்செடிகள் என்பவைகள் சாபத்திற்கு முன்னதாக இல்லை. நாம் எவ்வளவு நல்லதாக இருந்த காரியங்களை இழந்திருக்கிறோம் என்பதைக் கவனியுங்கள். தரிசு நிலங்கள், பாலைவனங்கள் அப்போது இல்லை. இயற்கை சீற்றம் இருந்ததில்லை, இயற்கை மனிதனுக்கு உபகாரமாக **(favour)** ஆக இருந்தன. கடல் தன் எல்லையைத் தாண்டாமலிருந்தது, மனிதனுக்கு அடங்கியிருந்தது. இன்றோ, கரையைத் தாண்டிக் குதித்து சுனாமி என்ற அழகான

பெயரை வாங்கிக் கொண்டது.

மனிதன் இன்னும் வராமலிருக்கிற புயலுக்கு முன்கூட்டியே பெயர் சூட்டி, அதன் வருகைக்காகக் காத்திருந்து, அதைக்குறித்து பேசுவதினாலேயே தொடர்ச்சியாக புயல்கள் அமெரிக்காவைத் தாக்குகின்றன. இனிமேலாவது இந்தச் செயலை நிறுத்தினால் புயல் வராது. பூமியின்மீது பாழ்க்கடிப்புகள், துர்ச்சனபிரவாகம் வராது என்று அறிக்கையிடுவோம்.

வாயுமண்டலத்தில் தேவையான ஆக்சிஜன் சமநிலையான அளவில் இருந்தது, ஆனால் இந்நாட்களிலோ கார்பன் – டை – ஆக்சைடின் அளவு அதிகரிக்கிறது. பூமி வெப்பமயமாதலுக்கு **(Global Warming)** ஆட்பட்டது.

ஏதேனில் வியர்வை இருந்ததில்லை, ஆனால் வேலை மாத்திரம் இருந்தது. அதாவது வியர்வையில்லாத வேலை! சாபத்திற்குப் பிறகு மனிதன் வியர்வை சிந்த வேலை செய்து சாப்பிட வேண்டியதாயிற்று. ஏன்? மனிதனுக்கு அனுகூலமாக இருந்த பூமி, தன் மீது கிரியை நடப்பிக்கும் சாபத்தின் வல்லமையினால் தாக்கப்பட்டு மனிதனுடன் ஒத்துழைக்க மறுத்தது, மட்டுமல்ல எதிர்க்கவும் செய்தது. பூமி மனிதனோடு மல்லுக்கட்டியது, சீறியது. இதைத்தான் இந்நாட்களில் இயற்கை சீற்றம், பேரிடர் **(disaster)** என்கிறோம்.

தன்னை எதிர்க்கும் இயற்கையோடு வாழ மனிதனால் முடியவில்லை, அதனால் இயற்கையை எதிர்த்து போராட வேண்டியதாயிருந்தது. இயற்கையை சிதைத்துத்தான் அதன் பலனைப் பெற்று, புசித்து வாழ்க்கை நடத்தவேண்டிய கேவலமான, துர்பாக்கியமான, வெட்கக்கேடான சூழ்நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டான். சாபமான உலகத்தில் வாழ்ந்து முடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை. அதனால் அதற்கிசைவாக மனிதன் தன்னுடைய சுபாவத்தை மாற்ற வேண்டியதானது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் அடைந்துள்ள நாகரீக வளர்ச்சி, விஞ்ஞான முன்னேற்றம், அறிவுசார்ந்த பலவிஷயங்களில் மனிதனின் பிரம்மிக்கத்தக்க வளர்ச்சி எல்லாம் ஒரு பக்கத்தில் பராட்டப்படுவதற்கும், பெருமைபடுவதற்கும் ஏதுவாக இருந்தாலும், இன்னொரு பக்கத்தில் ... ? கொஞ்சம் ஆழமாக யோசித்துப் பார்ப்போமானால் ... இவையெல்லாமல் சாபத்தோடு எதிர்நீச்சல் போட்டு வாழ்வதற்காக மனிதனால் உருவாக்கப்பட்ட முயற்சிகள்தான் என்பதைப் பார்க்க முடிகிறது. என்ன செய்வது, வேறு வழியில்லை. மனிதன் இயற்கையோடு மோதாவிட்டால் இயற்கை அவனை வாழ விடாது.

சாபத்தால் முள்ளும் குருக்கையும் நிலம் முளைப்பித்தது, அதைப் பிடுங்கியபோது நல்ல நாற்றும் சேர்ந்து கையோடு வந்தது. களைக்கொல்லி மருந்து போட்டு களைகளை அழிப்பதினால் நிலம் நச்சுத்தன்மையடைந்து விளைச்சலைக் கெடுத்தது, பஞ்சம் வந்தது, விலைவாசி ஏறியது, மனிதர்கள் ஏழைகளானார்கள், பசியினால் ரோட்டோரமாக செத்து மடிந்தார்கள். மனிதனால் வந்த சாபத்தினால் ஒரு பாவமும் அறியாத ஜீவ ஜந்துக்களும் பாதிக்கப்பட்டன. கடலில் தொழிற்சாலைகளின் கழிவுநீர் கலப்பதினால் கடல் நீர் நச்சுத் தன்மையடைந்தது... திமிங்கலங்கள் செத்து, கரையில் ஒதுங்கியது. மாடுகளுக்கு மேய்ச்சல் இல்லாமல் போனது. மனிதன் உணவுக்காக ஜீவஜந்துக்களை வேட்டையாடி அவற்றை வேதனைக்குள்ளாக்கினான்.

மனிதன் ஆதியில் மனிதனுக்குக் கொடுத்த உணவு மிக அருமையான ஒன்று, அது பழ வர்க்கங்கள். அதை மாத்திரம்தான் புசிக்கச் சொன்னார். சாபத்திற்குப் பிறகுதான் வெளியின் பயிர்வகைகளை புசிப்பாய் என்றார், அதாவது அரிசி, கோதுமை போன்ற காரியங்களை. பயிர்வகைகளை முதலில் தேவன் மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகளுக்காகத்தான் ஏற்பாடு செய்தார். பறவைகளின் உணவை மனிதன் பிடுங்கிக்கொண்டான், தன்னுடைய அருமையான உணவை அவைகளுக்கு விட்டுக் கொடுத்தான். கடைசியில் பறவைகள் அருமையாக மரத்தில் உட்கார்ந்து பழங்களைப் பறித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்க மனிதனின் கையிலோ ரேஷன் கார்டுகள்! கடைசியில் பார்த்தால் ஊரெல்லாம் நெல் வயல்கள், கோதுமைக் கதிர்கள், சோளக்கொல்லை பொம்மைகள் ... ! ஊடாக ஒரேயொரு கொய்யா மரம் திருதிருவென்று முழித்துக் கொண்டு நிற்கிறது, அதிலும் நாலு பழம்தான் பழுத்திருக்கிறது, அதுவும் எட்டவில்லை! கழிக்கம்பு வைத்து இழுத்துப் பறித்துப் பார்த்தால், பாதி பழத்தை அணில் சாப்பிட்டிருந்தது.

மனிதன் ஆதியில் அவனுக்கு கொடுக்கப்பட்ட ஆளுகையை இழந்தான். பூமியைக்

கீழ்ப்படுத்தி ஆண்டு கொள்ளச் சொன்னார் தேவன். மனிதனின் மீறுதலால், சாபத்தால் இன்று பூமி அவனை ஆளுகிறது, ஆட்டிப்படைக்கிறது. விஞ்ஞானிகளை **Global Warming** பயம் திகிலடைய வைத்திருக்கிறது.

மனிதன் ஒய்வை இழந்தான். வேலை வேலை வேலை ... நிறைய வேலை, கொஞ்சம் கூலி. வருகின்ற சம்பளம் வியர்வையைத் துடைத்துப் போட தேவையான டவல் வாங்க போதவில்லை. அவன் (மனிதனின்) நாட்களெல்லாம் அலுப்புள்ளது, அவன் வேலைகள் வருத்தமுள்ளது, இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதலில்லை... மனுஷன் இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல் பூமியிலே செய்யும் வேலைகளைப் பார்க்கவும் ... (பிர. 2:23, 8:16)

ஏதேனின் செழிப்பை இழந்தான், அதாவது பரலோகத்தின் முன் ருசியை இழந்தான், ஒரு குட்டி பரலோகத்தையே இழந்தான். ஏதேன் சாட்சாத் பரலோகம் போலவேதான் இருந்தது, போலவே என்ன பரலோகமாகவே இருந்தது. பரலோகக் காட்சியைப் பார்க்க வேண்டும் என்று நான் ஆசைப்படும்போதெல்லாம் தரிசனத்தையோ, சொப்பனத்தையோ நாடிச் செல்வதில்லை. ஆதியாகமம் 1ஆம், 2ஆம் அதிகாரங்களுக்குள் போய்விடுவேன்!

ஜீவ விருட்சத்தை இழந்தான். அவர் மனுஷனை துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்ய ...கேருபின்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிபட்டயத்தையும் வைத்தார். (ஆதி. 3:24) வார்த்தைகளின் வல்லமையை புரிந்து கொண்டவன் அதைத் திரும்ப பெற்றுக் கொள்ள முடியும். ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; ... நீதி.15:4

பிரசங்கி புத்தகத்தை ஆழ்ந்து வாசித்துப் பார்த்தால் ஒரு உண்மையைப் புரிந்துக் கொள்ளலாம். சூரியனுக்கு கீழே ஞானி தான் பார்த்ததாக எழுதியிருக்கும் ஒரு காரியம் கூட தேவனால் உலகத்தோற்ற ஆரம்பக்கட்டத்தில் உருவாக்கப்படவில்லை. சாபத்தால் கெடுக்கப்பட்டிருந்த உலகத்தைப் பார்த்துத்தான் சாலமோன் எழுதுகிறார். சாப பூமியின் சீழைப் பிதுக்கி, அதற்கு மருந்து போட்டு கட்டி, மருத்துவம் பார்த்து சுகமாக்க இயேசு வெளிப்படும் முன்னதாக எழுதப்பட்டது அந்த வாசகங்கள். அதை வாசித்துவிட்டு உங்களையே ஆறுதல்படுத்தி, தட்டிக்கொடுத்துக் கொள்ளாதீர்கள். புதியப்பிரமாணவாசிகளான நமக்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை.

எதுவுமே மாயையல்ல, நாம் வருத்தம் அனுபவிக்கப் பிறக்கவில்லை, வாழப்பிறந்திருக்கிறோம், செழிக்கப் பிறந்திருக்கிறோம். நம் பிரயாசத்திற்குப் பலன் உண்டு. சாலமோன் ஞானி அந்நாட்களில் உலக ஐசுவரியவான்கள் பட்டியலில் முதலாவதாக இருந்தார். என்றாலும் அவர் புலம்புவதைக் கவனியுங்கள். மனதுக்கு சஞ்சலமாயிருக்கிறது என்கிறார், காரணம் பூமியின் மேல் கிரியை நடப்பித்துக் கொண்டிருந்த சாபம். தேவன் தந்த ஆசீர்வாதத்தில் மகிழ்ச்சியாக வாழ முடியாதபடி சாபம் அவரைத் தடுத்தது.

சாபம் மனிதனின் சுகவாழ்வை சோக வாழ்வாக்கிக் கொண்டிருந்தது. சாபம் அலுப்பை ஏற்படுத்தியது. சாலமோன் தன் வாழ்வின் இறுதிநாட்களில் தேவனை விட்டு வழி விலகி போவதற்கு காரணமாக இருந்ததுகூட இந்த சாபம்தான். சாத்தான் தோற்கடிக்கப்படாத நாட்களில் சாபத்தை எதிர்த்து, எதிர்நீச்சல் போட்டு முன்னேற, ஒரு செப்படிவித்தைக்காரனின் சமார்த்தியம் தேவையாயிருந்தது, என்றாலும் முடியவில்லை. ஆனால் சாத்தான் தோற்கடிக்கப்பட்டிருக்கும் இக்காலக்கட்ட மக்களாகிய நாம்?

... அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். 1 யோ.4:17. அதனால் நாம் சர்வவல்லமையுள்ளவர்கள், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைப்போம், ஒருவராய்ப் பெரிய காரியங்களைச் செய்வோம், நாம் செய்ய நினைத்தது தடைபடாது, சகலத்தையும் அதனதன்காலத்தில் நேர்த்தியாகச் செய்வோம், நம்மால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமிராது, உலகத்தை ஜெயிப்போம் ... நாம் தேவனில்லைதான், ஆனால் தேவனைப் போலவே உருவாக்கப்பட்டவர்கள், அவருடைய ஆற்றலையும் பெற்றிருக்கிறோம்... அதனால் அவரைப் போலவே நம்மால் செயல்பட முடியும்.

இந்த வெளிப்பாட்டை ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்டால் போதும், மீண்டும் ஏதேனுக்குள் நுழைந்துவிடலாம்... ஜீவ விருட்சத்திற்குப் போகும் பாதை உண்டாயிருக்கும்.

ஏதேனில் மனுஷனுக்குத் தேவனுடைய சாயல், ரூபம் இருந்தது. அதாவது பிதா, குமாரன்,

பரிசுத்தாவியானவர் மூன்று பேரின் சாயலும் நமக்கு இருந்தது. நம்முடைய ஆவி பிதாவாகிய தேவனின் சாயலில் இருக்கிறது. அது சாதாரண ஆவியல்ல, பேசும் வார்த்தைகளையுடைய ஆவி! நாம் பேசிப் பேசி வார்த்தையை அனுப்பி தேவனைப் போல இந்த பூமியில் எதை வேண்டுமானாலும் சிருஷ்டிக்க முடியும். தேவன் ஆதியில் தன் வார்த்தையை அனுப்பி சிருஷ்டித்த காரியமெல்லாம் நன்றாக இருந்தது. காரணம் தேவன் பரலோகத்திலிருந்து வார்த்தைகளை எடுத்து நன்மைக்கேதுவாகப் பேசினார். தான் உருவாக்கிய மனிதனும் தன்னைப் போலவே நன்மையானதைப் பேசி இந்தப் பூமியை பரலோகம் போல வைத்துக் கொள்வான் என்று எதிர்பார்த்தார், நம்பினார்... ஆனால் தேவன் தன்மேல் வைத்திருந்த நம்பிக்கையை மனிதன் இழந்தான்.

இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்... லூக்கா 19:10 மனிதன் ஏதேனில் இழந்து போன எல்லாவற்றையும் மீட்பதற்காகவே இயேசு பூமிக்கு வந்தார். சிலுவையில் எல்லாவற்றையும் மீட்டும் கொடுத்துவிட்டார். ஆனால் சிலுவையில் இயேசு என்ன செய்தார் என்ற சத்தியம் தெரியாத தேவஜனங்கள் இயேசுவை மட்டும் சிலுவையை விட்டு இறக்கி எடுத்துக்கொண்டுப் போய்விட்டார்கள், இயேசு போதுமே என்று பாடிக்கொண்டிருக்கிறார்கள்... இயேசு மீட்டுக் கொடுத்த ஆசீர்வாதங்கள் சிலுவையிலேயே இன்னும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இன்னும் சிலர் சிலுவையை மாத்திரம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், சிலுவை நிழலில் அனுதினம் அடியான் சாய்ந்திளைப்பாறிடுவேன் என்று பாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிலுவையை எடுத்தபோது அதில் தொங்கிக்கொண்டிருந்த ஏதேனின் ஆசீர்வாதங்கள் நழுவி கீழே விழுந்து விட்டன... கவனிப்பாரற்று அங்கேயே கிடந்தன! ஆனால் எல்லோருமே என் தேவன் இயேசுவை ஏமாற்றிவிடவில்லை, சிலர் அதை கண்டுபிடித்து எடுத்து வந்தார்கள். எங்களிடம் சொன்னார்கள், நாங்களும் போய்ப் எடுத்துக் கொண்டோம். வாருங்கள், உங்களுக்கும் தருகிறோம்!

நன்றாக இருந்த பூமியை மனிதன் இழந்தான், அதுவாவது பரவாயில்லை, ஒரு கெட்ட பூமியை பதிலுக்குப் பெற்றுக்கொண்டான். தேவனோடு உலாவி, அவரிடமிருந்து வார்த்தையைப் பெற்று பேசிக்கொண்டிருந்தவரை பூமி நன்றாகத்தான் இருந்தது. சாத்தானுடன் உலாவி, அவனுடைய வார்த்தையைப் பெற்று அதைப் பேச ஆரம்பித்தவுடனேயே பூமி கெட்டுப்போனது. ஆதி. 1, 2 அதிகாரங்களில் நல்ல விதைகளைத் விதைத்துக் கொண்டிருந்த மனிதன், 3ஆம் அதிகாரத்தின் துவக்கத்தில் சில கெட்ட விதைகளைப் பெற்றுக் கொள்வதை பார்க்கிறோம். அதுதான் வார்த்தைகள், சாத்தானின் வார்த்தைகள். அந்த நச்சு வித்துக்களையும், அதன் விளைச்சலையும் சல்லி வேர் கூட இல்லாதபடி வேரறுக்க ஸ்திரீயின் வித்தாக, அந்த நச்சுவித்துக்குப் பகையாளியாக இயேசு வந்தார், நசுக்கியும் விட்டார்... அல்லேலூயா!

இந்தச் சத்தியம் தெரியாத தேவபிள்ளைகள் தலைமுறை தலைமுறையாக மீண்டும் மீண்டுமாக விதைத்தானியத்திற்காக சாத்தானிடமே போகிறார்கள். அவனும் தன் புழுகு மூட்டையை அவிழ்த்து அள்ளி அள்ளி கொடுத்துக் கொண்டே இருக்கிறான். சாத்தானிடம் பேச்சுக் கொடுக்காதீர்கள்!

மனிதன் ஓய்வை இளைப்பாறுதலை இழந்தான். ஆதி.3 அதிகாரம் வரை மனிதனுக்கு வியர்வை இருந்ததில்லை, ஆனால் வேலை இருந்தது. தேவன் வேலையைத் தந்தார், அது ஆசீர்வாதமான காரியம். ஆனால் வியர்வையைத் தேவன் தரவில்லை, அது பூமி சாபத்திற்குள்ளான பிறகுதான் வந்தது, நன்றாகக் கவனியுங்கள் ...

... நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; ... (ஆதி. 3:19)

பாவமில்லாத பரிசுத்த தன்மையை இழந்தான். சாபத்திலிருந்து உதித்த பாவங்கள் மனிதனைத் தீட்டுப்படுத்தியது. உள்ளத்திலிருந்து கண்றாவிகள் வெளிவந்தன! ... இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் ...மத். 15:19,20. இருதயத்தில் உருவாகும் பொல்லாத பாவ சிந்தனைகள் புறப்பட்டு வரும் என்பதாகப் பார்க்கிறோம். எப்படி புறப்பட்டு வரும்? வார்த்தை ரூபத்தில்தான். உதாரணமாக பொய் சாட்சி வார்த்தையால்தான் வருகிறது. அப்படியேதான் எல்லா பாவங்களும். களவு என்று எடுத்துக் கொண்டாலும் முதலில் அதற்காக திருடர்கள்

திட்டமிடுகிறார்கள், எப்படி திட்டமிடுகிறார்கள் என்றால் பேசித்தான் திட்டமிடுகிறார்கள். எந்தப் பாவமானாலும் முதலில் அந்தப் பாவத்தைச் செய்வதற்கான திட்டம் வார்த்தை ரூபத்தில்தான் போடப்படுகிறது, பிறகு தான் அந்த வார்த்தை பாவமாக மாறுகிறது.

இந்தப் பிரச்சனை மாற வேண்டுமானால் இருதயம் வசனத்தால் நிரப்பப்பட வேண்டும். வேதத்திலிருந்து வசனங்களை – ஆசீர்வாத வாக்குத்தத்த வசனங்களை – விசுவாசத்தைக் கட்டக்கூடிய வார்த்தைகளை எடுத்துப் பேச வேண்டும்.

நித்திய ஜீவனை இழந்தான். ஏதேனின் மனிதனுக்கு சாவு என்ற ஒரு காரியம் நியமிக்கப்படவில்லை. அவன் தேவனைப் போலவே சாவில்லாமல், அழிவில்லாமல் நித்தியமாக வாழும் ரீதியிலேயே உருவாக்கப்பட்டான். ஆனால் சாபம் தன்னுடைய கொடூரத்தால் மனிதனில் இருந்த அந்த தன்மையை அழித்தது. தேவனே இதை அனுமதிக்கவும் செய்கிறார். ஏனென்றால் சாபத்தால் வியாதிகள், பாவங்கள், தரித்திரம் பெருகியிருக்கும் இந்த உலகத்தில் மனிதன் இறப்பு என்ற ஒரு நிகழ்வு இல்லாதபடி நிரந்தரமாக வாழ்வானென்றால்? வேண்டாம், அது நினைத்துப் பார்க்க முடியாத பயங்கர நிலைமை. அந்தப் பயங்கர அலங்கோலத்தைத் தடுக்கவே தேவன் ஜீவவிருட்ச பாதையை அடைத்துப் போடுகிறார், நல்ல தேவன், அன்பு தேவன்! அந்த நித்திய ஜீவனை நமக்கு மீட்டுத் தரவே இயேசு வந்தார், சிலுவையில் மீட்டும் தந்தார், பெற்றும் கொண்டோம்!

தனிமை நல்லதல்ல என்று தேவன் துணையை உருவாக்கினார். ஆனால் சாபத்தால் இன்று உலகமெங்கும் தனிமனித வாழ்க்கை முறைகள். குடும்பத்தில் குழப்பங்கள், பெருகி வரும் விவாகரத்து வழக்குகள், அதன் பின்விளைவால் ஏற்படும் தனிமை வாழ்க்கை, அதனால் ஏற்பட்ட விபச்சாரம், காமவிகாரங்கள் – ஓரினசேர்க்கைகள். மனிதன் தன் துணையை இழந்தான், ஒண்டிக்கட்டையானான். பெண்ணோ ... வாழா வெட்டியானாள். இக்காலங்களில் அறியாமையினாலும் இந்தச் சூழ்நிலை சபை வட்டாரத்திலும் நீடிக்கிறது.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கப் பண்பாட்டை இழந்தான். மனிதன் தேவனுடைய வார்த்தைகளைத் தாண்டிக் குதித்தபோது பல ஏவாள்கள் நுழைந்தனர் ஒரு ஆதாமின் எல்லைக்குள்ளாக. பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் நூற்றுக்கணக்கான பெண்களுடன் வாழ்க்கை நடத்தியதை தேவன் எதிர்க்கவில்லை என்பதற்காக அதுவும் அவர் சித்தம்தான் என்று அர்த்தப்படுத்திவிடக்கூடாது. சிலர் பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் அதை அனுமதித்திருந்தார் என்று நினைக்கின்றனர், இல்லை அவர் அதை அனுமதிக்கக்கூட இல்லை. சாபம் சுழன்றாடிக் கொண்டிருக்கும் உலகம் ... அதனுள் சுழன்றாடிக்கொண்டிருக்கும் சாத்தான் ... அவன் கையில் சுழன்றாடிக்கொண்டிருக்கும் பரிதாப மனுக்குலம் ... இந்த சூழ்நிலையில் மனிதனால் இப்படித்தான் இருக்க முடியும் என்பதை தேவன் அறிந்திருந்தார். அதனால் கண்டும் காணாதவர் போலிருந்தார், அவ்வளவுதான்! புதிய உடன்படிக்கையின் காலத்தில் இயேசு, ஒருவனுக்கு ஒருத்தி என்ற அதே முறைமையை மீண்டும் கொண்டு வந்துவிட்டார்.

தேவனைப் போல படைக்கப்பட்டிருந்த மனிதன், தேவனைப் போலவே ஆற்றலையும் பெற்றிருந்த மனிதன் அந்த ஆற்றலையும் இழந்தான். மனிதன் தேவனைப் போன்ற வல்லமையுடையவனாய் இருந்தான் என்பதற்கு சில உதாரணங்கள். பூமியின் மீது மிருகங்கள்+பறவைகள்+ஊர்வன+கடலின உயிரினங்கள் = 20,00,000 ஜீவஜந்துக்கள் காணப்படுகின்றன. நோவா வெள்ளத்திலும், அதற்குப்பிறகு இருந்த மோசமான பருவநிலைகளினாலும் அழிந்து போன ஜீவன்களையும் கணக்கில் சேர்த்தால் சுமார் 30,00,000 உயிரினங்கள் ஆதியில் ஏதேனில் இருந்திருக்கலாம்... அவைகள் எல்லாவற்றிற்கும் ஆதாம் பெயரிடுகிறான். அவனுடைய ஞானம், ஆற்றல், ஞாபக சக்தியை சற்றுக் கவனியுங்கள். அவனுக்குள் தேவனுடைய ஞானம், தெய்வத்துவம், ஆற்றல் இல்லாமல் இதை அவன் நிச்சயம் செய்திருக்க முடியாது. ஆனால் இன்றோ மனிதனின் ஞாபக சக்தி பறிபோனதால் நவீன யுக மனிதன் கம்ப்யூட்டரைக் கண்டுபிடிக்க வேண்டிய பரிதாபம். மனிதன் தேவன் தனக்குத் தந்திருந்த ஒரு பிரமாண்டமான ஞாபக சக்தி என்ற ஆற்றலை ஒரு **memory card** க்குள் புகுத்திப் பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை இன்று...

உலக நாடுகளுக்கு அதிக தலைவலியை கொடுக்கும் ஒரு பொதுப்படையான பிரச்சனை என்னவென்றால் குப்பைகளை அகற்றுவதுதான். இந்த குப்பைகளில் சமீபத்திய 15 ஆண்டு

காலமாக சேர்ந்து கொண்டது நம்ம கம்ப்யூட்டர்! கம்ப்யூட்டர் குப்பைகள் மனிதனுக்குப் பல சீர்கேடுகளையும், தொற்று நோய்களையும் கொண்டு வருகிறது. இந்தியாவில் வருடத்திற்கு 14 லட்சம் கம்ப்யூட்டர்கள் உபயோகமற்றதாகி ஒதுக்கப்படுகின்றன. இதில் 10,50,000 கம்ப்யூட்டர்கள் உடனடியாக குப்பையில் வீசப்படுகின்றன. கலிபோர்னியா நாட்டில் மட்டும் ஒரு நாளைக்கு 6 ஆயிரம் கம்ப்யூட்டர்களை குப்பையில் வீசுகிறார்கள். இந்த மின்னணு குப்பைகளும், கம்ப்யூட்டர்களும் ஐரோப்பிய நாடுகளுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கிறது.

மின்னணு குப்பைகளை மறுசுழற்சி செய்வது பெரும் செலவு பிடிக்கும் சமாச்சாரமாக இருப்பதால் அவர்கள் அவற்றை இந்தியா, பாகிஸ்தான், சீனா, பங்ளாதேஷ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. அவர்களுக்காவது தலைவலி மாத்திரம்தான், இறக்குமதி செய்யும் நாடுகளுக்கோ கூடவே தலைவீக்கமும் சேர்ந்து கொள்கிறது. கம்யூட்டரில் உள்ள சர்க்யூட் ஃபோர்ட், மானிட்டர், கேத்தோடு–ரெட்யூப், பேட்டரி, சுவிட்ச் போர்ட் ஆகியவற்றில் அடர்த்தியான தாமிரம், துத்தநாகம், பெரிலியம் போன்ற பொருட்கள் உள்ளன. கம்ப்யூட்டர் மானிட்டரிலிருந்து காரீய ஆக்ஸைடு வெளிப்படுகிறது. சுவிட்சில் இருந்து பாதரசம் வெளிப்படுகிறது. இதனால் கதிர்வீச்சு ஏற்படுகிறது. பேட்டரிகளிலிருந்து பாலிகுளோரினேட், பைபீனல் புரோமினேட் ஆகியவை வெளியாகின்றன. இவைகள் சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் என்பதால் விஞ்ஞானிகள் பெருங்குழப்பத்தில் இருக்கிறார்கள். ஆதியில் கொண்டிருந்த அற்புதமான ஞாபகசக்தியை சாபத்தால் பறிகொடுத்த மூளையே, உன்னால் எவ்வளவு பிரச்சனைகள் பார்! விஞ்ஞானிகளே மனம் பதற வேண்டாம். இந்தப் பிரச்சனைக்குக் கூட சிலுவையில் முடிவு உண்டு. மனம் திரும்புங்கள், சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள், அது உங்களை விடுதலையாக்கும்.

உடைகள், ஆண் பெண் உறவு, கர்ப்பம் தரித்தல், பிள்ளை பெறுதல் ஆகியவை ஆதி.3ம் அதிகாரம் வரையில் இல்லாததினால் அதையெல்லாம் தேவன் ஏற்படுத்தவில்லை, அது தேவசித்தம் இல்லை என்று தவறாக வியாக்கியானம் பண்ணக்கூடாது. மனிதனின் மீறுதலால், தேவன் குறித்த காலநேரத்திற்கு முன்னதாகவே அவைகள் அவசரமாக நடந்தேறியதால் அவைகளின் மீது சாபம் ஒட்டிக் கொண்டது. அவைகள் தேவனின் நியமத்தின்படி நிதானமாக நடந்திருக்குமானால் இக்கால உலகத்தில் காணப்படும் ஆபாசம், இனக்கவர்ச்சி, காதல், கர்ப்பவேதனை, வேசித்தனம், காமவிகாரங்கள், குப்பைத்தொட்டிக் குழந்தைகள் போன்ற பயங்கரங்கள், பரிதாபங்கள் இருந்திருக்காது. சரி, போகட்டும்... வேதனைப் படவேண்டாம், இதையெல்லாம் கூட இயேசு சிலுவையில் மாற்றிவிட்டார். விசுவாசித்தால் அவர் மகிமையை காணலாம்.

தேவனுக்குக் கீழ்ப்படியும் குணத்தை இழந்தான். இன்றளவும் அதே பிரச்சனைகள். பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக்காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; ... கொலோ. 3:20 கவலைப்பட வேண்டாம், நாம் மீண்டும் அந்தச் சுபாவத்தை இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்டோம்.

தேவனோடு சஞ்சரிக்கும் அனுபவம் பறிபோனது. சஞ்சரிப்பது என்பதை இக்கால பாஷையில் சொல்லப்போனால் ஜெபம் என்று அர்த்தம். ஆம் ஜெப அனுபவத்தை இழந்தான். தேவனோடு சேர்ந்து உலாவும் பாக்கியத்தைப் பெற்றிருந்தான். தோளின் மேல் கை போட்டுக் கொண்டு, பேசியபடி செல்லும் நண்பர்களைப் போல தேவனும் மனிதனும் இருந்தனர். தேவன் பேச, மனிதன் பதில் சொல்ல, மனிதன் கேள்வி கேட்க தேவன் பதில் சொல்ல ... பேசிக்கொண்டே ... நேரம் போவதே தெரியாமல் ... ஆனந்த பரவசத்தில் மூழ்கி ... உண்மையில் ஆதியில் தேவன் உருவாக்கிய ஜெப அனுபவம் இவ்விதமாகத்தான் இருந்தது.

சாபத்தால் மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டபோது, ஆதாமே நீ எங்கிருக்கிறாய்? என்ற தேவனின் வேதனைக் குரல்! இருதயமே உடைந்து, அதனுள்ளிருந்து நொறுக்கப்பட்ட வார்த்தைகளாக அவை வெளிவந்தன. சொல்லப்போனால் தேவன் அழுதார் என்று கூடச் சொல்லலாம். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் விழுந்த விரிசல் இயேசுவால் சரிசெய்யப்படும் வரை மனிதனின் ஜெப அனுபவங்கள் சோக அனுபவங்களாகவே இருப்பதைப் பார்க்கிறோம். மணிக்கணக்காக முழங்காலில் நின்று, கண்ணீர் விட்டு கதறி, கெஞ்சி, கூத்தாடி ஜெபிக்க வேண்டிய சூழ்நிலையாகிப் போனது. பச்சைத் தண்ணீர் கூட பல்லில் படாமல், இரட்டுடுத்தி, உபவாசத்தோடு சாம்பலில் கிடந்து கதற வேண்டியதாயிற்று.

இயேசு வந்தார், சிலுவையில் இந்தத் துக்கத்தை சந்தோஷமாக மாற்றினார். மீண்டுமாக ஆதி ஏதேனின் ஜெப அனுபவத்திற்குள் நம்மை அழைத்துச் சென்றார். என்னை விருந்துசாலைக்கு

அழைத்துக்கொண்டுபோனார்; என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே. அவர் இடது கை என் தலையின்கீழ் இருக்கிறது; அவர் வலதுகை என்னை அணைத்துக்கொள்ளுகிறது. உன். 2:4,6. என்றாலும் புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவர்கள் இன்னும் அதே சோக ஜெப அனுபவத்திலேயே காலத்தைத் தள்ளுகிறார்கள். சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார் ... ஏசா. 61:3.

பூமியன் சாபத்தை மாற்றி, எல்லாவற்றையும் சீர்படுத்தி, ஆனந்த தைலத்துடனும், துதியின் உடையுடனும் இயேசு ஆதி ஏதேனுக்குள் நமக்காகக் காத்திருக்கிறார், அவரோடு சஞ்சரிப்போம் வாருங்கள். எப்படி சஞ்சரிப்பது? (அதாவது எப்படி ஜெபிப்பது?) பிதாவாகிய நம் தேவன், தன் ஆவியானவர் மூலமாக நமக்குள் வசிக்கிறார், நாம் அவர் ஆலயமாயிருக்கிறோம். அதனால் நாம் 24 மணிநேரமும் அவருடைய பிரசன்னத்தில்தான் இருக்கிறோம். தனியறைக்குள் சென்று சில நிமிடங்கள் துதித்தால்தான் அவர் பிரசன்னம் இறங்கும் என்றால் ... ? 1 மணி நேரம் ஜெபித்தால்தான் ஆச்சு ... என்றால்? அப்படியென்றால் உங்களுக்குள் தேவன் தங்கியிருக்கிறார் என்பதை நீங்கள் அறியவில்லையா? விசுவாசிக்கவில்லையா?

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? 1 கொரி. 3:16. ... நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி ... 2 கொரி. 6:16

ஜெபம் என்றால் ... பிரச்சனையை அல்ல, பிரச்சனையைப் பார்த்துப் பேசுவது. ஜெபத்தின் **output** ம் ஜெபமாயிருக்க வேண்டும். ஒரு மணி நேரம் ஜெபிப்பேன், கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்ததும் எப்படி வேண்டுமானாலும் இருப்பேன் என்றல்ல. இந்தப் பிரச்சனையைத் தவிர்க்க 24 மணி நேர ஜெப அனுபவம் நமக்கு கை கொடுக்கிறது! 24 மணி நேரமா? அது எப்படி சாத்தியம்? அப்படியானால் வேறு வேலை எதுவும் செய்ய வேண்டியதில்லையா? யார் சொன்னது? 24 மணி நேர ஜெப அனுபவத்தால் நம் வேலை எதுவும் கெடப் போவதில்லை. ஏதேனில் ஆதாமும் ஏவாளும் இந்த அனுபவத்தில்தான் இருந்தார்கள். ஏனோக்கு, நோவா ஆகியோருக்கும் இந்த அனுபவம் இருந்தது. இது புதிய ஏற்பாட்டின், புதிய உடன்படிக்கைக்கு சுதந்தரவாளியானவர்களின் ஜெப அனுபவத்திற்கான முன்னடையாளங்கள். இவர்களின் 24 மணி நேர ஜெப அனுபவம் அவர்களின் வேலையை கெடுத்ததாக நாம் வாசிப்பதில்லையே.

பழைய ஏற்பாட்டின் காலங்களைப் போல் அல்ல, இக்காலங்களில் தேவன் நம் இருதயத்தில் வாசம் செய்கிறார். அதாவது எப்போதும் அவர் நம்முடன்தான் இருக்கிறார். ... உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் ... மத். 38:20... நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அர்கள் தேவனாயிருப்பேன், ..என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. 2 கொரி. 6:16. நமக்கும் தேவனுக்கும் இடையே இடைவெளியே இல்லை என்று ஆகிவிட்டபிறகு, நீர் வேறு நான் வேறல்ல நாம் இருவரும் ஒருவரானோம் என்று ஒரு பக்தன் பாடிவிட்டபிறகு ... இனி 1 மணி நேரம், 2 மணி நேரம் என்ற கணக்கெல்லாம் எதற்கு? எப்போதுமே நாம் அவருடைய பிரசன்னத்தில், அவருடன் நடந்து, உலாவி, ஓடி, களித்துக் கொண்டிருக்கிறோம். அவர் பேச நாம் கேட்க, நாம் பேச அவர் கேட்க, இதுதாங்க ஜெபம்!

அய்யைய்யோ, இது என்ன புதுக் கதையா இருக்கு? முட்டிக்காலை தேய்த்து, அன்னதண்ணீர் இல்லாமல் செத்து, பக்கெட், பக்கெட்டா கண்ணீர் பிடிப்பதுதான் ஜெபம் என்று பயந்து, நடுங்கிக் கொண்டே ஓடுபவர்களிடம் ஒன்று கேட்கிறேன் ... அவர் நம்முடைய தகப்பனார், இது இன்றோ நேற்றோ ஏற்பட்ட உறவல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டது. அப்போதே அவர் நம்மை மனுபுத்திரர் என்றுதான் அழைத்தார். புத்திரர் என்றால் பிள்ளைகள் என்று அர்த்தம். இயேசு பிதாவே என்று சொல்லித்தான் ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் கலா. 4:6. சாப்பிடாமல், நெடுநேரம் முழங்காலில் நின்று, கண்ணீர் விட்டு கதறி, முகங்குப்புற விழுந்து, தூங்காமல் ... இப்படியாக

நம்மையே வேதனைப்படுத்தித்தான் தேவனைத் தேட வேண்டும் என்றால் … அப்படித் தேடினால்தான் அவர் நமக்குத் தென்படுவார், நமக்குச் செவி கொடுப்பார் என்றால் … அவர் நம் பிதாவாக, அப்பாவாக இருப்பதன் அர்த்தமே இல்லையே!

அப்பா என்று கூப்பிட்டவுடன், அந்த வினாடியே என்னம்மா என்று பதில் கொடுப்பவர்தான் அப்பாவாக இருக்க முடியும். உலக நியதியே இப்படி இருக்குமானால் … பரலோக நியதி இன்னும் அதிகமல்லவா? சாப்பிடாமல், நெடுநேரம் முழங்காலில் நின்று, கண்ணீர் விட்டு கதறி, முகம்குப்புற விழுந்து, தூங்காமல் … இப்படியாக நம்மையே வேதனைப் படுத்தி பிறமதஸ்தர்கள் தங்கள் தேவனைத் தேடுகிற அதே முறைமையில்தான் நாமும் தேவனைத் தேட வேண்டுமானால், நாம் ஜீவனுள்ள தேவனை, சத்திய தேவனை ஆராதிப்பதில் அர்த்தம் எதுவுமில்லையே! சிந்திப்போம் … ஆனால் சிந்தனையுடனேயே நிறுத்தி விடாதிருப்போம்.

“ஜெபிக்காதவன் வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை.

ஜெபிக்கிறவன் சரித்திரம் படைக்காமல் இருந்ததும் இல்லை!”

ஜெபமானது அணுசக்தியின் மூலப்பொருளைப் போன்ற சக்தி வாய்ந்தது, அது பட்டணங்களை, தேசங்களை ஏன் பூமியையே அசைக்கும் வல்லமையுள்ளது.

தேவனோடு தேவனைப் போலவே உலாவியபோது இருந்த தைரியத்தை இழந்தான். காரணம் பாவம், தேவ சமூகத்தை விட்டு விலகி ஒளிந்து கொள்ள வைக்கிறது. ஆனால் அந்த தைரியத்தையும் மீட்டுக் கொடுத்தார். … திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியை பெறாமல் … ரோம. 8:15 அதாவது நாம் தைரியமாயிருப்பதற்கு ஏதுவான வல்லமையின் ஆவியானவரை பெற்றிருக்கிறோம், அல்லேலூயா!

ஏற்ற துணையை இழந்தான்… பூமியின் சாபத்தால் மனைவி ஏற்பில்லாத துணையாகிப்போன சோகங்கள் எத்தனையெத்தனையோ குடும்பங்களில்… குடும்பங்கள் தோறும் உட்பூசல்கள், கணவன்–மனைவி சண்டைகள், புரிந்துகொள்ளாத தன்மை, சந்தேகங்கள், கோர்ட், விவாகரத்து, பிரிந்து வாழ்தல், விரக்தியினால் கரை கட்டப்பட்ட கண்ணீரின் ஆறுகள்! இயேசு மாற்றினார் … தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்க வேண்டாம் என்றார். மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று தான் சொன்னார். ஆதியில் அதுதான் தேவ சித்தமாயிருந்தது. ஆனால் உலகத்தில் எத்தனையோ பேர் தனிமை வாழ்வைத் தெரிவு செய்கிறார்களே? அது … சாபக் கடலில் துடுப்பு போடும் அறியாமை படகுகள்! சாப உலகத்தில் எதிர்நீச்சல் போட எளிதாக இருக்க வேண்டும் என்பதற்காக பவுல் தனிமை வாழ்வை ஒரு ஆலோசனையாகத் தருகிறார். தற்கால உலக சூழ்நிலைக்கு அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளலாம், அதற்காக அது தேவனுடைய சித்தம் என்று முத்திரை குத்தக்கூடாது.

தேவன் எத்தனையோ காரியங்களைக் கண்டும் காணாமல் போய்க்கொண்டிருக்கிறார். அதற்காக அவையெல்லாம் தேவ சித்தம் என்று முடிவு செய்துவிடக்கூடாது. சாபம் இயங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பூமியில் வாழும் மனிதனுக்கு அவ்வளவுதான் முடியும், திராணியில்லை, அவன் பரிதாபப்பட்ட ஜென்மம் போலாகிப் போனான் என்பது தேவனுக்குத் தெரியும். தேவனுடைய சாயலில் அட்டகாசமாக நடக்க வேண்டிய மனிதன், அறியாமையினால், சாபச் சூழலால் 6 அடி 50 கிலோ எடையுள்ள ஒரு பயங்கரப்படத்தக்க, அறுவருக்கப்படத்தக்க மரவட்டையைப் போலாகி, பரிதாபமாக ஊர்ந்து திரிகிறான் என்பதே உண்மை. இதையும் தேவன் சிலுவையில் மாற்றிவிட்டார்.

பொன்னையும் விலையுயர்ந்த கற்களையும் இழந்தான். தேவன் நல்லது என்றதை மனிதன் கெட்டது என்கிறான். தங்க நகைகள் அணியக்கூடாது என்ற தவறான உபதேசத்தினால் சபை ஒரு காலக் கட்டத்தில் பெரும் பாதிப்புக்குள்ளானது. ஆனால் இக்காலத்தில் இதுவிஷயமாக விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. … அவ்விடத்திலே பொன் விளையும் அந்த தேசத்தின் பொன் நல்லது. அவ்விடத்திலே பிதோலாகும், கோமேதகக்கல்லும் உண்டு. ஆதி. 1.11,12 **(Gold, Bdellium and Onyx stone)**

ஆதி அன்பை இழந்தான்… தேவ புத்திரர்களாக இருந்தவர்கள், மனுமக்கள், மனுஷர்கள், ஜனங்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இயேசு மீண்டும் நம்மைப் பிள்ளைகளாக்கியிருக்கிறார். இழந்த நித்திய ஜீவனையும், இரட்சிப்பையும் மீட்டுத் தந்தார். மங்கலாகிப் போன பிரகாசமுள்ள

மனக்கண்கள் திரும்பக் கிடைத்திருக்கின்றன... **etc.,** ஒவ்வொரு முறையும் வேதம் வாசிக்கும் போதும் இந்தப் பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபிப்போம்... மங்கலாகி நாளடைவில் குருடாகிப்போன நம் ஆவிக்குரிய கண்கள் பார்வையடையும்படி தேவனும் செய்வார்.

அந்தக் கண்களுடன் ஏதேனுக்குள் சென்று தேடினால், ஆதி மனிதன் கோட்டைவிட்ட காரியங்களைக் கண்டு பிடித்துவிடலாம். விசுவாசத்துடன் தேட ஆரம்பித்தால் கோட்டையைப் பிடிக்கலாம்! வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள். எரே. 6:16. பூமியின் தொடக்க நிலை என்ன? அங்கே என்ன நடந்தது? ஏன் அப்படி நடந்தது? அதனால் என்னவானது? இனி என்ன செய்யலாம்? இதன் முடிவுதான் என்ன? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

உன்னத காரியங்களைக் குறித்து ஆராயும் போது தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் நமக்கு தொலைநோக்கி **(Telescope)** ஆகவும், இப்பூமிக்குரியவைகளை ஆராயும் போது நுண்ணோக்கி **(Microscope)** ஆகவும் வருகிறார். ஆவியானவருடன் ஆவிக்குரிய மண்டலங்களில் கடந்து சென்று ஆராய்ச்சிகள் நடத்த இப்பூமிக்குரிய கூடாரமாகிய நம் மாமிச சரீரத்துடன் முடியாது. அதற்கென்று ஒரு உடல் அமைப்பு தேவைப்படுகிறது. அதற்கேற்றவிதத்தில்தான் நம் உள்ளான மனிதனின் சரீரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அது தேவ சாயலாகவும், மாமிச கண்களால் காணக்கூடாததாயும் இருக்கிறது.

விண்வெளி வீரர்களின் உடையைப் பற்றி இஸ்ரோவின் ஆலோசகர் ஞானகாந்தியிடம் விசாரித்தபோது... இந்த உடையின் விலை மட்டும் 40 கோடி ரூபாய் ஆகும்! பொய்யில்லை ஆதாரத்துடன் குறிப்பிடுகிறேன். பூமிக்குப் பாதுகாப்பாக ஓசோன் மண்டலம் உள்ளது. இது ஒரு தடுப்பு போல சூரியனி**லி**ருந்து வரும் **Ultra Violet** கதிர்வீச்சுக்களை பூமிக்கு வராமல் தடுத்துவிடுகிறது. விண்வெளியில் மனிதர்கள் ஓசோன் மண்டலத்தைத் தாண்டும்போது இந்த கதிர்வீச்சின் ஆபத்தில் இருந்து அவர்களைப் பாதுகாப்பது இந்த உடைதான். இந்த உடை பல்வேறு அடுக்குகளையுடையது, குறிப்பிட்ட வெப்பநிலையில் உடலை வைத்துக் கொள்ள உதவி செய்கிறது.

மேலும் புவியீர்ப்பு இல்லாத விண்வெளியில் நடப்பது, மிதப்பது போன்றவற்றிற்குப் பயிற்சிகள் தரப்பட வேண்டும். மட்டுமல்ல மனரீதியாகவும் அவர்களைத் தயார்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் செய்து முடித்தால்தான் சந்திரனுக்கு அவனை அனுப்ப முடியும். அதுவும் கோடானுகோடி ஜனங்களில் ஒன்றிரண்டு பேருக்குத்தான் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. பணத்தை பணமென்று பாராமல் தண்ணீராக ஊற்ற வேண்டியதாயிருக்கிறது.

விண்வெளி வீரர்கள் உணவுக்குப் பதில் மாத்திரைகளைத்தான் சாப்பிடுகிறார்கள். உடலுக்குத் தேவையான கலோரிகள் அடங்கிய உணவுப்பொருட்கள் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் மாத்திரைகளாக உருமாற்றம் செய்யப்படுகின்றன. விண்வெளியில் நீண்டகாலம் தங்கி ஆராய்ச்சி செய்யும் விண்வெளி வீரர்களுக்கு புற்றுநோய் தாக்கும் அபாயம் இருப்பதாக அமெரிக்கா – வாஷிங்டன் – ஜார்ஜ்டவுன் பல்கலைகழகத்தின் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். சூரியக்கதிர்களால் உருவாக்கப்படும் அதிக சக்திவாய்ந்த துகள்கள் மரபணுவை சேதப்படுத்தும் அழிவு மா**லி**க்யூல்களை உற்பத்தி செய்கின்றன. இந்த துகள்களை எ**லி**யின் உட**லி**ல் செலுத்தி ஆராய்ந்தபோது, அவை வேகமாக வயதாகி வெளுத்துப் போய்விடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பூமியிலுள்ள வாயு மண்டலம் மனிதனை கதிரியக்க ஆபத்தி**லி**ருந்து பாதுகாக்கிறது, ஆனால் விண்வெளியில் அந்த பாதுகாப்பு கிடையாது என்று ஆராய்ச்சியாளர் கமல்தத்தா கூறியுள்ளார்.

ஆனால் பரிசுத்தாவியானவருடனான ஆவிக்குரிய மண்டல பிரவேசம் இந்த பிரச்சனைகளையெல்லாம் கடந்தது. ஒரு நயாபைசா செலவில்லாமல் இலவசமான அபிஷேகம் நம் மேல் ஊற்றப்படுகிறது தேவன் இயேசுவால். அந்த அபிஷேகம் நம்மை சந்திரனுக்கு அல்ல, அதைவிட மேலான... வான மண்டலங்களைக் கடக்க வைக்கிறது, அண்டசராசரத்தை சுற்றி வரச் செய்கிறது. நமக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை... மாறாக, நாம் மெருகேற்றப்படுகிறோம், அழகானவர்களாக மாறுகிறோம். "... கழுகுக்குச் சமானமாய் உன் (நம்) வயது திரும்ப வாலயதுபோலாகிறது (வா**லி**பவயதுபோல) சங். 103:5"

தேவனுடன் இருந்த அந்நியோந்நியத்தை இழந்தான்... இடைவெளி விழுந்தது. "தகப்பன் – மகன்" என்ற உறவு அறுந்தது. "காணக்கூடாத தேவன் – மண்ணான மனிதன்" என்ற வேதனையான சூழ்நிலை வந்தது. சாபத்துக்குள்ளான பூமியில் மனிதன் சாபத்துடன் எதிர்த்துப் போராடியபடியே வாழத் துவங்கினான். பூமியின் ஆரம்பக்கட்டத்தில் வாழ்க்கை அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. காரணம், சாபம் என்ற வியாதி அப்போதுதான் பூமியை பிடித்திருந்தது. வருஷங்கள் ஆக ஆக ... காலங்கள் ஓட ஓட ... அந்த சாப வியாதி கொஞ்சம் கொஞ்சமாக முற்ற ஆரம்பித்தது, சீழ் பிடித்தது. சீழ் பிதுக்கப்பட்டு, மருந்து வைத்து கட்டப்படாததால் புண் அழுகி நாற்றமெடுத்தது, காலையே வெட்டி எடுக்க வேண்டிய சூழ்நிலை. மருத்துவம் முன்னேற்றமடையாத அந்தக் காலங்களில் ஒரு குஷ்டரோகி எவ்விதமாக அழுகி ஒரு மாமிசப்பிண்டமாக மாறி செத்து விழுகிறானோ, அதே சூழ்நிலை பூமிக்கு வந்தது. சாபம் முற்ற, முற்ற பூமியின் மக்கள் படும் வேதனைகளும் அதிகமாகிக் கொண்டே வந்தது. அதிகமாகி வரும் சாபத்தை எதிர்த்து எதிர்நீச்சல் போட மனுஷன் அதற்கேற்றபடி அதிகப்படியான **risk,** பிரயத்தனம் எடுக்க வேண்டியதாயிற்று. அதற்கேற்றவாறு வாழ்க்கையை, நடை உடை பாவனைகளை மாற்ற வேண்டியதாயிற்று.

வளர்ந்து வரும் நாகரீக முன்னேற்றம், நாளுக்கு நாள் பெருகி வரும் அதி வேகமான தொழில் நுட்பங்கள், புதிது புதிதான விஞ்ஞான கண்டுபிடிப்புகள் இவையெல்லாம் பெருமைக்குரியவைகள்தான். என்றாலும் பூமியின் மீது செயல்பட்டு வரும் சாபத்தை எதிர்கொள்வதற்காகத்தான் இவையெல்லாம் கண்டுபிடிக்கப்படுகின்றன என்பதே உண்மை! ஒரு உதாரணம்: ரெப்ரெஜிரேட்டர்கள் **(Refrigerators)** உணவுப் பதார்த்தங்கள் கெட்டுப் போகாம**லி**ருக்க... ஆகாயத்தி**லி**ருந்த ஜலத்திரை நோவா காலத்து வெள்ளத்தில் கிழிந்துவிட்டதாலேயே இந்த அவல நிலை.

தேவ ஞானத்தை இழந்தான்... நாம் தேவனைப் போலவே இருக்கிறபடியால் நம் ஞானம் கூட அவருடையதைப் போலவேதான் இருந்தது. சாத்தானுடைய வஞ்சக வார்த்தையால் மனுக்குலம் வீழ்ச்சியடைந்தபோது செயல்பட ஆரம்பித்த சாபம் மனிதனி**லி**ருந்த தேவனுடைய ஞானத்தின் மேலும் கை வைத்தது. ஞானம் செல்லரிக்க ஆரம்பித்து, தன் ஆற்றலை இழந்து, கடைசியில் மிருகத்தின் ஞானம் போலானது. "ஞானத்தையும், **(wisdom)** காரணகாரியத்தையும் விசாரித்து ஆராய்ந்து அறியவும், **(the reason of things)** மதிகேட்டின் ஆகாமியத்தையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் **(foolishness and madness)** அறியவும் என் மனதைச் செலுத்தினேன். காரியத்தை அறியும்படிக்கு ஒவ்வொன்றாய் விசாரணைபண்ணி, இதோ, இதைக் கண்டுபிடித்தேன் **(counting one by one, to find out the account)** என்று பிரசங்கி சொல்லுகிறான். ...தேவன் மனுஷனைச் செம்மையானவனாக **(upright)** உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத்**(inventions)** தேடிக்கொண்டார்கள்; இதை மாத்திரம் கண்டேன். பிர 7:25, 27, 29" ஏதேனின் மனிதனில் இருந்த தேவஞானத்தை அவன் இழக்காமல் இருந்திருப்பானானால், இன்று அவன் பூமியைத் தனக்குக் கீழ்ப்படுத்தி அதை ஆளுகை செய்து கொண்டிருந்திருப்பான். சாபத்தால் பூமியில் தோன்றிய பாவங்கள், வியாதிகள், தரித்திரக்கோலங்கள் இருந்திருக்காது. ஆனால் மனிதன் தன்னுடைய ஞானத்தைச் சாத்தானுக்குக் காவு கொடுத்ததால் இன்று பூமி மனிதனைத் தனக்குக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்து கொண்டிருக்கிறது. வியாதிகள், பாவங்கள், தரித்திரம் மனிதனை ஆளுகிறது. பாவம்... மனிதனால் அவற்றை மேற்கொள்ள, ஜெயிக்க முடியவில்லை.

அதுமட்டுமல்ல, நானும் சாலமோன் ஞானியைப் போல, கொஞ்சம் ஆழமாக யோசித்து, மனித ஞானத்தை ஆராய்ந்து பார்த்தேன். மனிதனின் ஞானம் சாபத்தால் கெடுக்கப்பட்டது. ஒன்றிரண்டு வருடங்களல்ல, உலக தோற்றமுதல் சுமார் **6500** வருடங்களாக... சாபம் விழுந்து போன இந்த பூமியில் மனிதனின் சரீரம், அதி**லி**ருக்கும் மூளை, அதி**லி**ருக்கும் நினைவுசார்ந்த பகுதிகள் எல்லாம் தாக்கத்துக்குள்ளாகி படாத பாடுபடுகிறது! இத்தனைப் பாடுகளை அனுபவித்து சின்னாபின்னமாகிப் போன இந்த மூளையி**லி**ருந்து உதிக்கும் ஞானத்தைப் பிரயோஜனப்படுத்தியே மனிதன் இந்த அளவுக்கு நாகரீகத்தில், கண்டுபிடிப்புகளில் முன்னேறியிருக்கிறான் பாருங்கள்! அப்படியானால் சாபம் பூமிக்கு வராதிருந்திருக்குமானால்...

பூமியின் மீது கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கும் 1,00,000 சாபத்தீடான மோசமான காரியங்களோடு எதிர்த்துப் போராடி வாழ்வதற்கேதுவான, அதற்கிசைவான லட்சக்கணக்கான

அறிவியல் கண்டுபிடிப்புகளை, சாதனங்களை கண்டு பிடித்து குவித்து வருகிறான். சாபத்தால் பூமி மனிதனோடு ஒத்துழைக்க மறுக்கிறது, சண்டித்தனம் பண்ணுகிறது. விதையை விதைத்தால் அது தன் பலனைப் பூரணமாகத் தருவதில்லை, ஏதோ கொஞ்சம் கிடைக்கிறது. ஆனால் மனிதன் தன் ஞானத்தால் ஏற்ற உரங்களை கண்டுபிடித்து, களையெடுக்கும் இயந்திரங்களை இயக்கி, ஒரு வழியாக பூரண விளைச்சலுக்கு தகுந்ததாக நிலத்தை மாற்றி விடுகிறான். நீங்களும் நானும் அப்படி பண்படுத்தப்பட்ட நிலத்தின் தானியத்தைத்தான் சாப்பிட்டு, உயிர் வாழ்ந்து வருகிறோம்! அப்படியாக உயிர்வாழ்ந்து வரும் ஒருவர் விதைகள் புத்தகங்கள் எழுதுகிறார், இன்னொருவர் அதை வாசிக்கிறார், அல்லேலூயா! சாபத்தோடு எதிர்நீச்சல் போடக் கற்றுக் கொண்ட மனிதனுக்கு வாழ்த்துக்கள். ஆனால் சாபத்தை ஜெயித்த இயேசுவோடு இணைந்து கொண்டால் இந்தப் போராட்டத்திற்கு முடிவு கட்டி விடலாமே!

மனிதனைப் பாடாய்ப்படுத்தும் 1,00,000 வியாதிகளுக்கும் மருத்துவங்கள், மருந்துகள் கண்டுபிடித்து விட்டான்! (தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ). வியாதியினால் மனுக்குலம் அழிந்து போய்விடவில்லை, மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டு நோய்களிலிருந்து விடுதலையடையாமல் இருந்திருப்பேனானால் நான் கூட ஒருவேளை இந்த புத்தகத்தை எழுதுவதற்கு உயிரோடு இருந்திருக்க மாட்டேன். (என் தரிசனச் சங்கிலியின் இணைப்பைப் பெற்ற வேறு யாரோ ஒருவர் இதை கண்டிப்பாக எழுதியிருப்பார்... அது வேறு விஷயம்) என்னைப் போலவே கோடானு கோடி மனிதர்கள் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளால் உயிர்வாழ்ந்து, இந்தப் பூமியில் தங்களுடைய பூமிக்குரிய கூடாரத்தை (உடலை) நிலைநிறுத்தி தேவனுடைய சித்தத்தை செய்து வருகிறார்கள். ஆனால் வியாதியை சிலுவையில் குணமாக்கிய இயேசுவை சார்ந்து கொண்டால், வியாதியில்லாத ஒரு அதிசய பூமியைப் பார்க்க முடியும்.

மனிதனை ஆட்டிப்படைக்கும் 1,00,000 பாவங்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, தப்பிக்க, மனம் திருந்த எத்தனையோ முயற்சிகளை எடுக்கத்தான் செய்கிறான். சுயகட்டுப்பாடு, உணவு கட்டுப்பாடுகள், யோகா, கோடானுகோடியான சிந்தனையாளர்களின் அறிவுசார்ந்த வார்த்தைகள், புத்தகங்கள், சொற்பொழிவுகள், ஆலோசனைகள்... என்று முயற்சிக்கிறான். அதனாலெல்லாம் பிரயோஜனமே இல்லை என்று நாம் வாதிட முடியாது... தேவனை அறியாத ஒரு உலக ஞானவான் பாவத்திலிருந்து மனிதன் விடுதலையாக அறிவுரைகள் சொல்லி ஒரு புத்தகம் எழுதுவதாக வைத்துக் கொள்வோம். அதிலும் தேவ ஞானம் வெளிப்படத்தான் செய்கிறது, ஆனால் தேவன் வெளிப்படுவதில்லை அவ்வளவுதான். எந்த மனிதனாக இருந்தாலும் அவன் தேவனைப் போலத்தான் இருக்கிறான், அவன் தேவனை அறியாதவனாக இருந்தாலும்! அதனால் அவனிடமிருந்தும் தேவனுடைய வல்லமை, ஞானம், ஆற்றல், **and all** வெளிப்படத்தான் செய்யும், அது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அந்தப் புத்தகத்தை வாசிக்கும் ஒரு மனிதன் திருந்த முயற்சிக்கிறான், அதில் ஓரளவுக்கு வெற்றியும் காண்கிறான் என்பது மறுக்க முடியாத உண்மை, ஆனால் முழுவதுமாக அல்ல என்பதும், மிக மிக சொற்பமானதே (.01%) என்பதும் மறுக்க முடியாத உண்மை! அப்படி மனிதன் உலக அறிவுரைகளினால் ஓரளவுக்குத் திருந்தி மனித நேயத்துடன், ஒழுக்கத்துடன் வாழ்வதால்தான் உலகம் மிருகமயமாகாமல் இருக்கிறது! ஆனால் பாவத்தைச் சிலுவையில் ஜெயித்த இயேசுவை அண்டிக்கொண்டால், பாவமில்லாத ஒரு அற்புதமான பரிசுத்த பூமியில் நாமும் உலா வர முடியும்!

அடுத்தபடியாக தரித்திரத்தால் மனிதன் சந்திக்கும் 1,00,000 பிரச்சனைகளிலிருந்து விடுபடவும் மனிதன் தன் சுய அறிவினால் எவ்வளவோ முயற்சிகள் எடுக்கிறான், ஆலோசனைக் கூட்டங்களை நடத்துகிறான்... குறும் படம் –டாகுமென்டரி மூவி (**Documentary**) எடுக்கிறான்... பொருளாதாரம் என்ற ஒரு தனி பாடப்பிரிவே இதற்காக இருக்கிறது. வறுமைக்கோடு, பணவீக்கம், பொருளாதாரத் தாக்கம் ஆகியவற்றை மனிதன் தன் ஞானத்தினால் சமாளிக்க முயற்சித்து ஓரளவுக்கு வெற்றியையும் பெற்று எப்படியோ பூமியை உருட்டித் தள்ளிக்கொண்டு ஓடுகிறான் என்பது மறுக்க முயற்சித்தாலும் மறுக்க முடியாத உண்மை.

மனிதன் தன் பொருளாதாரப் பிரச்சனையைச் சமாளிக்க எத்தனையோ முயற்சிகள் எடுக்கிறான் தன் அறிவினால். கடன் வாங்கி ஓரளவுக்குச் சூழ்நிலையை சமாளிக்கிறான், வங்கிகளிலும், அலுவலகத்திலும் கடன் (**Loan**) வாங்குகிறான்... அரசாங்கத்தின் இலவச உதவிகளைச் சார்ந்து கொள்கிறான்... நண்பர்களின், சொந்தபந்தங்களின் உதவியை நாடுகிறான்.... இதன் மறுபக்கத்தில் தேவனிடமிருந்து வந்த ஞானத்தைத் தவறாக, எதிர்மறையாக

பிரயோஜனப்படுத்துபவர்களும் இருக்கிறார்கள். அவன் கொள்ளையடிக்கிறான், லஞ்சம் வாங்குகிறான், வட்டிக்கு கடன் கொடுக்கிறான், ஏமாற்றி, ஏய்த்து, சுரண்டி, தில்லுமுல்லு செய்து பணம் சம்பாதிக்கிறான். எது எப்படியோ, இதையெல்லாம் செய்து தான் சரியாகவோ, அல்லது தவறாகவோ தன் பணப்பிரச்சனையில் இருந்து விடுபட்டு, தலைநிமிர்ந்து விடுகிறான் என்பது வருத்தத்தோடு நாம் தலையாட்டி ஒத்துக் கொள்கிற உண்மை. ஆனால் முடிவு வரை நிலைத்திருக்க முடியாமல் கேள்விக்குறியோடு, சூனியத்தை பதிலாக்கிக் கொண்டு, கல்லறை வரை போனவர்கள் எத்தனையெத்தனையோ!

ஆனால் சிலுவையில் நம் தரித்திரகோலத்தை, தன் தரித்திரக் கோலத்தால் மாற்றிய இயேசுவை நோக்கிப் பார்த்தால், அவருடைய ஐசுவரியம் நமக்குள் இறங்கி வரும். வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய சர்வவல்லமையுள்ள தேவனின் ஐசுவரியம் லட்சாதிலட்சமாக, கோடானுகோடியாக வரும். அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாய் அளந்து நம் மடியில் போடுவார்கள். நம் பாதை ராஜபாதையாகும், அதில் நெய் பொழியும். தேசத்தின் கொழுமையைச் சாப்பிடுவோம். உலக ஐசுவரியவான்கள் பட்டியலின் முதல் பத்து இடத்தில் இயேசுவை அறிந்த தேவபிள்ளைகளின் பெயர் நிச்சயம் இருக்கும்! அவர்கள் அந்தப் பணத்தை தேவனுடைய பூரண சுவிசேஷத்தின் நற்செய்தியை அறிவிக்கச் செலவழிப்பார்கள். வாரி இறைப்பார்கள், ஏழைகளுக்குக் கொடுப்பார்கள். பெருக விதைப்பார்கள், தேசத்தில் சம்பத்து குறையாது. பிறகென்ன பூமியில் ஏழைகளையே பார்க்க முடியாது. பசி என்றால் என்னவென்றுக் கேட்பார்கள். வெல்வெட்டின் விரிப்பில் நடப்பேன் என்பதான பாடல்கள் நம் வசமாகும்.

தேவனுடைய ஞானம் எவ்வளவு பெரிதென்று பாருங்க! 6500 வருஷமாக சாபம் வல்லமையாக கிரியைகளை நடப்பித்தும் மனுக்குலத்தை அழிக்க முடியவில்லை, மனிதன் வாழ்ந்து பெருகி, பூமியை நிரப்பி வருகிறான். நம்மில் இயங்கும் தேவனுடைய வல்லமை எத்தகையது என்று பாருங்கள்! இந்தக் குறைவான ஞானத்திலேயே மனிதன் சந்திரனுக்குப் போய் வந்துவிட்டான், இன்னும் வேற்று கிரகங்களுக்குச் செல்ல நாள் பார்த்துக் கொண்டிருக்கிறான். அண்டசராசரத்தையே ஆராய்கிறான். எத்தனையோ மில்லியன் ஒளிவருடங்களுக்கு அப்பால் இருக்கிற கிரகங்களையும் அனுமானிக்கிறான். மனிதன் மட்டும் தனக்கு அளிக்கப்பட்டிருந்த தேவனுடைய ஞானத்தை அப்படியே பாதுகாப்பாக வைத்திருந்திருப்பானானால் ...? இந்நேரம் முழு உலகையும் ஆண்டு கொண்டிருந்திருப்பான்... முழு உலகை என்ன? சந்திரனில் குடியேறியிருப்பான், செவ்வாய் கிரகத்திலும் கூடாரம் போட்டிருப்பான், யுகாயுகங்களை கடந்திருப்பான்! **Milky way, Galaxies, Clusters** களுக்குள்ளாக ஆராய்ச்சி கூடங்களை போட்டிருப்பான். தன் ஆளுகையை எல்லா இடங்களிலும் தொடங்கியிருப்பான். பூமியின் மக்கள் திரளால் இப்போது ஏற்பட்டிருக்கும் சுற்றுப்புற சூழல் மாசுபடும் நிலைமை, பூமி சூடாகும் அபாயம், கழிவுகளை அழிக்க முடியாத சூழ்நிலை, நெருக்கடிகள், மூச்சுத் திணறல்கள் இவைகளெல்லாம் இல்லாமல் இருந்திருக்கும்.

அதெப்படி வானங்கள் கர்த்தருடையவைகள்... பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார். சங். 115:16 என்றுதானே வசனம் இருக்கிறது? ஆமாம் அப்படித்தான் இருக்கிறது, இல்லையென்று யார் சொன்னது? வானங்கள் கர்த்தருடையதுதான், ஆனால் அதை நமக்குத் தரமாட்டேனென்று அவர் சொல்லவில்லையே! (லூக். 15:30). அவருக்குள்ளதெல்லாம் நமக்குரியதென்று சொல்லியிருக்கிறார். தன் சொந்தக் குமாரனையே தந்தவர், அவரைவிட வானங்களும், கிரகங்களும் அவருக்குப் பெரிய விஷயமே கிடையாது. பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார் என்றுதானே இருக்கிறது? ஆமாம், அதற்காக வேறு எதுவும் அவனுக்குக் கிடையாது என்று சொல்லவில்லையே! தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? ரோமர் 8:32

பூமியை அவருடைய மனவிருப்பத்தின்படி ஆளுகை செய்து, அதற்குள் சாபம் நுழைய விடாமல் பாதுகாத்து, அதைப் பரலோகமாகவே **maintain** (நிர்வாகம்) செய்திருப்போமானால் நம்மை இன்னும் அநேகத்தின் மேல் அதிகாரியாக வைத்திருப்பார். அதாவது இன்னும் பல பூமிகளை தந்திருக்கலாம்.

"... உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான். மத். 25:21"

கூட்டம் கூட்டமாக நாம் காணும் நட்சத்திரங்கள் சுமார் 6,500 மில்லியன் ஒளியின் ஆண்டுகள் பயணத்திற்கு அப்பால் உள்ளன. ஒளியின் வேகத்தில் பயணம் செய்தால் சந்திரனை அடைய ஒன்றரை செகண்ட் நேரம் தான் ஆகும், சூரியனை அடைய நாலரை வினாடிகள் ஆகும். ஆனால் நம் கண்களுக்குப் புலப்படும் மிகச் சமீபத்திய நட்சத்திரமான **Alpha Centauri** என்ற நட்சத்திரத்தை அடைய ஒளியின் வேகத்தில் நாலரை ஆண்டுகள் பயணம் செய்தாக வேண்டும்! இத்தினியூண்டு, புறக்கணிக்கத்தக்க அளவில் இருக்கும் பூமியில் இருக்கும் மனிதன் இம்மாபெரிய அண்டவெளியை ஆராய்கிறான். பல ஒளியாண்டுகளுக்கு அப்பால் இருக்கும் கிரகங்களைப் பற்றி **Project** தயார் செய்கிறான். ஏறக்குறைய பூமியைப் போலவே இருக்கும் கிரகங்களைக் கண்டுபிடித்து, அதன் விவரங்களை ஆராய்ந்து, பெயரும் வைக்கிறான்.

இவையெல்லாம் சாதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளத்தக்க விஷயங்கள் அல்ல. தேவனுடைய ஞானம் மனிதனுக்குள் இருப்பதால்தான் இவையெல்லாம் சாத்தியமாகின்றன. மனிதன் தேவனைப் போலவே உருவாக்கப்பட்டிருப்பதால், அவனுடைய ஞானமும் அவரைப் போலவே, அவருடையதாக, அவரிடமிருந்து வருவதாயிருக்கிறது. அதனால்தான் அவனால் இத்தனை ஞானத்தை வெளிப்படுத்தி சாதிக்க முடிகிறது. சாபம் விழுந்துபோன இந்த பூமியில் பிறக்கும் சாப மனிதனின் மூளையின் ஆற்றலுக்கு இந்த அளவுக்கு அண்டவெளியை ஆராய்ச்சி செய்யும் சக்தி இருக்குமானால் ... ! இந்த பூமியில் சாபம் விழாமல் ஆசீர்வாதமே கிரியை செய்து கொண்டு இருந்திருக்குமானால் ... ஆசீர்வாதமான மனிதனின் மூளை எத்தகைய ஆற்றலைப் பெற்றிருக்கும் என்பதை கொஞ்சம் **multiple** செய்து பார்த்தால் ... ? கொஞ்சம் யோசியுங்கள்... நிச்சயம் மனிதனின் மூளை தேவனைப் போலவே இயங்கி, அவருடைய ஞானத்தின்படியே அண்டசாராசரத்திற்குள் பாய்ந்தோடி, பல பூமிக்கொத்த கிரகங்களைத் தேடி, தேர்வு செய்து மனிதர்களை அங்கே குடியமர்த்தியிருக்கும் இல்லையா? நிச்சயமாக ... இதில் சந்தேகமே இல்லை! சாபத்தால் மனிதன் இழந்தவைகள் எத்தனை பிரமாண்டமானவைகள் என்பதைச் சற்று யோசித்துப் பார்ப்போம்!

தேவன் இயேசு இந்த ஞானத்தையும் மனிதனுக்கு மீட்டுக் கொடுத்திருக்கிறார். விசுவாசித்தால் போதும், நம் ஞானம் தேவ ஞானத்தைப் போல பாய்ந்து செல்ல ஆரம்பிக்கும். பரிசுத்தாவியானவரின் உதவியுடன் நம்மை நாமே **X'ray** எடுத்துப் பார்க்க வேண்டும், அப்போது நாம் தேவனைப் போலவே இருப்பதைக் கண்டுபிடிக்க முடியும். பரிசுத்தாவியானவர் பிதாவாகிய தேவனிடமிருந்து புறப்பட்டு வருவதால் அவருடைய ஆழங்களை, இரகசியங்களை அறிந்திருக்கிறார். அவற்றைக் கொண்டு வந்து நம் ஆவியில் **display** செய்கிறார். பரிசுத்தாவியானவரை **Channel of God** என்று சொல்லலாம். அதாவது நாம் தேவனிடம் சேர இயேசு வழி, தேவன் நம்மிடம் சேர பரிசுத்தாவியானவர் வழி! மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும். நீதி. 20:27. நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள். செப். 2:2. வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; ... யோவா. 5:39. அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், ... நற்குணசாலிகளாயிருந்தார்கள். அப். 1 7:11. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். 1 கொரி. 2:10.

## முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்...

சாபம், வியாதி, பாவம், தரித்திரம் வேறெந்தப் பாடுகளும் தேவனுடைய சித்தம் இல்லை. அப்படியானால் அப். 14:22 ல் நாம் அநேக உபத்திரவங்களின் வழியாகத்தான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே? சங். 119:71 ல் நான் உபத்திரவப்பட்டது நல்லது, அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன் என்று தாவீது சொல்கிறானே ஏன்? இந்தக் காரியங்களை மறுக்கவும் முடிவதில்லை, ஏனென்றால் நாமும் கூட அநேக உபத்திரவங்களைக் கடந்துதான், நியாயப்பிரமாண சாபத்தைக் கடந்துதான், இந்த விசுவாசப்பிரமாணத்தின் சத்தியத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். அழகான வண்ணத்துப்பூச்சி தன்னுடைய அழகான தோற்றத்தைப் பெற்று வானத்தில் சந்தோஷமாக பறப்பதற்கு

முன்னதாக ஒரு அருவெறுப்பான கம்பளிப்பூச்சியின் தோற்றத்தைக் கடந்துதான் வருகிறது.

நாம் நன்றாக இருப்பதுதானே தேவனுடைய சித்தம்? அப்படியானால் அநேக உபத்திரவங்களை நாம் கடக்க வேண்டியதென்ன? முரண்பாடாகத் தெரிகிறதே? உண்மைதான், முரண்பாடுகள் இதே போல பல வசனங்களில் வெளிப்படத்தான் செய்கிறது. தேவன் ஆதியில், அதாவது பூமியின் தொடக்க நிலையில் மனிதனை அவன் நன்றாக வாழ்ந்து செழித்து சந்தோஷமாக தன்னைப் போல ஆளுகையை நடத்த வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன்தான் படைத்தார். ஆனால் மனிதனுடைய வாழ்க்கை ஏன் தரம்கெட்டு மோசமாகிப் போனது என்பது நாம் ஏற்கெனவே அறிந்த சத்தியம்தான். சாத்தானின் வஞ்சனையால், ஏவாளின் கீழ்ப்படியாமையால், சாபத்தில் விழுந்துபோன இந்த பூமியில் மனிதனால் தேவன் எதிர்பார்த்தபடி வாழ முடியாமல் போனது. அவன் எவ்வளவுதான் மேலெழும்ப முயன்றாலும் சாபம் அவனைக் கீழே இழுத்தது, பின்னே தள்ளியது, அலைக்கழித்தது.

பூமியில் சாபத்தையும், அதனுடைய விளைவுகளையும் தவிர எதையுமே பார்க்க முடியாமல் போனது. தேவனுடைய ஜனங்கள் தேவனுக்குப் பிரியமாக, அவருடைய சித்தப்படி வாழத்தான் செய்தார்கள். என்றாலும் அவர்களின் உபத்திரவம் அவர்களை விட்டு நீங்கவில்லை, அதனுடன் சேர்ந்து கைகோர்த்தபடிதான் நடந்து கொண்டிருந்தார்கள். தன்னைச் சேவிக்காமல், தன்னை நோக்கிப் பார்க்காமல் மனம் போனபடி வாழ்ந்து கொண்டிருக்கும் தேவனை அறியாத ஜனங்களைத் தன்னிடமாகத் திருப்பி, தன்னுடைய ஆளுகைக்குள் வரவழைக்க அவர்களை உந்தி தள்ள வேண்டியதாயிருந்தது. எப்படியாவது இந்த உபத்திரவத்தி**லி**ருந்து விடுதலை பெற வேண்டும் என்ற ஆர்வத்தை அவர்களுக்கு வரவழைத்து, அவர்களை ஊக்கப்படுத்தி, முயற்சிகளை எடுக்க வைத்து, சத்தியத்திற்குள்ளாக அவர்களைச் செலுத்த, துணிவுடன் அவர்களைக் காலெடுத்து வைக்கும்படிச் செய்ய அவர்களுக்குப் பின்னால் இருந்து எதையாவது ஒன்றைப் பிரயோகித்து அவர்களைத் தள்ள வேண்டியதாயிருந்தது **(the act of pushing...)**

பாவத்தில் கர்ப்பம் தரிக்கப்பட்டு, சாப பூமியின் அழுகையோடு வெளிப்பட்டு, ஒவ்வொரு நாளும் வேதனைகள், கண்ணீர், வியாதிகள், தரித்திரம், பலவிதமான உபவத்திரங்களோடு வாழ பழகிவிட்டிருந்த ஒரு மனிதனுக்கு பூரணசுவிசேஷத்தின் இரகசியத்தை வெளிப்படுத்த தேவன் பூமியில் இருப்பதைத்தான் உபயோகிக்க வேண்டியதாயிருந்தது. பூமியின் எந்த உபத்திரவமும் தேவனால் உண்டானவையல்ல, அவை உலகத்தின் சாபத்தால் உருவானது. எந்த மனிதனையும் தேவன் உபத்திரவப்படுத்துவதுமில்லை. பூமியின் சாபத்தை ஆயுதமாக எடுத்து சாத்தான்தான் தன் தூதர்கள் மூலமாக மக்களை உபத்திரவப்படுத்துகிறான். அதனால் தான் பூமியில் வேதனைகள் இருக்கிறது என்று பார்க்கிறோம். அதனால் உபத்திரவங்களின் மூலம்தான் நாம் தேவனுடைய பரிபூரணமான ஆசீர்வாதங்களுக்குள்ளாக கடந்துவர வேண்டியதாயிருக்கிறது. முள் தேவனுடைய விருப்பமில்லை, முள்ளை தேவன் உருவாக்கவுமில்லை. சாபத்தினால்தான் பூமி முள்ளையும், குருக்கையும் முளைப்பிக்கக் காரணமாயிற்று. என்ன செய்வது, முள் குத்தி விட்டது, குத்திய முள்ளை வெளியே எடுக்க இன்னொரு முள்ளைத்தான் உபயோகிக்க வேண்டியதாயிருக்கிறது. காலில் குத்தி வேதனைப்படுத்திக் கொண்டிருக்கும் முள்ளை வெளியே எடுத்து மனிதனின் வேதனையை நீக்கி, அவனை விடுதலையாக்க, சந்தோஷப்படுத்த இன்னொரு முள்தான் தேவையாயிருக்கிறது.

அளவுக்கு அதிகமான வேதனைகள், சோதனைகள் தாக்கும்போதுதான் மனிதனுக்கு தேவனைத் தேட வேண்டும் என்ற உணர்வே வருகிறது. இப்படியாக அவனுடைய வேதனைகள் அவனைத் தேவனை அறிகின்ற அறிவுக்கு நேராக நடத்துகிறது. அதனால் கஷ்டங்கள் தேவனுடைய சித்தமென்று அர்த்தமில்லை. சந்தோஷம் தான் தேவனுடைய சித்தம், ஆனால் சத்தியத்தை அறிந்து விசுவாசிக்காத மனிதனிடம் தேவன் எதிர்பார்க்கிற எதுவுமே இல்லாதிருப்பதனால், இருப்பதை வைத்து அவனை நடத்த வேண்டியதாயிருக்கிறது. இதில் தேவனுடைய ஞானம், அன்பு வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது பூமியின் மீது கிரியை செய்து கொண்டிருந்த சாபத்தி**லி**ருந்தும், நியாயப்பிரமாண சாபத்தி**லி**ருந்தும் நம்மை விடுதலையாக்கி மீட்டுக் கொண்டார். இந்த சத்தியத்தை அறிந்து, அதை விசுவாசித்து ஏற்றுக்கொண்டால், நாம் உபத்திரவங்களின் வழியாக நடக்க வேண்டியதில்லை.

சாத்தான் உங்களை கடத்திக்கொண்டு போய், ஒரு முள் காட்டுக்குள் நிறுத்தி பேச்சுக்

கொடுக்கிறான் என்று வைத்துக் கொள்ளலாம். சாத்தான்: "மனிதனே, நீ ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று விரும்பாதே, அநேக உபத்திரவங்களின் வழியாகத்தான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறதே" என்பான்! (அப். 14:22)

மனிதன்: "நீதிமானுடைய வழி ராஜ பாதை என்றும் எழுதியிருக்கிறதே" என்று சொல்லுங்கள்! (நீதி. 15:19)

எத்தனைமுறை சொல்**லி**க்கொடுத்தாலும் மண்டையில் ஏறாத மாணவனுக்குத்தான் அடிஉதை கொடுத்து பாடம் சொல்**லி**க் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. புத்திசா**லி**யான மாணவனுக்கு தண்டனை தேவையில்லையே? அவன் சொல்வதைப் புரிந்து கொள்கிறான். புத்தியாய் நடந்து வாருங்கள், திருவசனப் பூட்டைத் திறந்து பாருங்கள்! என்றதொரு பழைய பாடல் ...

ஒரு வசனத்தை வாசித்தவுடன் அதன் அர்த்தம் புரிந்துவிடாது. அதன் பூட்டைத் திறந்து பார்த்தால்தான் புரியும். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது என்ற வசனத்தைப் வாசித்ததும் உபத்திரவம்தான் நல்லது என்று நாமும் நினைத்துவிடுகிறோம். பூட்டைத் திறக்காமல் சாவித்துவாரத்தின் வழியாகப் பார்க்க முயற்சித்தால் இவ்வளவுதான் புரியும். இந்தக் கண்ணோட்டத்துடன் வாசிக்காமல் பூட்டைத் திறந்து வேதத்தை வாசிக்கக் கற்றுக் கொண்டோமானால் சுவிசேஷத்தின் பரிபூரண இரகசியத்தை அறிந்து, தேவநோக்கத்தை பூமியில் நிறைவேற்ற முடியும். தேவ நோக்கம் பூமியில் நிறைவேறிவிட்டால் பிறகென்ன, பூமியே பரலோகம்தான், நாமெல்லோரும் ராஜாக்கள்தான்!

நாம் சொல்வதுதான் இந்த பூமியில் நடக்கிறது, அதனால் நாம் ஒவ்வொருவருமே தீர்க்கதிரிசிகள் என்று அறிகிறோம்! வேத வசனத்தில் இருந்து நல்லதை, ஆசீர்வாதமானதை எடுத்து, அதை விசுவாசித்து, அதை இருதயத்தில் விதைத்து, அதன் பலனை எடுத்து வாயில் வைத்து, நாவினால் உச்சரிக்கும் போது அது நடந்து விடுகிறது. காரணகாரியம் புரியாமல், வேதத்தில் இருக்கிற சாபத்தீடான வார்த்தைகளை எடுத்து, அதற்கு மேற்கூறிய அதே **formula** பிரயோஜனப்படுத்தி பேசிவிடும்போது, மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கெட்ட காரியங்கள் நடக்கின்றன.

அதனால் பூமியின் மீது இரண்டு விதமான விதைகள் தொடர்ச்சியாக விழுந்து கொண்டிருக்கிறது என்று பார்க்கிறோம். நான் தேவனை அறியாதிருந்த காலங்களில், அந்நாட்களில் உபயோகத்தில் இருந்த **Tape recorder** ல் சினிமா பாடல்கள் பதிவு செய்யப்பட்ட ஒ**லி** நாடாக்களைப் **(casettes)** போட்டுக் கேட்பது வழக்கம். அந்த பாடல்களின் வார்த்தைகள் விழுந்து முள்ளையும் குறுக்கையும் முளைப்பித்துக் கொண்டிருந்தது. கால ஓட்டத்தில் தேவனால் தொடப்பட்டு இரட்சிக்கப்பட்ட பின்பு அந்த கேசட்டுகளில் தேவனைப் பிரஸ்தாபிக்கும் கிறிஸ்தவப் பாடல்களைப் பதிவு செய்ய ஆரம்பித்தேன். நான் ஒவ்வொரு பாடலாக பதிவு செய்யச் செய்ய அந்த கேசட்டில் முத**லி**ல் பதிவு செய்யப்பட்டிருந்த சினிமா பாடல்கள் ஒவ்வொன்றாக தானாகவே அழிய ஆரம்பித்தன. முடிவில் எல்லா சினிமா பாடல்களும் அழிக்கப்பட்டு, கிறிஸ்துவைப் பற்றின பாடல்கள் அதில் பதிவாகியிருந்தன. அதைப்போட்டு கேட்டுக் கொண்டிருந்தபோது, அதி**லி**ருந்த ஆசீர்வாத வார்த்தைகள் விழுந்து முளைக்க ஆரம்பித்திருந்தது. சினிமா பாடல் கேசட் இருந்தால் கொடு, கேட்டுவிட்டுத் தருகிறேன் என்று கேட்கும் என் தோழி அதற்குப் பிறகு வருவதில்லை. இனிமேல் அவள் கேட்டால் என்னால் கொடுக்கவும் முடியாது, ஏனென்றால் அது கிறிஸ்தவ பாடல் ஒ**லி**நாடாவாக உருமாற்றம் பெற்றிருந்தது.

சாப விதைகள் முளைக்கலாம், என்றாலும் அதைவிட ஆசீர்வாத விதைகள் மிகுந்த மகத்துவம் வல்லமை வாய்ந்தது. தொடர்ச்சியாக வேதத்தில் இருக்கிற ஆசீர்வாத வாக்குத்தத்தங்களை எடுத்து பூமியின் மீது தீர்க்கதரிசனமாக சொல்லிக்கொண்டே இருங்கள். சாபத்தின் மீது ஆசீர்வாதத்தை **overwrite** செய்வோம், நிச்சயமாக பூமியின் சாபம் மாறும், சந்தேகமேயில்லை. ஒருமனப்பாடு இல்லை, அதனால்தான் எழுப்புதல் இல்லை என்பதான அபிப்பிராயங்கள், பிரசங்கங்கள் சபையில் எங்கும் காணப்படுகிறது. நியாயப்பிரமாண

நம்பிக்கையின் அடிப்படையில் ஒருமனப்படுவதால் எந்த நன்மையும் நடக்கப் போவதில்லை. மாறாக பூமியின் மீது சாப விதைகள் அதிக அளவில் விழுந்து கேடுண்டாக்கும் சூழ்நிலையைத்தான் அது உருவாக்கும். புதிய விசுவாசப்பிரமாணத்தின் அடிப்படையில் ஒன்றுபடுவோம்... ஒருமனதோடு தீர்க்கதரிசனம் சொல்லுவோம்... உலர்ந்த எலும்புகள் உயிரடையும்... மகாசேனையாய் எழுந்து நிற்கும்... சாத்தானின் சக்தி வீணாய்ப்போகும். அவனும் இல்லாமல் போவான்... இயேசு நாமமே ஜெயம் ஜெயமே... சாத்தான் சக்தி ஒன்றுமில்லையே... அல்லேலூயா! ஓசன்னா... அல்லேலூயா... அல்லேலூயா ஆமென்!

பூமியில் சாபக்கேடுகள் பெருகி வருவதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று; தேவனை அறியாத உலக ஜனங்களின் புத்திசா**லி**த்தனம்! நான் என்றோ பார்த்த ஒரு தமிழ் திரைப்படத்தில் வரும் ஒரு சில வார்த்தைகளைக் கொஞ்சம் கவனியுங்கள்: "நான் ஒரு தடவ சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி"! அதாவது பூமியின் மீது விழும் மக்களுடைய சாபத்தீடான வார்த்தைகள் பூமியின் மீது கேட்டுக்கேதுவான விளைச்சலைப் பெருக்கி வருகிறது என்பது இதி**லி**ருந்து தெரிகிறது. ஒரு முறை சொல்லப்பட்ட தவறான வார்த்தைகள் **multiple** (பெருக்கம்) செய்யப்படுவதுதான் காரணம். உதாரணமாக கீழ்த்தரமான அர்த்த செறிவுள்ள வார்த்தைகளடங்கிய ஒரு திரைப்படப்பாட**லி**ன் பதிவுகள் ஒரே நேரத்தில் பல்லாயிரம் ரேடியோக்கள், தொலைக்காட்சிகள் மூலம் விதைகளாகி விழுகின்றன. சொல்லப்போனால் லட்சக்கணக்கான முறை பெருக்கம் செய்யப்படுகின்றன. செயற்கைக்கோள்கள் பூமியெங்கும் தூவப்படுவதற்கு வசதிகளை செய்து தருகிறது.

இந்த அகோரமான அமோக விளைச்சலை வேரறுக்க வேண்டுமானால், அதைவிட வீரியமான விதைகளை அதன் மேல் தூவ வேண்டும். அது எப்படிப்பட்ட விதையாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றித்தான் நாம் தியானித்து வருகிறோம். வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஆசீர்வாதமான வாக்குத்தத்த வசனங்களை (ஏதேனின் ஆசீர்வாதங்கள் – ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் – இயேசுவின் சிலுவைப் பாடுகளின் வழியாக கடந்து வருவது) எடுத்து பேசி பூமியெங்கும் ஒ**லி**பரப்ப வேண்டும். நவீன விஞ்ஞான உலக சாதனைகளான செயற்கைக்கோள், தொலைக்காட்சிப் பெட்டிகள், ரேடியோக்கள், கம்யூட்டர் இணைப்புகளைக் கையகப்படுத்த வேண்டும். எந்தவொரு அறிவியல் கண்டுபிடிப்பு வந்தாலும் தேவ ஜனங்களின் ஏமாளித்தனத்தை பயன்படுத்தி சாத்தான் முத**லி**ல் தன் வேலைகளுக்காகக் கையகப்படுத்துவதை மிகத் தந்திரமாக, சுறுசுறுப்பாக செய்து வருகிறான். இனிமேலாவது இனிவரும் காலங்களிலாவது, இனிவரும் புதிய கண்டுபிடிப்புகளையாவது முத**லி**ல் நாம் வசப்படுத்த முயல்வோம். முத**லி**ல் ரேடியோ வந்தவுடன் சினிமா பாடல்கள்தான் பெருமளவில் ஒ**லி**பரப்பாயின. சுமார் 25 ஆண்டுகளுக்குப் பிற்பாடு அங்கொன்றும் இங்கொன்றுமாக காளான் முளைத்ததைப் போல சில கிறிஸ்தவப்பாடல்கள்! இந்த வேகத்தில் போனால் நாம் ஜெயிப்போமா? கேள்வி வரலாம், ஏன் முடியாது? ஜெயித்தவர் (இயேசுகிறிஸ்து) நமக்குள்... தோற்றுப்போனவன் (சாத்தான்) அவர்களுக்குள்!

இரகசியமாக ஒரு ஆலோசனை... காது கொடுத்துக் கேட்டுக் கொள்ளுங்கள். ஒரு வாக்குத்தத்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் ஆசீர்வாதப் பகுதியை உங்கள் பெயரை வைத்து அறிக்கை செய்யுங்கள்... அது தொடர்பாக என்னவெல்லாம் நடக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதையெல்லாம் சொல்லுங்கள். பிறகு இந்த அறிக்கைகளையெல்லாம் ஆயிரத்தால் பெருக்குகிறேன் என்று சொல்லுங்கள். அல்லது லட்சத்தால் பெருக்குகிறேன்... ஆயிரமாக, லட்சமாக பெருகுவதாக என்று அறிக்கையிடுங்கள். எப்படி நம்ப ஐடியா?

"வெற்றிமுரசு கொட்டும் நாள் வந்து விட்டது, இராஜ்ஜியங்களின் எழுப்புதலோ கொழுந்து விட்டது!" (கொழுந்து என்றால் குருத்துப் பகுதி என்று அர்த்தம். இன்னொரு அர்த்தம் நெருப்பு). இரண்டுமே பொருந்தும்.

## குணமாகும் சீர்கேடுகள்...

"தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்; வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான். நீதி. 29:18." வேதத்தில் இருந்து நம்முடைய ஆசீர்வாதத்திற்கான வசனங்களை, மக்களின் நல்வாழ்க்கைக்குத் தேவையான வசனங்களை எடுத்து, வாயில் வைத்து அதைத் தீர்க்கதரிசனமாக சொல்ல வேண்டும். அப்போது அவைகள் நிறைவேறும் என்பதைப் பார்த்து வருகிறோம். அப்படி தீர்க்கதரிசனம் சொல்லப்படாத இடங்களில் சீர்கேடுகள் பெருகும்

என்று வசனத்தில் பார்க்கிறோம். சீர்கேடுகள் என்றால்?

"அவர்கள் சீர்கெட்டுப்போய், அகந்தையாய்க் கொடுமைபேசுகிறார்கள்; இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள். சங். 73:8." அகந்தையான, கொடுமையான, இறுமாப்பான பேச்சுகளைத்தான் என்று புரிந்து கொள்ளலாம். கண்டிப்பாக இப்படிப்பட்டதான பேச்சுகளில் உபயோகிக்கப்படும் வார்த்தைகள் சாபத்தீடானவைகளாகவும், ஆசீர்வாதத்தை அழித்துப் போடும் வல்லமையுள்ளவைகளாகத்தான் இருக்கும். "... சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; ... எரே. 3:12" அதனால் தேவனை அறிந்திருக்கிறோம் என்று சொல்லும் தேவ ஜனங்கள் தங்களின் வாயின் வார்த்தைகளைக் குறித்து அதிக எச்சரிக்கையாயிருக்க வேண்டியது அவசியம். கண்டதையும், வாயில் வந்ததையெல்லாம் பேசவேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறோம். சாயங்கால நேரங்களில் வயதான பாட்டிமார்கள் சிலர் சேர்ந்து ஆங்காங்கே மேஜையில்லாத வட்டமேஜை மகாநாடு நடத்துவதை நாம் பரவலாக பார்த்திருப்போம். ஐந்து நிமிடம் நின்று அவர்கள் பேசும் சங்கதிகளைக் கவனித்தால் ... ஊரை என்ன உலகத்தையே குட்டிச்சுவராக்க இதைப் போல நாலு கும்பல் போதும் என்று நினைப்போம்.

அப்படிப்பட்டவர்களை விட்டு நகர்ந்துவிடு. தேவ பக்திக்கேதுவான முயற்சி எதுவென்றால், நல்ல வார்த்தைகளை, வேதத்தில் உள்ள வார்த்தைகளைப் பேச பழக வேண்டும். "சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு. 1 தீமோத். 4:7." வீண் பேச்சுக்களையும் (அரட்டைகள்) தவிர்க்க வேண்டும். அந்த நேரத்தில் நாம் நம்மிடம் இருக்கிற ஆசீர்வாதத்திற்கேதுவான நல்ல வசனங்களைப் பேசத் தவறி விடுவதால் ஆசீர்வாதங்களை இழக்கிறோம். அதாவது வீண் அரட்டைகளுக்கு நம் நேரம் ப**லி**யாகிவிடுகிறது. "... உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. 1 தீமோத். 6:20." மனிதன் குரங்கி**லி**ருந்து வந்தவன் ... பரிணாம வளர்ச்சி ... அதைத் தொடர்ந்து பூமியின் வயதைப் பற்றிய ஆராய்ச்சிகள் ... 600 கோடி ஆண்டுகள் என்ற யூகங்கள் ... இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களெல்லாம் தங்கள் ஆராய்ச்சியின் முடிவுகளுக்கு நிச்சயமானது, உண்மையானது, முடிவானது என்று பெயர் வைக்காமல் விதி, கொள்கை என்றே பெயர் வைத்தனர். இதைத்தான் பவுல் பொய்யான ஞானமென்றும், விபரீதக் கொள்கைகளென்றும் குறிப்பிடுகிறார்.

இந்த வகையான ஆராய்ச்சிகளின் தொகுப்புகள் வார்த்தைகளின் வடிவாக உலாவுகின்றன. புத்தகங்கள், ஒ**லி** ஒளி இயக்கங்கள் மூலமாக விண்வெளியில் சுற்றி வருகின்றன. இப்படிப்பட்ட விதைதூவல்களின் விளைச்சலையும் வேதம் சீர்கேடுகள் என்று அழைக்கிறது. இந்தச் சீர்கேடுகள் குழந்தை பருவத்தி**லி**ருந்தே கல்வி **(Schools, Colleges)** என்ற முறைமையின் மூலமாக மனிதனுக்குள் ஊடுருவி சல்**லி** வேர் பிடித்து வளர்ந்து விடுகிறது. இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தேவனை அறிய ஆரம்பித்த பிறகு அவனுக்கு உண்மை தெரிந்துவிடுகிறதுதான். என்றாலும் அதுவரையிலும் அவனி**லி**ருக்கும் அந்த தவறான விதையினால், விளைச்ச**லி**னால் உலகத்திற்கு கேடுகள் உண்டாகிக்கொண்டே இருக்கிறது. எப்படியென்றால் மனிதன் தான் எதை கற்றுக்கொண்டானோ, அதையேதான் அடுத்தவருக்கும் சொல்**லி**த்தருகிறான்; இன்னும் அதிகமாக்கி **(extra creation)!** அதனால் இப்படிப்பட்டதான கல்வியறிவுகளும் சீர்கேடுகள்தான்.

"சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்; உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன் என்றார். இதோ, உம்மிடத்தில் வருகிறோம்; நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர். எரே. 3:22." இந்த சீர்கேடு என்ற பிரச்சனை ஒரு வியாதியைப் போல பரவுகிறது. மிகவும் மோசமான வியாதியாக, தொத்து நோயாக, கொள்ளை நோயாக பரவுகிறது. இந்த பயங்கரப்படத்தக்க வியாதியை குணமாக்கவே இயேசு வந்தார். அதற்கான காரியங்களைச் சிலுவையில் செய்து, அதைக்குறித்ததான வெளிப்பாடுகளையும் தந்திருக்கிறார். நம்முடைய வார்த்தைதான் சீர்கேடுகளை குணமாக்கத்தக்க மருந்து. ஆனால் அதை எப்படி உபயோகிக்கிறோம், எங்கே உபயோகிக்கிறோம் என்பதைப் பொறுத்துதான் வியாதி சுகமாகும் வேகமும் இருக்கும். சீக்கிரமாகவே குணமாக வேண்டும் என்பதுதான் எல்லோருடைய விருப்பமும். எல்லாம் நம்மிடம்தான் இருக்கிறது.

## ஆவி – ஆத்துமா – சரீரம்:

ஆவி, ஆத்துமா, சரீரம் **3D** (முப்பரிமாணம் என்று சொல்லமுடியாது, மூன்றில் ஒன்றான

என்று சொல்லலாம்) அமைப்புடையவர்கள் நாம். நம்முடைய ஆவிதான் உண்மையில் மனிதன். நாம் கண்களால் காணுகிற சரீரம் உண்மையில் மனிதனல்ல, அது ஆவியான மனிதன் இந்த பூமியுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு, கூடாரம் என்று கூடச் சொல்லலாம். பூமியானது மண்ணாக இருப்பதால், மண்ணில் காணப்படும் மூலகங்களான நைட்ரஜன், கார்பன், ஆக்சிஜன், கால்சியம், தண்ணீர் இவற்றைக் கொண்டே மனிதனுடைய கூடாரத்தை (உடம்பை) வடிவமைத்திருக்கிறார் நம்முடைய சர்வஞானமுள்ள தேவன்.

நம்முடைய ஆவியை வார்த்தைகளை பேசக்கூடிய ஆவியாக உருவாக்கியிருக்கிறார். காரணம் மனிதன் பேசிப் பேசியே பூமியையும், அதன் நிறைவையும் தேவனுடைய விருப்பத்தின்படி ஆளுகை செய்து, அதைப் பரலோகம் போல **maintain** (நிர்வாகம்) பண்ண வேண்டும் என்பதுதான் தேவனுடைய **Master Plan** ஆக இருந்தது. ஆனால் நடந்தது என்னவென்றுதான் எல்லோருக்கும் தெரியுமே? மனிதன் தேவனுடைய திட்டத்தின்படி பேசிப் பேசியே பூமியை ஆளுகை செய்தான். ஆனால் ஒரு பிரச்சனை, அது என்னவென்றால், தேவ சித்தப்படியான வார்த்தைகளைப் பேசாமல், சாத்தானுடைய வார்த்தைகளை எடுத்துக் கொண்டு ஆதி. 3ஆம் அதிகாரத்திலிருந்து வாழ்க்கையை ஆரம்பித்ததால், பூமியின் மேல் பரலோகத்தின் சாயலுக்குப் பதிலாக நரகத்தின் சாயல் வந்து படிய ஆரம்பித்தது. இப்போது நம் கண் முன் இருக்கும் பூமியைப் பார்க்கும்போது, விஞ்ஞானிகளுக்கு இந்த பூமியை தேவன்தான் உருவாக்கினார் என்ற நம்பிக்கை வரவில்லை. அழுது வழியும் உலகம், பூமியெங்கும் பட்டுத் தெறிக்கும் சாபத்தின் எதிரொலிகள், அபயக்கூக்குரல்கள், நாசமோசங்கள், இன்னும் வார்த்தையே கிடைக்காத அளவிலான காரியங்கள், தேவனே இல்லை என்று முடிவுகட்டவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார்கள். அதனடிப்படையில் ஏற்பட்ட ஆராய்ச்சியின் விளைவுகள் தான் **Evolution Theory** மற்றும் அதனடிப்படையில் தோன்றிய நாத்திகம், அதனால் தோன்றிய இயக்கங்கள், வன்முறைகள், தீவிரவாதங்கள், சமுதாய விரோதச் செயல்கள், குற்றங்கள், குறைபாடுகள். தேவன் இல்லை என்றதான கருத்து, மனிதனின் பாவ விளைச்சலுக்கு உரம் போட்டு, ஊட்டி வளர்த்தன.

உலகத் தோற்றமுதற்கொண்டு, சுமார் 6500 வருஷங்களாக பிறந்த ஒவ்வொரு மனிதனுடைய வாயிலிருந்தும் புறப்பட்டு வந்த வார்த்தைகளின் விதைத்திரளை எண்ண வேண்டுமானால் ... அது இக்கால கம்ப்யூட்டர்களாலும் முடியாத காரியம். அவற்றின் விளைச்சலை அழிக்க வேண்டுமானால், அது இக்கால நியூட்ரான் குண்டுகளால் கூட முடியாத காரியம். தேவனோ நமக்கு தம்முடைய ஆவியானவர் மூலம் இரகசியங்களை இந்த கடைசிக்காலத்தில் அபரிமிதமாக நம் ஆவியில் வெளிப்படுத்தியிருக்கிறார். மட்டுமல்ல, மீண்டும் பூமியை ஏதேனாக்கக்கூடிய சகலவிதமான **(Formula)** சூத்திரங்களையும், ஆலோசனைகளையும், வசனங்களையும், விசுவாசத்தையும் தந்திருக்கிறார். நம்மால் சாதிக்க முடியும், ஏனென்றால் நாம் அவரைப் போலவே இருக்கிறோம், அவர் நம்மை அப்படித்தான் உருவாக்கியிருக்கிறார்.

"நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும், உன் இருதயத்திலும் இருக்கிறது. ரோமர். 10.8." நாம் வேதத்தை வாசிக்கும் போது வசனத்தின் வார்த்தைகள் கண்கள் வழியாக உள்வாங்கப்படுகிறது. அது மூளைப்பகுதிக்குப் போகிறது. ஆனால் இதனால் மாத்திரம் பிரயோஜனமில்லை, வசனத்தை நம் இருதயத்திற்குள் வைத்து பாதுகாப்பதால் எந்தவிதமான பிரயோஜனமுமில்லை. அதை வெளியே கொண்டு வர வேண்டும், அதற்குத்தான் வாய் இருக்கிறது. நான் தேவனை விசுவாசிக்கிறேன், அதனால் எனக்கு நல்லதே நடக்கும் என்று மனதிற்குள் நம்மை சமாதானப்படுத்திக் கொள்வதால் பிரயோஜனம் இல்லை, பேசுகிற விசுவாசமே ஜெயிக்கும்! நாம் ஆவியாகிய மனிதனாக இருந்தாலும், நம்முடைய பேச்சை வெளிப்படுத்த வேண்டுமானால் அது சரீரத்தினால்தான் முடியும் என்று பார்க்கிறோம் (அதாவது சரீரத்திலுள்ள வாயினால், தொண்டையினால், நாக்கினால்) இந்த வேலை எளிதாக நடைபெற வேண்டும் என்பதற்காக தேவன் நம்முடைய மூளை (அதிலிருக்கும் ஆவி, ஆத்துமா), கண், காது, தொண்டை, வாய், நாக்கு எல்லாவற்றையும் அருகருகாமையிலேயே வைத்திருக்கிறார்.

வேதத்தை வாசிக்கும் போது சத்தமாக வாசித்தால் இன்னும் அனுகூலங்கள் அதிகம். கண்ணினால் மாத்திரம் அல்ல, காதினாலும் வார்த்தைகள் மூளைப் பகுதியை சென்றடையும். நாம் அதிகப்படியாக விசுவாசித்து, அதிகப்படியான விசுவாச நல் வார்த்தைகளைப் பேச இது உதவி செய்யும். மூளையறிவின்படி வாசிக்கும் போது வேத வசனங்கள் ஆத்துமாவையும்,

பரிசுத்தாவியானவரின் உதவியுடன் ஆவியில் நிரம்பி வேதம் வாசிக்கும் போது வசனங்கள் நமது ஆவியையும் சென்றடைகிறது.

வெறும் மூளையறிவினாலும் வேதத்தை வாசிக்க முடியும், ஆனால் எதுவும் புரியாது, பாடப்புத்தகத்தை படிப்பதுபோலத்தான் அந்த அனுபவம் இருக்கும். வேண்டுமானால் கொஞ்சம் வசனங்களை மனப்பாடம் செய்து கொள்ளலாம். வசனங்களின் பூட்டைத் திறக்காமல் சாவித்துவாரத்தின் வழியாக உள்ளே பார்க்க முயற்சிக்கலாம், அரைகுறையாக ஏதோ ஒன்றிரண்டு விஷயங்கள் புரிந்தும், புரியாமலும் இருக்கும். பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் பெற்று, பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபித்து, அதையும் பெற்றுக் கொண்டால்தான் வசனம் நம் ஆவியைச் சென்றடையும். பூட்டுகள் உடைக்கப்பட்டு, பரலோகத்திற்குள் உலாவும் அனுபவமும் கிடைக்கும். ஆவியாய் இருக்கிற நம் உள்ளான மனிதன் வசனிக்கும் வார்த்தைகளை இந்தப் பூமியில் எதிரொ**லி**க்கச் செய்ய நம் சரீரம்தான் பயன்படுகிறது.

சரீரம் எவ்வளவு முக்கியம் பாருங்கள்! இனிமேலாவது அற்ப சரீரம், புழு, பூச்சி, சாம்பல், குப்பை என்று நம் உடலைப் பற்றி தரக்குறைவாகப் பேசாதிருப்போம். நம் ஆவியில் பரிசுத்த ஆவியானவர் இருப்பதால், நம்மில் இயேசு வசிப்பதால், பிதாவாகிய தேவன் நம்மில் வாசம் செய்வதால் நம் சரீரம் தேவனுடைய ஆலயமாக ஒப்பீடு செய்யப்பட்டு போற்றப்படுகிறது. அதனால் நம் உடலை தரக்குறைவாக நடத்தாம**லி**ருப்போம். பரிசுத்தமாக, பாவத்தால் தீட்டுப்படாதபடி, அதனால் வியாதிகள் தாக்காதபடி, அதனால் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு செத்து மடியாதபடி பார்த்துக் கொள்வது மிக அவசியம்.

ஆவியான தேவன் இந்த பூமியின் மீது ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானாலும் அது தன்னிச்சையாக அவரால் முடியாது. இது சற்று ஏற்றுக்கொள்ள முடியாதது போலத் தோன்றினாலும் கொஞ்சம் பொறுமையாக வாசியுங்கள், புரிந்து கொள்ளலாம். ஏனென்றால் அவருக்கு மண்ணாலான சரீரம் கிடையாது, நமக்குத்தான் மண் சரீரம் இருக்கிறது. அதனால் தேவன் நம் மூலமாகத்தான் செயல்பட முடியும். நாம்தான் இந்த பூமியின் ஆளுனர்கள், பொறுப்பாளர்கள், கணக்காளர்கள், பாதுகாவலர்கள், தலைவர்கள், இராஜாக்கள், ஆசாரியர்கள், எல்லாம் எல்லாமே! அதனால் தேவனுடைய சித்தம் நிறைவேற நாம் அவருடன் முழு அளவிலான ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டியது அவசியம். அதாவது அவருக்கு வாயாக மாறுவோம், அவரைப் பேச விடுவோம், முந்திரிக்கொட்டை மாதிரி பேசிக்கொண்டேயிருப்பதை நிறுத்துவோம்!

“பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர். மத். 10:2.” இந்தப்பிரகாரம் நாம் நம்முடைய வாயை முழுவதுமாகத் தேவனுக்கே அர்ப்பணம் செய்துவிட்டோமானால், வேலை இலகுவாகிவிடும். தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய மனதிலுள்ளதைதான் பேசுவார். அதனால் பூமியில் தேவனுடைய விருப்பம் பூரணப்பட ஆரம்பிக்கும். சாத்தானின் விளைச்சல்கள் தானாகவே அசைந்து, நகர்ந்து, தகர்ந்து, ஒடிந்து, அழிந்து, ஆவியாகி, இல்லாமல் போய்விடும்! ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படி பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். ரோமர். 8:27.

## அந்நியபாஷை (பரிசுத்தாவியானவருடைய வார்த்தைகள்):

இந்த விஷயத்தில் அந்நியபாஷை ஒரு வரப்பிரசாதம் போல இருக்கிறது. வேதத்தில் அந்நிய பாஷை என்பது ஒரு முக்கியமான **Theme.** அதைப் பற்றி எதுவும் தெரியாமல், எதிர்வாதம் செய்பவர்களின் வார்த்தைகளை இயேசுவின் நாமத்தினால் அழித்துவிடுவோம். நாம் பேச ஆரம்பிப்போம். ஆவிக்குரிய ரீதியில் குழந்தையாக இருப்பவர்கள் சில வார்த்தைகளை மாத்திரமே பேசுவார்கள். ஒன்றிரண்டு வார்த்தைகள் மாத்திரம் திரும்பத் திரும்ப வரும். என்றாலும் பரவாயில்லை, அந்த வார்த்தைகளுக்கும் வல்லமை உண்டு. திரும்பத்திரும்பச் சொல்லும் போது அநேக விதைகள் விழுகின்றன. கிண்டல் பேச்சுகளுக்குப் பயப்பட வேண்டாம். குழந்தைக்குத் தானாகப் பேச்சு வராது, பேசிப் பேசி பழகுகிறது, பிறகு கோர்வையாகப் பேச ஆரம்பிக்கிறது, பெரியவனானதும் மேடையேறி பிரசங்கம் பண்ணவே போய்விடுகிறான். நம் ஆவி மனிதனும் இவ்விதமாகத்தான் பேசுகிறான், பேசிப் பழகுகிறான். “சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்” என்பார்கள், அந்நியபாஷையும் அவ்விதம்தான். நம் ஆவி மனிதனையும் பேச

பழக்குவிப்பது அவசியமாகிறது. பரிசுத்தாவியானவருடைய வார்த்தைகள் அந்நியபாஷையின் மூலமாக இந்த பூமியில் நேரிடையாக விழுவதால் பரலோகத்திலுள்ள காரியங்களின் விளைச்சல் கிடைக்கிறது. தேவனுடைய சித்தம் பரிபூரணமாக பூமியில் நிறைவேறுவதற்கு ஏற்றவாறு பரிசுத்தாவியானவர் ஜெபிப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

## சொல்லாதே!

நாவடக்கம் பற்றி நம் முன்னோர்கள் கண்டிப்பாக நமக்கு போதித்திருப்பார்கள், சிந்தனைக்குக் கொண்டு வாருங்கள். நிதானமாகப் பேசு, அவசரப்பட்டு வார்த்தையை கொட்டிவிட்டாயானால் பிறகு அள்ளியெடுக்க முடியாது என்பார்கள். அது உண்மைதான்... பிறகு பிடுங்க வேண்டியதாயிருக்கும், பிடுங்கினாலும் சல்லிவேர்கள் அறுந்து மணலுக்குள் மாட்டிக் கொள்ளும். பிறகு மண்வெட்டியைத் தேட வேண்டியதாகும். புதைபொருள் ஆராய்ச்சியாளர்களைத் தேடிப்போக வேண்டிய சூழ்நிலை கூட வரலாம்!

"தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே, ... நீதி. 20:22." அப்படிச் சொன்னால் சொன்னபடியே ஆகிவிடும். பதிலுக்கு நாம் தீமை செய்துவிடுவதாக வைத்துக் கொள்வோம். அதனால் விரோதம் அதிகமாகி, இன்னும் அதிகப்படியான தீமையை நாம் எதிர்கொள்ள வேண்டியதாகிவிடும். உன் வார்த்தையின் வல்லமை உன்னையே சூழ்ந்து நெருக்க இடம் கொடாதே. அப்படியானால் என்ன செய்யலாம்? வசனம் என்ன சொல்கிறது என்று கவனிக்க வேண்டும்.

நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு. ரோமர். 12:21. பழிக்குப் பழி வாங்கும்போது தீமை நம்மை ஜெயித்துவிடுகிறது. தீமை என்பது ஒரு சாபத்தீடு. இப்படியே போய்க்கொண்டிருந்தால் நாம் என்றைக்குத்தான் சாபத்திலிருந்து வெளியே வருவது? அதனால் பேசாமல் இருந்துவிடுங்கள், பதிலுக்கு எதிரி வெட்கப்படும் வகையில் ஒரு நன்மை செய்யுங்கள். இப்போது பாருங்கள், தலைமேலிருந்த தீமை பல்டியடித்து நம் காலுக்குக் கீழாகப் பதுங்கிக் கொள்ளும். நமக்கு தீமை செய்தவன் திருந்துவதற்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. இப்படிச் செய்வதன் மூலம் நன்மை ஜெயிக்க வகை செய்கிறோம். இப்படியாக தேவனுடைய சித்தத்தைப் பூமியில் நிறைவேற்றுகிறோம்.

உன் மாம்சத்தை பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே, அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே, தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கையின் கிரியையை அழிப்பானேன்? பிர. 5:6 மனுஷனுக்கு வாய்க்கு வந்ததையெல்லாம் பேச, கண்டதையெல்லாம் தாறுமாறாக, எசகுபிசகாக, ஏறுக்குமாறாகப் பேச யாரும் சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அது தானாகவே அவனுக்குத் தெரிந்திருக்கிறது, ஆதி மனிதன் விழுந்த போது ஏற்பட்ட பூமியின் சாபம் ... அது மனிதனை அப்படியாகப் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறது! ஆனால் நல்லதை, வேதத்தின் வசனங்களை, ஆசீர்வாதங்களைப் பேச அவனுக்கு தானாகத் தெரிவதேயில்லை. அதை யாராவது சொல்லிக் கொடுத்தால்தான் அவனுக்குத் தெரிகிறது. ஏனென்றால், சாபத்தால் மண்மூடப்பட்டுப் போன ஆசீர்வாதத்தை வெளியே கொண்டு வர அவ்வளவு எளிதாக முடிவதில்லை, மூச்சுத் திணறுகிறது. அதற்கு கொஞ்சம் கஷ்டப்பட்டு முயற்சிகள் எடுத்தால்தான் முடிகிறது.

அதைச் சொல்லித்தரத்தான் தேவன் போதகர்களைச் சபையில் வைத்திருக்கிறார். நாம் தேவனை அறிந்து கொள்ளுவதற்கு முன்னதாக, தேவனற்ற உலக மக்களைப் போலிருக்கையில், ஒரு பிரசங்கியார் இரட்சிப்பைக்குறித்து பிரசங்கம் செய்தார், அதைக் கேட்டு விசுவாசித்தபோது இரட்சிக்கப்பட்டோம். இப்போது ஒரு பிரசங்கியார் கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் என்கிறார். தேவ ஜனங்கள் எல்லாகாரியங்களிலும் ஆசீர்வாதிக்கப்பட்டிருக்க வேண்டும், சகல ஐசுவரியங்களையும் பெற்று அனுபவித்து நன்றாக இருக்க வேண்டும், என்று பிரசங்கிக்கிறார். அந்த பிரசங்கத்தைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டவர்கள், இந்த பிரசங்கத்தைக் கேட்டவுடன் ஓட்டம் பிடிக்கிறார்கள். ஓட்டம்பிடிக்கிறார்கள் என்பதைவிட அவர்களை பின்னாலிருந்து ஒரு கூட்டம் ஓட ஓட துரத்தியடிக்கிறது என்பதுதான் உண்மை. சபையில் சத்தியத்தை போதிப்பதில்லை, வெளியில் அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று போனால் மூக்கணாங்கயிறு போடப்படுகிறது. பாவம் என்ன செய்யும் அந்த பரிதாப மாடு! அம்மா என்று

கதறுகிறது!

“சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ரோமர் 1:18.” சத்தியம் வெளியாக்கப்பட்டால்கூட அதை ஜனங்களுக்கு அறிவிக்க மேய்ப்பர்கள், சபை மூப்பர்கள் யோசிக்கிறார்கள். காரணம் இதுவரையில் பிரசங்கிக்கப்பட்டக் காரியங்களை மாற்ற வேண்டியதாயிருக்கும். சிறுபிள்ளைகள் மண்ணினால் வீடுகளைக் கட்டி விளையாடுவார்கள். விளையாடி முடித்ததும் தங்கள் கைகளினால் அவற்றை உடைத்து அழித்துப் போட்டுவிடுவார்கள். இதை அழித்து குழித்து விளையாட்டு என்று கிராமங்களில் சொல்வார்கள். ஆனால் இதைப் போல இந்த பிரசங்க விஷயத்தில் செய்ய முடியாது. ஒரே நாளில் இந்தக் காரியத்தைச் செய்து முடிக்கவும் முடியாது. இதனால் வரும் இலாபநஷ்டங்களைக் கணக்குப் பார்க்கிறார்கள். உண்மையில் தவறான உபதேசங்களை அழித்துப் போட்டால் இலாபந்தானே தவிர நஷ்டமில்லை என்பதை உணராமல் இருக்கிறார்கள்.

இதே பிரச்சனை, இதே சூழ்நிலை எனக்கும் வந்தது. நான் பழைய காரியங்களை (நியாயப்பிரமாணம் சார்ந்த உபதேசங்களை) அழிக்க முற்படவில்லை. அது தேவையில்லாத காரியமாகத் தெரிந்தது. எனக்கு வெளிப்படுத்தப்பட்ட காரியங்களுக்குள் கொஞ்சமும் யோசிக்காமல் பரிசுத்தாவியானவருடன் கரத்தை கோர்த்துக் கொண்டு நுழைந்து விட்டேன். புத்தகங்களை வாசிப்பவர்களும் அப்படியே வந்துவிடுவார்கள், நிச்சயமாக பரிசுத்தாவியானவர் அவர்களையும் கிருபை பிரமாணத்திற்குள் வழிநடத்திவிடுவார் என்பது சர்வநிச்சயம்! தேவன் பட்சபாதமுள்ளவரல்லவே. சத்தியத்துக்குள் நம்மை நடத்த நியாயப்பிரமாணம் ஒரு பாதையாக இருக்கிறது. அந்தப் பாதை இல்லாவிட்டாலும் வந்து சேர்ந்திருக்க முடியாதே. அதற்காக பாதையிலேயே உட்காந்துவிடவும் முடியாது. ஊர்போய் சேர்ந்தாக வேண்டும், இலக்கை அடைந்தாக வேண்டும். “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. கலா. 3:24”

வாத்தியார் கண்டிப்பாகத் தேவை. வாத்தியார் ரொம்ப நல்லவர், அன்பானவர், என்மேல் அளவுகடந்த பாசம் வைத்திருக்கிறார் என்று சொல்லிக்கொண்டு அவருடனேயே உட்கார்ந்திருக்க முடியாது. உயர்கல்வியின் நிமித்தமாக கண்டிப்பாகப் பள்ளியைவிட்டு வெளியே வரவேண்டியதாகிவிடுகிறது. “விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்கு கீழானவர்களல்லவே. கலா. 3:25” கல்லூரிக்குள் நுழைந்தபிறகு நம்முடைய பழைய வாத்தியாரை நினைவுகூர்வது, அவருக்கு போன் பண்ணுவது, விடுமுறை நாட்களில் அவரைப் போய்ப் பார்ப்பது இவையாவும் இயல்பானவை. ஆனால் மீண்டும் அவருடைய வகுப்புக்குள் போய் பெஞ்சில் உட்காருவது... அதே பாடத்தை மீண்டும் படிப்பது... இது எந்தவொரு மாணவனுடைய வாழ்க்கையிலும் நடக்காத ஒன்று. நடக்கவும் கூடாது... ஆனால் சபையில், ஆவிக்குரிய வட்டாரத்தில் இதுவெல்லாம் சாதாரணமாக நடக்கிறது!

ஏன்? உணர்வடையாமல் இருப்பதுதான் காரணம். “எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். 2 தீமோத். 2:25,26” விசுவாசத்தை அவர்கள் கற்றுக் கொள்ளாதபடி சாத்தான் அவர்களை ஒரு மயக்கநிலையிலேயே வைத்துவிடுகிறான். தேவ ஜனங்கள் சத்தியத்தை அறிந்து கொள்ளாதபடிச் செய்வதில் அவன் அதிக அக்கறை, சிரத்தை எடுக்கிறான். நியாயப்பிரமாண உபதேசத்தால் சாத்தானுக்கு பெரிய அளவில் பிரச்சனை எதுவுமில்லை. அவர்களின் பரலோக பயணத்தை சாத்தானால் தடை செய்ய முடியாவிட்டாலும், ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வதை இதன் மூலம் தடை செய்ய முடிகிறது. இப்படியாக தேவபிள்ளைகளைச் சிறுமைப்படுத்தி, வியாதி, வறுமையுடனேயே வாழ்க்கையின் முடிவுப்பகுதி வரையிலும் நடத்துகிறான்.

இதையெல்லாம் செய்வதினால் சாத்தானுக்கு என்ன லாபம்? நிறையவே இருக்கிறது. தேவ ஜனங்களின் கதை சீக்கிரத்தில் முடிக்கப்படுவதால் பூமியின் மேல் அவனுடைய எதிர்ப்பாளர்களின் எண்ணிக்கை குறைகிறது. சாத்தானுடைய ஆதரவாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இதைச் செய்ய தேவபிள்ளைகள் தங்கள் அறியாமையினால் விட்டுச் சென்ற

சகலவிதமான ஐசுவரியங்களையும் அவன் தடையில்லாமல் உபயோகிக்கிறான். அவனைத் தட்டிக் கேட்க ஆளில்லாமல் போய்விடுகிறது. தேவனுடைய பிள்ளைகள் ஆடம்பரமாக வாழக்கூடாது, சுவிசேஷம் அறிவிக்க பணம் தேவையில்லை, பணம் நம்மைக் கெடுத்துவிடும், என்ற பயத்தை உண்டாக்குகிறான். விசுவாசித்தால் மாத்திரம் போதுமென்றால், கிரியைகளில்லாமல் விசுவாசிகள் இன்னும் மோசமான பாவிகளாக மாறுவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறதே என்ற கேள்விக்குறியை கொண்டு வருகிறான். வாக்குத்தத்தங்களுக்கு முன்பாக ஒட்டிக்கொண்டிருக்கும் நிபந்தனைகள் நம் ஆசீர்வாதத்தைத் தடை செய்யாது, இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினதின் மூலமாக எல்லா நிபந்தனைகளையும் அவர் நிறைவேற்றி விட்டார் நம்முடைய சார்பாக, நம்முடைய பிரதிநிதியாக. அதனால் ஆசீர்வாதங்கள் மாத்திரம் இலவசமாக நம்மை நோக்கி வருகிறது. கரும்பு தின்ன கூலியா? என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்போது அதைவிட அதிகமானதொன்றை கேள்விப்படுங்கள். கரும்பை எடுத்து, அதை சாறாக பிழிந்து, அதை குடிக்கக் கூலியும் கொடுப்பதைப் போல! விஷயத்தை இந்த அளவுக்கு எளிதாக்கினால் தேவ ஜனங்களுக்கு நிர்விசாரம் (தெனாவெட்டு என்று கொச்சைத் தமிழில் சொல்வார்கள்) வந்துவிடும் என்று பூச்சாண்டி காட்டி, மீண்டுமாக நியாயப்பிரமாணத்திற்குள் இழுக்க முயற்சிக்கிறான்.

இப்படிப்பட்ட பிரச்சனைகளினால் நியாயப்பிரமாணிக்க உபதேசியார்கள் யோசிக்கிறார்கள் ... இரண்டையும் கலந்து உபதேசிக்க முயற்சிக்கிறார்கள்... அல்லது ஊறுகாய் போல தொட்டுக் கொள்ளுகிறார்கள். கடைசியில் பழைய இரசம் புதிய துருத்தியை கிழித்து, இரசமும் சிந்தி வீணாய்ப்போகிறது. ஒரு கிலோ ஆப்பிளைச் சாப்பிட்டுவிட்டு, ஒரு சொட்டு அமிலத்தைக் **(acid)** குடித்தால்? முந்தி சாப்பிட்ட ஒரு கிலோ ஆப்பிள் வேலை செய்யாது, ஒரே ஒரு சொட்டாக இருந்தாலும் ஆசீட்தான் வேலை செய்யும்! நியாயப்பிரமாணத்துக்கடுத்த கலப்பட பாரம்பரிய உபதேசத்தை தேவன் புளித்தமாவு என்று எச்சரிக்கிறார். "... பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். லூக். 12:1. நீங்கள் மேன்மைபாராட்டுவது நல்லதல்ல, கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? 1 கொரி. 5:6. ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாய் இருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. 1 கொரி. 5:7"

வேதம் என்ன சொல்கிறது என்றால்; நியாயப்பிரமாணம் ஒன்றும் மோசமான காரியமில்லையே? ஜனங்களைப் பாவத்திலிருந்து காப்பாற்றுவதற்காக தேவனால் நியமிக்கப்பட்டவைதானே அவை? என்று சமாளித்துக் கொண்டு, அதையும் கொஞ்சம் தொட்டுக் கொள்வது விசுவாச பிரமாணிக்கர்களுக்கு ஆபத்தைக் கொண்டு வரும். இப்படிப்பட்டதான பிரச்சனைக்குள் சிக்கிக்கொண்ட கலாத்தியா நாட்டு சபையாரை பவுல் எச்சரிக்கிறார்: "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. கலா.3:1" என்று கண்டிக்கிறார். பவுல் அப்போஸ்தலனின் வார்த்தைகளைச் சற்றுக் கவனியுங்கள். "புத்தியில்லாத கலாத்தியரே"...

இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் வாழ்ந்துக் கொண்டிருந்த காலத்தில் பூமியில் நியாயப்பிரமாணம்தான் இருந்தது. என்றாலும் அவர் தன்னுடைய உபதேசங்களை நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் செய்யாமல், தான் சிலுவையில் ஏற்படுத்தப்போகிற புதிய உடன்படிக்கையின் அடிப்படையில்தான் செய்தார்.

விசுவாச பிரமாணம் புதிய ஏற்பாட்டில் புதியதாகத் தோன்றிய ஒரு காரியமல்ல. பூமியின் தொடக்க நிலையிலேயே ... ஆதியிலேயே தேவனுடைய திட்டம் அதுவாகத்தான் இருந்தது. ஆனால் சாபம் விழுந்துபோன பூமியின் மீது விசுவாச பிரமாணத்தை செயல்படுத்த முடியாமல் போனதால், தற்காலிக நிவாரணமாக விசுவாசப் பிரமாணத்தை மோசே மூலமாக பிரகடனப்படுத்தினார். ஆனால் அது நிரந்தரமல்ல, அதை ஒழிக்க இயேசு இந்த பூமியில் வந்து பிறக்கப் போகிறார் என்று அநேக தீர்க்கதரிசிகள் ஆதியாகமம் முதல் மல்கியா வரை தீர்க்கதரிசனம் சொல்லி சொல்லி ஒய்ந்தார்கள். அந்தத் தீர்க்கத்தரிசன வார்த்தைகள் இயேசுவாக உருவெடுத்தது! (வார்த்தைகளின் வல்லமையை கவனியுங்கள்).

புதிய விசுவாசப்பிரமாணத்தினாலே ஒருவன் கிரியை செய்யாமல் போய்விடும் ஆபத்து

வருமென்று யாரும் பயப்படத் தேவையில்லை. பயம் என்றாலே அது சாத்தானிடமிருந்துதான் வருகிறது என்பது வெளிப்படை. "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. மத். 5:27, 28." என்று இயேசு உபதேசித்துச் சொன்னார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்ற வார்த்தைகளோடு கட்டளை நின்று விட்டது. ஏனென்றால் பூமி சபிக்கப்பட்டிருந்தது, சாத்தான் தோற்கடிக்கப்படவில்லை, இயேசுவும் வெளிப்படவில்லை. அதனால் மனிதனால் விபச்சாரம் செய்யாமல் ஒரு சுய கட்டுப்பாட்டுடன் **(self-control)** தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால் ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கக்கூடாது என்று கட்டளையை அதிக வலுவாக்கினால் அது அக்காலத்திற்கு சாத்தியப்படாத ஒன்றாகவே இருந்திருக்கும். பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களில் இந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்தவர்கள் மிக மிகச் சிலரே... உதாரணமாக யோசேப்பு, தானியேல், ஈசாக்கு. ஆனால் முடியாமல் போனவர்களின் பெயர்கள் நீண்ட பட்டியலாக வரும்.

ஆனால் புதிய ஏற்பாட்டில் அதே நியாயப்பிரமாணக் கட்டளை வலுவுள்ளதாக்கப்பட்டிருந்தாலும் புதிய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுக்கு கட்டளையை நிறைவேற்றுவது 100% சாத்தியமானதே! திரும்பவும் சொல்லுகிறேன், எளிதான கட்டளையாக இருந்தாலும் பழைய ஏற்பாட்டின் கால ஜனங்கள் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க முடியாமல் தோற்றுப் போனார்கள். ஆனால் மிக கடினமாக்கப்பட்டிருந்த அதே கட்டளையை புதிய ஏற்பாட்டின் ஜனங்கள் மிக எளிதாகக் கைக்கொண்டு, அதற்கு கீழ்ப்படிந்து நடந்து கொண்டிருக்கிறார்கள். இது எப்படி சாத்தியமாகிறது? பதில் மிக எளிதானதுதான், இயேசுதான் காரணம். இயேசு சிலுவையில் நியாப்பிரமாணத்தின் சாபத்தி**லி**ருந்து நம்மை விடுதலையாக்கியிருக்கிறார். கைக்கொள்ள முடியாமல் இருந்த வாக்குத்தத்த நிபந்தனைகளை, தானே நிறைவேற்றி, அதன் பலனாகிய ஆசீர்வாதத்தை மாத்திரம் நமக்குத் தருகிறார்.

பழைய ஏற்பாட்டில் ஜனங்கள் இயேசு இல்லாமல் தன்னந்தனியாக நின்று போராட வேண்டியதாயிருந்ததால் அவர்களால் கண்களின் இச்சையை ஜெயிக்க முடியாமல் போனது. ஆனால் இக்காலங்களில் சூழ்நிலை அப்படியில்லை. இயேசுவின் புதிய பிரமாண சத்தியத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கிற எந்தவொரு மனிதனுக்கும் கண்களின் இச்சையி**லி**ருந்து விடுதலை வெகு நிச்சயம். காரணம் பொறுப்பை இயேசு எடுத்துக் கொள்கிறார். மனிதகுலத்தின் ஒட்டுமொத்த பிரதிநிதியாக, நம் பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார ப**லி**யாக, அவர் பொறுப்பெடுத்துக் கொண்டதால், நம்மில் இயேசு ஜீவிப்பதால், நம்மை அவர் இயக்குவதால் இது சாத்தியமாகிறது. "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்காக, நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். எபே. 2:10" மட்டுமல்ல சாத்தான் தோற்கடிக்கப்பட்டுப்போனான், பூமியின் சாபமும் அகன்று போயிற்று, இதுவும் நமக்கு ஒரு பிளஸ் பாயிண்ட். அதாவது இயேசு இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது, இயேசுவுடன் சேர்ந்தால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும். இயேசு இல்லாவிட்டால் நாம் ஒரு **absolute zero.** ("0") ஆனால் இயேசுவுடன் சேர்ந்தால்? அப்போதும் ஜீரோதான் ஆனால் இயேசு நம் வலப்பக்கத்தில் வந்து நின்று கொள்கிறார். அப்போது நமக்கு மதிப்பு வருகிறது, அது கூடுகிறது, கூடிக்கொண்டே போகிறது, 10... 100... 1000... போட முடிந்தால் நூறு ஜீரோ கூட போட்டுக் கொள்ளுங்கள்! அதாவது நம்முடைய ஒவ்வொரு இயலாமையும் ஒவ்வொரு ஜீரோவாக இங்கே கணக்குப் போடப்படுகிறது.

இதுவெல்லாம் **Risk,** தேவையில்லாதது, இது சரியாகத் தெரியவில்லை என்று நழுவப்பார்க்கிறவர்களுக்கு... "...கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது... கலா. 5:2" கவனியுங்கள்... கிறிஸ்துவினால் நமக்கு எந்தவிதமான உதவிகளும் கிடைக்காமல் போனால் நாம் வாழ்வது எப்படி? வாழந்து ஆகப்போவது தான் என்ன?

நியாயப்பிரமாணத்திற்குள்ளாக கண்களை மூடிக்கொண்டிருந்தபோது... கனவுகள் பிறந்தன... விசவாசப்பிரமாணத்திற்குள்ளாக கண்களை திறந்தபோது ...

...அந்த கனவுகள் (நிஜமாயின) பலித்தன...

## எதிரொலிகளாவோம்:

எதிரொ**லி**களைப் பற்றி எல்லோருக்குமே ஓரளவுக்குத் தெரியும். ஏதாவது ஒரு தடையினால் பிரதிப**லி**க்கப்படும் **ஒலி** அலைகளின் தொடர்ச்சியைத்தான் எதிரொ**லி** என்று சொல்லுகிறோம். எதிரொ**லி**களின் மீது நாட்டம் கொண்ட ஒரு மனிதன் **(Mr.Xx)** அதிக அளவில் எதிரொ**லி**யுள்ள நிலப்பகுதிகளை விலைக்கு வாங்க முயன்றானாம். அதில் அவனுக்கு ஏற்பட்ட அனுபவங்களை நகைச்சுவை கதாசிரியரான மார்க்டுவைன் என்பவர் எழுதியுள்ளார்.

நம்முடைய வார்த்தைகளில் வல்லமையுண்டு, அவற்றிற்கு உருவாக்கும் தன்மையுண்டு, அதனால் வார்த்தைகளைக் குறித்ததான கவனம் மிக அவசியம் என்பதைப் பார்த்து வருகிறோம். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வேதத்தில் இருந்து நம்முடைய பிரச்சனைகளுக்கு, சூழ்நிலைகளுக்குத் தேவையான வார்த்தைகளை ஆராய்ந்து, தோண்டி எடுத்து, அதையே பேச வேண்டும். ஒரு முறையோடு நிறுத்தாமல் திரும்பத் திரும்ப எதிரொ**லி**க்க வேண்டும். விசுவாசம் மிக முக்கியம் என்றாலும், அந்த விசுவாசத்துடன் நிறுத்திவிட்டால் ஒன்றும் நடக்காது. அந்த விசுவாசத்தை எப்படி வெளியே கொண்டு வருவது? விசுவாசத்தை வெளிப்படுத்துவதில் வார்த்தைகள் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. நம் விசுவாசத்தை வெளியே கொண்டு வரும் **Container** (கொள்கலமாக – பாத்திரம் அல்லது பை போன்ற ஏதாவது) ஆக வார்த்தை செயல்படுகிறது. பிதாவாகிய தேவன் வார்த்தைகளின் மூலமாக பூமியையும் அதன் நிறைவையும் உண்டாக்கினார். அந்த வார்த்தையினாலேயே எல்லாவற்றையும் தாங்கியும் வருகிறார். அதனால் வார்த்தைகள் என்பது வேதத்தில் மிக முக்கியமான **theme** என்று பார்க்கிறோம். அதனால் அதைக் குறித்து அதிகம் தியானிப்பது, தெரிந்து கொள்வது மிக மிக அவசியம். அதுமட்டுமல்ல அது ஒரு ஆச்சரியமான, பிரமிக்கத்தக்கதான உன்னத அனுபவமுமாகும்.

**Mr. Xx** ஜியார்ஜியாவில் 4 முறைகள் திரும்பத் திரும்ப ஒ**லி**க்கும் எதிரொ**லி** இடத்தை முத**லி**ல் வாங்கினான். அடுத்ததாக மேரிலாண்டில் 6 முறை திரும்ப ஒ**லி**க்கும் பகுதியை வாங்கினான். இவன் வாங்கிய மெய்னில் உள்ள பகுதியில் 13 தரம் **ஒலி** எதிரொ**லி**த்தது. கான்சாசில் 9 முறையும், டென்னெஸ்ஸியில் 12 முறை எதிரொ**லி**க்கும் இடத்தையும் வாங்கினான். 12 முறைகள் எதிரொ**லி**யை உண்டாக்கிய பாறையின் ஒரு பகுதி இடிந்து விழுந்துவிட்டது. சில ஆயிரம் டாலர்கள் செலவழித்து, அதன் உயரத்தை அதிகப்படுத்தி, அதன் **ஒலி** திருப்பு முனைகளை அதிகரிக்கச் செய்ய முயற்சித்தான் ஆனால் எதிரொ**லி** விதிகளைப் பற்றி சரியாக அறிந்திருக்காத கட்டிட நிபுணர் முழு அமைப்பையும் கெடுத்துவிட்டார். அதுவரை மாமியாரைப்போல திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்த அந்த பகுதி ஊமையர்கள் தங்கும் இருப்பிடமாகிப்போனது. வேடிக்கையாக தோன்றினாலும் இதிலே நிறைய விஷயங்கள் இருக்கின்றன. ஹால்பெர்ஷ்டாட்டிற்கு அருகிலுள்ள டீரென்பர்க் என்னும் பாழடைந்த கோட்டை இடிவதற்கு முன்னதாக 27 முறை எதிரொ**லி**களை அனுப்பியது. மிலானுக்கு அருகில் உள்ள கோட்டையில் 30 முறைகளாக சொல்லப்பட்ட வார்த்தைகள் எதிரொ**லி**த்தன.

நாம் எவ்வளவுக்கெவ்வளவாக வேத வசன – வாக்குத்தத்தங்களை – ஆசீர்வதிக்கப்படுவதற்கேதுவான நல்ல வார்த்தைகளை உச்சரிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவாக அது உருவாகி நிறைவேறுவதாயிருக்கிறது. அதிகப்படியான வேத வாசிப்பு, தியானம், ஆராய்ச்சி – அதற்கு பரிசுத்தாவியானவரின் உதவி – பிரகாசமுள்ள மனக்கண்கள் – தரிசனம் இவை யாவும் “வார்த்தை ஆராய்ச்சிக்கு” மிகவும் முக்கியமானதாகும். நம் வாயிலிருந்து வருகிற வார்த்தைகளின் மூலமாகவே நாம் விரும்புகிறபடி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும் என்கிற வேத சத்தியம் ஒரு சாதாரண விஷயமல்ல. வேதத்தில் இருந்து எத்தனையோ பிரசங்கியார்கள் எத்தனையெத்தனையோ வசனங்களை எடுத்து நமக்கு பிரசங்கித்திருக்கிறார்கள். நிறைய கேட்டிருக்கிறோம், ரசித்திருக்கிறோம், மிக நன்றாக இருந்தது, மதிப்பெண்களும் கொடுத்தோம். ஆனால் இவையாவும் நம்முடைய வாழ்க்கையை நாம் விரும்புகிறபடி அமைத்துக் கொள்வதற்கு உதவியிருக்கிறதா என்றால்... அதுதான் இல்லை.

**Xx** நினைத்தது போல இத்தகைய எதிரொலி இடங்களைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. தெளிவாக ஒரு முறை ஒலிக்கும் பிரதேசங்கள் கூட மிக அரிதாகவே காணப்படுக்கிறது. அவற்றைக் கண்டுபிடிப்பதும் மிகவும் சிரமம். காரணம் ஒலி அலைகளின்




படுகோணமும், பிரதிபலிப்பு கோணமும் சமமானதாகும். ஒரு குன்றின் அடிவாரத்தில் நின்று நீங்கள் பேசுவதாக வைத்துக் கொள்வோம். ஒலியைத் திருப்பி அனுப்பும் தடையான **AB** உங்களைவிட உயரத்தில் இருப்பதால், ஒலி அலைகள்**(Ca, Cb, Cc)** பிரதிபலிக்கப்பட்டு உங்கள் காதுகளுக்கு வராமல் **aa, bb, cc** திசைகளில் சென்றுவிடுகின்றன.

நாம் இந்த பூமியில் பிறந்து ... பேசத் துவங்கிய நாள் முதற்கொண்டு என்னவென்னவெல்லாம் பேசினோமோ, அந்த வார்த்தைகளெல்லாம் ஒன்று சேர்ந்துதான் இக்காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையாக உருமாறியிருக்கிறது என்று சொன்னால் நம்ப முடிகிறதா? நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி நிஜம் நிஜம் தான். நீங்கள் நம்பவில்லையென்பதற்காக தேவனுடைய நியமம் மாறப்போவதில்லை. புவியீர்ப்பு விசையை நீங்கள் நம்பவில்லையென்பதற்காக மரத்தில் இருந்து விழும் பழம் மேல் நோக்கியா போகிறது? இப்போது உங்கள் வாழ்க்கை சின்னாபின்னமாக காணப்படுகிறதா? காரணம் நீங்கள்தான், உங்கள் வார்த்தைகள்தான். யோசிக்காமல் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசினீர்கள். சாபத்தீடான உங்கள் வார்த்தைகளே உங்கள் வாழ்க்கையின் எதிர்பார்ப்புகளை சிதறடித்துவிட்டன. உங்கள் எதிர்பார்ப்புகள் உங்கள் வாழ்க்கைக்குள் வராமல் உங்கள் எல்லைகளைவிட்டு வெளியே எங்கெங்கோ சென்று விட்டன!

ஆனால் ஒலியைத் திருப்பும் தடை நீங்கள் நின்று கொண்டிருக்கும் மட்டத்திற்குக் கீழாக இருந்தால் எதிரொலிகள் கேட்கும். இப்போது ஒலி **Ca, Cb** வழியாகச் சென்று தரை மீது ஒன்றிரண்டு இடங்களில் பட்டு **CbbC** அல்லது **CaaC** வழியாகத் திரும்பிவந்து சேர்கிறது. ஒலி தரைமீது படும் இடங்கள் குழிவானதாக இருக்க வேண்டும். உப்பலாக (குவி வடிவில்) இருந்தால் எதிரொலி மிக மெல்லியதாக இருக்கும், அல்லது கேட்கவே கேட்காது.




போனது போகட்டும், இந்த நிமிடத்தில் இருந்து உங்கள் நேரம் ஆரம்பமாகிறது, பிதாவின் ஆவியானவருடன் சேர்ந்து வேதத்தை வாசித்து, வார்த்தைகளைத் தெரிவு செய்யுங்கள். வேதத்தில் எல்லாம்தானே இருக்கிறது என்று சாபத்திற்கேதுவான வார்த்தைகளைத் தெரிவு செய்யாதீர்கள். நீங்கள் நன்றாக இருப்பதற்கு எது தேவையோ அதைத் தெரிவு **(select)** செய்யுங்கள். வசனங்களை வாசிக்கும்போதே அந்த வசனங்கள் உங்கள் இருதயத்தில் விசுவாசத்தைத் துளிர்த்தெழ செய்திருக்கும். அந்த விசுவாசத்தை எடுத்து நீங்கள் தெரிவு செய்த வார்த்தைக்குள்ளாக வைத்து, நாக்கின் வழியாக வெளியேற்றுங்கள். நீங்கள் சொன்னபடியே ஆகும்.

மேடுபள்ளமாக இருக்கும் இடத்தில் எதிரொலியைக் கண்டுபிடிக்க ஒரு தனித்திறமை வேண்டும், எப்படி எதிரொலியை உண்டாக்குவது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தடைக்கு மிக அருகில் நிற்காமல் போதிய தொலைவிற்குச் சென்றுவிட வேண்டும். இல்லாவிட்டால் எதிரொலி மிக முன்னதாகவே ஏற்பட்டு மூல ஒலியுடன் ஒன்றித்துப் போய்விடும். ஒலி வினாடிக்கு **340** மீட்டர் வேகத்தில் செல்வதால் **85** மீ. தொலைவில், அரை வினாடிக்குப் பிறகு எதிரொலி கேட்கும். ஒலியின் வேகம், சத்தம், சுருதியைப் பொறுத்து எதிரொலிகள் சிறப்பாக இருக்கும்.

நம்முடைய பிரச்சனைக்கு பொருத்தமான **(match)** வாக்குத்தத்தங்களைத் தெரிந்தெடுத்து, அதை நம் பிரச்சனையைத் தீர்ப்பதற்கேதுவான வார்த்தைகளாக மாற்றி பேச வேண்டும். உதாரணமாக “நீதிமானுக்கு ஒரு கேடும் வராது; ... நீதி. 12:21” வசனத்தை எடுத்துக் கொள்வோம். “நான் நீதிமான், அதனால் எனக்கு ஒரு கேடும் வராது, எனக்கு எந்த வியாதியும் வராது, ஆபத்து

வராது, பிரச்சனைகள் வராது, தீங்கு வராது ...” இப்படி சொல்லிச் சொல்லி அறிக்கையிடலாம். நம்முடைய விசுவாசத்தை அடிக்கடி அறிக்கையிடத் தடைகள் எதுவும் இருக்குமாயின், ஒரு முறை அறிக்கையிட்டுவிட்டு; “இந்த வார்த்தைகள் 100 அல்லது 1000 அல்லது 100000 முறைகளாக பெருக்கப்படுவதாக என்றும் சொல்லலாம்.” தைரியமாகச் சொல்லுங்கள், நமக்கு சுயாதீனம் இருக்கிறது, இது நம்ம பூமி, நாம் சொல்வதுதான் நடக்கப் போகிறது. அல்லது “இந்த வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டேயிருக்கட்டும்” என்று சொல்லுங்கள்!

## ஜெபம் என்றால்?:

கேட்பது மட்டுமல்ல ஜெபம், கேட்டுப் பெற்றுக்கொள்வதுதான் ஜெபம்! பெற்றுக் கொள்வதற்கேதுவாக ஜெபிப்போம். ஜெபம் என்பது வெறும் மதசம்பிரதாயம் அல்ல, பலர் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். தேவனும் மனிதனும் தொடர்பு கொள்வதற்கான ஒரு ஒழுங்கு முறைதான் ஜெபம். இந்த ஒழுங்கை தேவனே தான் ஏற்படுத்தியிருக்கிறார். அதனால் ஜெபத்திற்கு பதில் வரும் என்பதை முழு நிச்சயமாக நம்பலாம். (ஜெப ஒழுங்கை நாம் ஏற்படுத்தியிருந்தோமானால் சந்தேகப்படுவதில் அர்த்தம் இருக்கிறது.) எதையோ அல்ல, வேதத்தின் வார்த்தைகளை ஜெபிப்போம். ஜெபத்தில் பிரச்சனைகளைப் பேசாமல், பிரச்சனைகளைப் பார்த்துப் பேசவேண்டும். ஜெபத்திற்கான பதிலைப் பெற்றுக்கொள்வதும், பெற்றுக்கொள்ளாததும் நம் கையில்தான் இருக்கிறது. தேவன் அவர் பகுதிக்கு செய்ய வேண்டிய எல்லாவற்றையும் **perfect** ஆக (எந்த குறைவும் இல்லாமல்) செய்து முடித்துவிட்டார். நம் பகுதியில்தான் பிரச்சனை, முதலை தண்ணீருக்குள் இழுக்கிறது, ஓணான் வேலிக்கு இழுக்கிறது, காக்கா மரத்துக்கு இழுக்கிறது. கடைசியில் நம் ஜெபத்திற்கு தேவனுடைய மௌனம்தான் பதில் என்று தவறான முடிவுக்கு வந்துவிடுகிறோம். சிவப்பு பல்ப் **(Red Signal)** எரிகிறது, அதனால் தேவன் இந்த ஜெபத்திற்கு முடியாது என்று பதில் சொல்லிவிட்டார் என்கின்றனர்.

“என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். யோ. 14:14.” இது இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தை. தேவன் நம் ஜெபத்திற்கு முடியாது என்று பதில் சொல்வதில்லை என்பதை அறியலாம். இன்னொரு வசனத்தைப் பார்ப்போம்: “நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். 1 யோவான். 5:15” அதாவது நம்முடைய ஜெபத்திற்கு தேவன் **(Red Signal)** போடுவதில்லையென்று பார்க்கிறோம்.

ஜெபத்தில் நாம் பிரச்சனைகளைப் பேசும்போது, நாம் தவறாக ஜெபிக்கிறோம். தவறான ஜெபத்திற்கு தேவனால் பதில் தர முடியாது. காரணம் தேவனால் தவறு செய்ய முடியாது, அவர் தேவன், நல்லவர், பரிசுத்தர், நீதியுள்ளவர். அப்படியே தவறான ஜெபத்திற்கு தேவன் பதில் தந்தால், தேவனுடைய சித்தம் இந்த பூமியில், நம்மில் நிறைவேறாமல் சாத்தானுடைய நோக்கம் நிறைவேற ஆரம்பித்துவிடும். ஆனால் நாம் சரியான விதத்தில், தேவனுடைய சித்தத்தை அறிந்து, நம் தேவைக்கேற்ற வாக்குத்தத்தத்தைப் பிடித்து, அறிக்கை செய்து ஜெபிக்கும்போது; அந்த ஜெபத்திற்கு எப்போதுமே **Green Signal** தான்! பரலோக ஜெப வீதியில் **Red Signal** கிடையாது. ஏனென்றால் நாம் அவருடைய சித்தப்படி ஜெபிக்கிற ஜெபமனைத்திற்கும் பதில் ஜெபிக்கும்போதோ, ஜெபித்த பிறகோ தேவன் தருவதில்லை. தேவனுடைய பதில் உன்னதங்களில் வாக்குத்தத்தங்களாக, வார்த்தையுருவில் ஏற்கெனவே இருக்கின்றன, அவை இறந்தகாலத்தில், ஏற்கெனவே **(previously)** இருக்கின்றன. நாம் ஜெபத்தில் உபயோகிக்கும் வேதபிரமாணத்திற்கடுத்த சரியான வார்த்தைகள் அந்தப் பதில்களை கட்டவிழ்க்கின்றன, பதில் நம் எல்லைகளுக்குள்ளாக நம் தேவைக்கேற்றவாறு இறங்குகிறது.

தோல்வி கண்முன்பாக இருக்கும்போது, சூழ்நிலை எதிர்மறையாக இருக்கும் போது நாம் வெற்றியைப் பேச வேண்டும். அந்தப் பிரச்சனைக்கான வசனத்தின் வார்த்தைகளைப் பேச வேண்டும். இனிமேல் எங்கள் கையில் எதுவுமில்லை, என்று கையை விரித்துவிட்ட டாக்டரின் கையை பார்த்துக்கொண்டே இயேசுவின் தழும்புகளால் குணமானேன் என்று சொல்ல வேண்டும். **Empty Money purse**-ஐ கையில் வைத்துக்கொண்டு, தேவனுடைய ஐசுவரியம் என் வீட்டில் பெருகும், குறையாதிருக்கும் என்று சொல்ல வேண்டும்.

சூழ்நிலைக்கும், ஜெபத்திற்கும் சம்பந்தமே இல்லாவிட்டாலும் விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும். அதுதான் உண்மையான, விசுவாசமுள்ள ஜெபம். பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான் யோனாவே இப்படியொரு அற்புதமான ஜெபம் செய்திருப்பதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. அதுவும் மீனின் வயிற்றுக்குள் இருந்து ஜெபிக்கிறான். சூழ்நிலை சாதகமானதாய் இருக்கவில்லை... ஆனாலும் சாதகமான ஒரு ஜெபம். கவனியுங்கள்.

யோனாவின் ஜெபம் நிகழ்காலத்திலும் இல்லை, எதிர்காலத்திலும் இல்லை, இறந்த காலத்தை சார்ந்ததாக இருந்ததை கவனியுங்கள். "... அவர் எனக்கு உத்தரவு அருளினார்; ... நீர் என் சத்தத்தைக் கேட்டீர். நீர் என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர். ... என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது. ... இரட்சிப்பு கர்த்தருடையது என்றான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது." (யோனா 2ம் அதி.)

நாம் ஜெபிக்கும்போது நம்முடைய ஜெபம் இறந்தகாலத்துக்குள் செல்கிறது. அங்கே தேவன் நமக்கென்று தயாராக வைத்திருக்கும் பதிலைப் பற்றிப்பிடித்து கீழே இழுத்து வருகிறது. இவ்வளவு காலமாக அறியாமையினால் எவ்வளவு தவறாக ஜெபித்திருக்கிறோம் என்பது இப்போது புரியும். யோனாவின் ஜெபம் அப்படித்தான் இருந்தது, உடனடியாக பதில் கிடைப்பதையும் பார்க்கிறோம். அறியாமையினால் செய்யும் புலம்பல் ஜெபங்கள்... எதை ஜெபிக்கிறோம், எதற்காக ஜெபிக்கிறோம் என்றே தெரியாத ஜெபங்கள்; தேவனுடைய பதிலை நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் தேடுகிறது. அங்கே பதில் இல்லாத காரணத்தால் ஒன்றும் புரியாமல் முழிக்கிறது. கடைசியில் அது பல முடிவுகளை தப்புத்தப்பாக எடுத்துவிடுகிறது.

– ஜெபம் கேட்கப்படவில்லை

– பதில் வரத் தாமதமாகலாம்

– தேவன் முடியாது என்று சொல்லிவிட்டார்

– என் ஜெபத்திற்கு தேவனடைய மௌனம்தான் பதில்

நம்முடைய நிலவரமும் அதுதான். தேவனுடைய வார்த்தையின்படி செய்யாமல், வேறு எதையோ செய்கிறோம். தர்சீசுக்கு போகும் கப்பலில் ஏறிவிடுகிறோம். பிரச்சனையில் சிக்கிக்கொள்கிறோம் (மீனின் வயிற்றுக்குள்). இதெல்லாம் பரவாயில்லை, நாம் தெரியாமல் செய்துவிட்டோம். இப்போது பிரச்சனைகளில் இருக்கும் நாம் ... வியாதிகளில் ... பொருளாதார பிரச்சனைகளில் ... சாபத்தில் ... பாவத்தில் ... சமாதானமின்றி இருக்கும் நாம் தேவனிடம் எதைச் சொல்லி எப்படி ஜெபிக்கிறோம் என்பதுதான் மிக முக்கியமான கட்டம். நாம் ஜெபிப்பதைப் பொறுத்துத்தான் மீன் நம்மை கரையில் கக்குவதா, அல்லது ஜீரணம் பண்ணி ஏப்பம் விட்டுவிடுவதா என்று யோசிக்கும்!

யோனாவாவது மீனின் வயிற்றில் 3 நாட்கள்தான் இருந்தான். சரியாக ஜெபிக்கத் தெரிந்ததால் தப்பித்தான். ஆனால் நம் சபையில் உள்ள கோடி கோடியான ஜனங்களோ ... மாசக் கணக்கில், வருஷக்கணக்கில் மீனின் வயிற்றுக்குள்தான் இருக்கிறார்கள். காலப்போக்கில் ஜீரணமாகியும் போய்விட்டார்கள். மீனின் வயிற்றுக்குள் இருப்பவர்களே, சீக்கிரம் யோனாவின் விசுவாச ஜெபத்தை செய்யுங்கள். அடுத்தபடியாக தேவனுடைய சத்தம் கேட்டு, அவருடைய சித்தம் செய்யுங்கள்; நிச்சயம் மீன்களுக்கு வேலை இருக்காது.

நாம் அதிகாரம் பெற்றிருக்கும் விஷயங்களில் தேவன் வேலை செய்வதில்லை. "... பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். யாக்கோபு 4:7" என்று தேவன் இயேசு சொல்லியிருக்கிறார். இங்கே நம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, பிசாசை எதிர்க்க வேண்டும். அதைவிட்டுவிட்டு இந்தப் பிசாசை துரத்தும் ஆண்டவரே என்று ஜெபித்தால் தேவனால் பதில் தர முடியாது. நமக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் பகுதியில் அவரால் செயல்பட முடியாது. சிலுவையில் சாத்தானின் தலையை நசுக்கி, அவனை நம் கால்களுக்குக் கீழாக வைத்தபிறகும் இப்படி ஜெபித்தால் ... தேவனால் நம்மைப் பார்த்து பரிதாபப்படத்தான் முடியும். சாத்தான் தலைமேல் ஏறாதபடி நாம் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிலர் ஜெபத்திற்கான பதிலை, சாத்தான் தடுக்கிறான் என்கிறார்கள், அதற்கு தானியேல்

10ம் அதிகாரத்தை ஆதாரமாக்குகிறார்கள். தானியேலின் காலம் வேறு, அக்காலங்களில் சாத்தான் தோற்கடிக்கப்படவில்லை. அப்படியிருந்தபோதும் 21 நாட்களுக்குப் பிறகு அவனை ஜெயித்து பதிலுடன் வருகிற தேவதூதனைப் பார்க்கிறோம். சாத்தான் தோற்கடிக்கப்படாத காலங்களில் கூட அவனுடைய பலம் மிகக் குறைவானதாகவே இருந்திருக்கிறது. சாத்தான் தோற்கடிக்கப்பட்டுவிட்டதால் இக்காலங்களில் வாழ்கிற புதிய உடன்படிக்கையின் ஜனங்களாகிய நம் ஜெபத்திற்கான பதிலைச் சாத்தானால் நிச்சயம் தடுக்க முடியாது. அப்படியிருக்க, இந்நாட்களில் நாம் எவ்வளவாய் வெற்றியுடைய ஜெபஜீவியமுடையவர்களாய் இருக்க வேண்டும்?

பூமியின் தொடக்கத்தையும், ஆதியிலே பூமி எப்படிப்பட்டதாக இருந்தது என்பதையும், ஏதேனில் என்ன நடந்தது என்பதையும் அடிக்கடி தியானிப்பது, வேத ஆராய்ச்சிக்கு மிகவும் நல்லது. அதெல்லாம் நமக்கெதற்கு? இயேசுவை ஏற்றுக் கொண்டோமா, நாலு பேருக்கு சுவிசேஷத்தைச் சொன்னோமா, பரலோகம் போனோமா என்றிருந்தால் போதாதா? என்று எல்லா விசுவாசிகளுமே சத்தியத்திற்கு ஒதுங்கி, விலகி, ஓடிப்போனார்கள். சாபத்தால் தங்களுக்கு ஏற்பட்ட வியாதிகளை, தரித்திரத்தை தேவனுடைய சித்தம் என்றார்கள், தேவன் நடத்தும் பாதை இப்படித்தான் இருக்கும் பிரதர், அப்படித்தான் இருக்கும் சிஸ்டர் என்று பாடிய பழைய பல்லவியையே பாடிப்பாடி ஓய்ந்தார்கள். அவர்களின் வார்த்தையின்படியே நடந்தது, பாதை அப்படியும், இப்படியுமாகிப்போனது, ஆனால் தேவன் அப்படி நடத்தவில்லை.

எல்லோருக்குமே வாழ வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அந்த வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்ற விருப்பமும் இருக்கிறது. சிறு குழந்தைக்கு ஜெபிக்கச் சொல்லிக் கொடுக்கும்போதுக்கூட ஆசீர்வதியும் ஆண்டவரே என்று சொல்லச் சொல்கிறார்கள். வேலை செய்து சம்பாதிக்கிறார்கள், வருமானத்தை அதிகமாக்க முயற்சிகள் செய்கிறார்கள். சம்பாதித்து வங்கிகளில் சேமிக்கிறார்கள், வீடுகள், சொத்துக்கள் வாங்குகிறார்கள். பிள்ளைகளை படிக்க வைக்கிறார்கள், வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்ப முயற்சியெடுக்கிறார்கள். வெளிநாட்டு கார், வெளிநாட்டு மாப்பிள்ளை வேண்டும், ஒரு கிலோ நகை வேண்டும் என்கிறார்கள். இதெல்லாம் சரிதான், இதில் எதுவுமே தவறில்லை. ஆனால் இதையெல்லாம் பிரசங்கிக்கிற பிரங்கியார்களை செழிப்பின் பிரசங்கியார் என்று **seal** குத்திவிடுகிறார்களே, அங்கேதான் தாங்கள் என்ன செய்கிறோம் என்று அவர்களுக்கே புரியவில்லை. சொல்வது ஒன்று செய்வது ஒன்றா?

சமாதானம் வேண்டும், ஒரு பிரசங்கியார் சமாதானத்தை பிரசங்கிக்கிறார், உடனே மகா சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்கிறார்கள். சுகம் வேண்டும், தெய்வீக சுகமளிக்கும் கூட்டம் நடக்கிறது, ஓடுகிறார்கள். சுகம் கிடைக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம், சந்தோஷமாக திரும்பி வருகிறார்கள். பையன் இன்னும் இரட்சிக்கப்படவில்லை, சுவிசேஷக் கூட்டங்களுக்கு இழுத்துக் கொண்டு போகிறார்கள். பணம் வேண்டும், ஒரு பிரசங்கியார் அதைப் பிரசங்கிக்கிறார் ... இது வெளிநாட்டு உபதேசம், யாரும் கேட்காதீங்க, உங்களைக் கெடுத்துவிடுவார்கள் என்று சொல்லி எல்லோரையும் உள்ளே போட்டு கதவை அடைத்து, பூட்டி, பூட்டை இழுத்தும் பார்த்துக் கொண்டார்கள். கிறிஸ்துவுக்குள்ளானவர்களே, கேளுங்கள் இது வெளிநாட்டிலிருந்து வரவில்லை, 2 கொரிந்தியர் 9ம் அதிகாரத்திலிருந்து வந்தது. இதை எனக்கு பிரசங்கித்த பிரசங்கியார் வேறு யாருமல்ல, புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியை எழுதிய பிரதான அப்போஸ்தலன் பரி. பவுல்தான்! அந்த பிரசங்கியாரின் பிரசங்கத்தைக் கேட்க என்னைக் கூட்டிக்கொண்டு போனது வேறு யாருமில்லை, பரிசுத்த ஆவியானவர்தான்!

"ஏற்றகாலங்களிலே நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார். தீத்து. 1:4"

ஆதியாகமம் 3 ஆம் அதிகாரத்தில், இந்த பூமியின் ஆசீர்வாதம் சாபமாக உருமாறி செயலாற்ற ஆரம்பித்தது. தொடர்ச்சியாக வாசியுங்கள், பூமியின் மீது கொஞ்சம்கொஞ்சமாக சாபம் வலுக்க ஆரம்பித்தது. நாட்கள் செல்லச் செல்ல, வருடங்கள் ஓட ஓட, யுகாயுகங்கள் கழிய கழிய சாபத்தின் ஆக்கிரமிப்பு, அதன் கொடூரம் அதிகமதிகமாகி, பூமியை நாசமாகிப் போக வைத்தது. ஒரு மனிதனின் உடம்பில் வெண்குஷ்டம் ஒரு இடத்தில் புள்ளி போல ஆரம்பித்தது. உடனடியாக அதைக் கவனித்து மருத்துவம் பார்த்திருந்தால் ஒருவேளை குணமாகியிருக்கலாம், அல்லது கட்டுப்படுத்தியிருக்கலாம். நாளாக ஆக அது விரிந்துபடர ஆரம்பித்தது, சில வருஷங்களில் சரீரம் முழுவதையும் மூடிவிட்டது. அடையாளம் தெரியாத அளவுக்கு நிறம் மாறி, உருமாறி,

உருக்குலைந்து, சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு, துக்கத்தோடு வாழ்ந்து ... நம்பிக்கையிழந்து ... முடிவில் சூனியமாகிப் போகும் அவலம்! ஏறக்குறைய பூமியின் மேல் சாபம் இப்படித்தான் தன் கைவரிசையைக் காட்டி வருகிறது என்று நிதானிக்கலாம். பூமி தோன்றி சுமார் 6500 வருஷங்களாக இந்தக் காரியம் பூமியின்மேல் நடந்து வருகிறது.

இப்படிப்பட்ட பூமியில்தான் உலகத்தோற்றமுதல் கோடானுகோடி மனிதர்கள் தோன்றி, வாழ்ந்து, மரிக்கின்றனர். ஆதியாகமம் 5 ஆம் அதிகாரத்தை வாசித்தால் ஒன்று புரியும். ஆதாமின் ஆயுட்காலம் 930 வருஷம் ... சேத் 807 ... லாமேக்கு 777 இப்படியாக வயது குறைந்து கொண்டே வருவதைப் பார்க்கலாம். ஆதி.6–ல் மனிதனின் ஆயுள் 120 ஆக குறைகிறது, சங்கீதம் 90–ல் வயது 80 ஆகக் குறைந்தது. இக்காலங்களிலோ கேட்கவே வேண்டாம். ஒரு மனிதனுக்கு அவன் பிறந்த நிமிடம் முதல் 80 வயது வரையிலும் எந்த வினாடியிலும் சாவு வரலாம் என்கிற சூழ்நிலை. சாபத்தால் ஏற்பட்ட தாக்கங்கள், யுத்தங்கள், பஞ்சங்கள், விபத்துக்கள், இயற்கை சீற்றங்கள், பாவங்கள், வியாதிகள், வறுமை, பட்டினி போராட்டம், சத்துணவு குறைபாடுகள், கொலை வெறிகள், கருச்சிதைப்பு – போன்ற காரியங்கள் மனிதனின் ஆயுளைக் குறைத்து கொன்று குவித்தன. முதல் மனிதனின் ஆயுட்காலம் 930, இக்காலத்திலோ 70! இடைப்பட்ட 6500 வருஷங்களுக்குள்ளாக பூமியின் சாபம் எந்த அளவுக்கு முற்றியிருக்கிறது என்பதை நிதானிக்கலாம்.

## அதிரடி நடவடிக்கை !:

இந்தப் பூமியில்தான் நாமும் பிறந்து வளர்ந்து வருகிறோம். சாபத்தோடு போராடி, எதிர்நீச்சல்போட்டு நீந்தி வந்து கொண்டிருக்கிறோம். என்றாலும் நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு. பூமியின் மேல் சாபம் கிரியை செய்து கொண்டிருந்தாலும், அது நம்மைத் தாக்காத அளவுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை நம்மால் எடுத்துக் கொள்ள முடியும். இயேசு அந்த நடவடிக்கையை எடுக்கத்தான் பூமிக்கு வந்தார், சிலுவையில் வந்த நோக்கத்தை நிறைவேற்றியும் விட்டார். ஏதேனில் மனிதன் தொலைத்த ஆசீர்வாதங்களை எடுத்து ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்ற முத்திரையோடு வாக்குத்தத்தங்களுக்குள் வைத்து கட்டி, அதை இயேசுகிறிஸ்துவின் வழியாக பூமியின் சகல ஜனங்களுக்கும் கடந்து வரும்படி செய்துவிட்டார். சத்தியத்தை அறிந்த புதிய பிரமாணக் கிறிஸ்தவன், நியாயப்பிரமாண கிறிஸ்தவன், விசுவாசி, பெயர்க்கிறிஸ்தவன், புற மதஸ்தன், நாஸ்திகன் – அவன் யாராக இருந்தாலும் சரி, பட்சபாதமே இல்லை, வாக்குத்தத்த ஆசீர்வாதங்கள் அனைவருக்கும் சொந்தம்.

இதை விசுவாசித்து, எடுத்துக் கொண்டால், அறிக்கையிட்டால் சாபம் மாறும். இன்னும் ஒரு படிமேலே போய், நாம் தேவனைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டால் மகத்தான காரியங்களைச் செய்ய முடியும். பூமியின் மேல் கிரியை செய்து கொண்டிருக்கும் சாபத்தை மாற்றி மீண்டுமாக ஆசீர்வாத்தை கிரியை செய்ய வைக்க முடியும். அது எப்படி? தேவன் என்னென்ன செய்கிறாரோ அதையெல்லாம் நாமும் செய்ய வேண்டும்! அது சாத்தியமா? வசனத்தைப் பாருங்கள்:

“... என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். யோவான். 14:12”

“... இப்போது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், ... அவர் வெளிப்படும் போது, அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். 1 யோவான். 3:2”

நாம் ஏற்கெனவே பார்த்தபடி, எலும்பு, மாமிசம், நரம்பு, இரத்தம், தோல் இவற்றாலான சரீரம் உண்மையான மனிதன் அல்ல! உள்ளான ஆவிக்குரிய மனிதனே உண்மையான மனிதன், அந்த மனிதனை கண்களால் காண முடியாது. உள்ளான மனிதனாகிய அவன் ஆவியாய் இருக்கிறான், அந்த ஆவியான மனிதன்தான் தேவனுடைய சாயலாக இருக்கிறான் என்று பார்க்கிறோம். நம்முடைய சரீரம் அந்த ஆவிக்குரிய மனிதன் தங்கியிருப்பதற்கேதுவாக தேவனால் வடிவமைக்கப்பட்ட ஒரு கூடாரம்தான். ஆனால் அந்த கூடாரம் அவ்வளவு எளிமையானதல்ல. மனிதனுடைய இருதயம் ஒரு வருடத்தில் ஓய்வே இல்லாமல் 40 மில்லியன் முறை துடிக்கிறது! ஒவ்வொருநாளும் நம் உடலில் உள்ள இரத்தக்குழாய்கள் மூலமாக இரத்தம் 1,00,000 கி.மீட்டர்

தூரம் பாய்கிறது! ஒவ்வொரு நாளும் சேதமடைந்து அழிந்து போகிற சிவப்பு இரத்த அணுக்களுக்குப் பதிலாக இந்த சரீரம் 172 பில்லியனுக்கும் மேலான சிவப்பு அணுக்களை உற்பத்தி செய்கிறது! இந்த சிவப்பணுக்களை சங்கிலியால் கோர்த்தால் 1,05,000 கி.மீ. நீளம் இருக்கும். நம் உடம்பிலுள்ள **DNA** அமைப்பை வரிசைப்படுத்தினால் அதன் நீளம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரத்தைப் போல 8 மடங்காகும். இடைப்பட்ட தூரம் ... கி.மீ! நாம் சுவாசிக்கும் காற்றின் ஒவ்வொரு கன சென்டி மீட்டரிலும் 2,70,000,00,00,000,00,00,000 மூலக்கூறுகள் இருக்கின்றன! பூமியில் வாழும் 800 கோடி மனிதர்களில் ஒருவரின் கை ரேகை போல் இன்னொருவருடையது இருப்பதில்லையாம்! சரீரத்தின் மகத்துவத்தைச் சொல்லிக்கொண்டே போகலாம். உள்ளான மனிதனான ஆவி ரூப மனிதன் (அவன் தான் நிஜ மனிதன்) இந்த பூமியின் மீது தங்க வேண்டுமானால், அவன் தங்கியிருக்கத்தக்க ஒரு கூடாரத்தை (கொள்கலம் அல்லது வீடு போன்ற அமைப்பு) தேவன் எவ்வளவு **complicate** ஆன (சிக்கலான அமைப்பையுடைய) சரீரத்தை உருவாக்கியிருக்கிறார் என்று பாருங்கள்!

## விசித்திர விநோதமானவர்கள் நாம்! சங். 139:15:

அப்படியானால் அந்த கூடாரத்திற்குள் வசிக்கும் ஆவி மனிதன் எத்தனை மகத்துவமானவனாக இருக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள், நிச்சயமாக நம் மாம்ச சரீரத்தை விட சிக்கலான அமைப்புடைதாகவே இருக்க வேண்டும். நாம் இலேசுபட்டவர்களல்ல! என்னை யாருன்னு நெனச்சே? என்னை சாதாரணமா நினைச்சுராதே! என்னைப் பற்றி உனக்குத் தெரியாது, நான் பார்த்தா பசு, பாஞ்சா புலி! எங்கிட்ட விளையாடாதே! என்பதான பெருமையான, மிரட்டலான, உருட்டலான வார்த்தைகளைக் கேட்டிருப்போம். சில நேரங்களில் நாமே பேசியுமிருப்போம். பேசுகிறவன் எந்த மனநிலையில் அதைப் பேசினான் என்பது இப்போது முக்கியமல்ல, அவன் பேசியதெல்லாம் நிஜம் அதுதான் இங்கே முக்கியம். இத்தனை மகிமையாக தேவன் நம்மை உருவாக்கியிருக்கிறார். அவரைப் போலவே உருவாக்கியிருக்கிறார். ஆண்டாண்டுகாலமாக சாபத்தால் தாக்கப்பட்ட இந்தப் பூமியில் வாழ்ந்திருக்கும் நாமும் அந்த சாபத்தால் சிதைவுக்குள்ளானோம், உண்மைதான்.

## ஒரு கம்பளிப் பூச்சியின் கனவு:

ஒரு கம்பளிப்பூச்சியின் நிலைமைக்கு அந்த சாபம் நம்மை தள்ளி விட்டிருந்தது... அதுவும் உண்மைதான், இல்லையென்று சொல்லவில்லை. என்றாலும் அந்த கம்பளிப்பூச்சிக்கும் ஒரு கனவு உண்டு. அந்த கனவு ஒரு நாள் நிஜமாகும் என்பதும் சர்வ நிச்சயமாக அந்த கம்பளிப்பூச்சிக்குத் தெரியும். தற்காலத்தில் அந்த பூச்சி தன் மேல் வெறும் முட்களைத்தான் பார்த்தது, தன்னைப் பார்த்து முகத்தைச் சுளிக்கும் மனிதர்களின் முகத்தைத்தான் பார்த்தது. என்றாலும் ஒரு நாள் தனக்கு வண்ணமயமான அழகான சிறகுகள் முளைக்கும், அன்றைக்கு எல்லையில்லாத இந்த ஆகாயத்தில் ஆனந்தமாய் பறப்பேன், அழகான பூக்களின் தேனைக் குடிப்பேன் என்பதை அது அறிந்திருந்தது. அதனால் தன் சரீரத்தின் அருவருப்பான தோற்றம் ஒன்றும் அதற்குப் பெரியதாகத் தெரியவில்லை. தன்னுடைய கனவு நிஜமாகும் காலம் வரும்வரைக்கும் இளைப்பாறுவதற்காக தன்னைச்சுற்றி ஒரு கூட்டை அமைத்துக் கொண்டு கூட்டுப்புழுவாகிப்போனது! அது கூட்டுக்குள் இருக்கும் காலத்தில் தான் தேவன் அதன் உருவத்தை மாற்றி அழகுபடுத்தினார். பூச்சியின் பொறுமைக்குப் பலன் கிடைத்தது. வாக்குத்தத்தம் நிறைவேறியது, ஏராளமான மலர்கள் அந்த உன்னத வண்ணத்துப் பூச்சிக்காய் காத்திருந்தன!

"... காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. 2 கொரி. 4:17" நம் நிலவரமும் இதுதான். தற்சமயம் நம்முடைய தோற்றத்தில் சாபத்தின் சாயல் இருக்கலாம். ஆனால் அது இந்த உலகத்துக்குரியவைகளால் உண்டானது. ஆனால் நமக்கொரு கனவு உண்டு. ஆனால் அது உலகத்தினரின் கனவுகளைப் போல் அல்ல, அது தீர்க்கத்தரிசன கனவு! அது நிச்சயம் நிறைவேறும் என்று நீங்களும் நானும் அறிந்திருக்கிறபடியால், இப்பூமிக்குரிய கூடாரம் உபத்திரவம், வியாதி, தரித்திரம் ஆகியவற்றால் தாக்கப்படுவதைக் குறித்து நாம் கவலைப்படுவதில்லை. நம் கனவு நிச்சயம் நிறைவேறும்.

"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது;
முடிவிலே அது விளங்கும்,
அது பொய் சொல்லாது;
அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு;
அது நிச்சயமாய் வரும்;
அது தாமதிப்பதில்லை. ஆப. 2:3"

தேவன் நமக்காக உலகம் உருவாவதற்கு முன்னதாகவே, நம்மை தெரிவு செய்து, நமக்கான எல்லா ஆசீர்வாதங்களையும் தயார் செய்து உன்னதங்களில் வைத்திருந்தார், காரணம் அப்போது பூமி உருவாகவில்லை. நாம் யார்? எதற்காக இந்தப் பூமியில் பிறந்தோம்? முடிவுதான் என்ன? என்று எதுவுமே தெரியாத அளவில், புரியாத வகையில், உணர்வுகளை மழுங்கடித்தது பூமியின் சாபம். சாபம் சாத்தானுக்கு சாதகமாக இருந்ததால் அவன் நம் ஆவியின் கண்களை குருடாக்கிப் போட்டான். காதுகளையும் செவிடாக்கிப் போட்டான்.

"...தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு (நமக்கு) ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. 1 கொரி. 2:9." சாபத்தோடு உருண்டு, வியாதி, வறுமையோடு முண்டியடித்துக்கொண்டு, வாழ்கிறேன் என்று பெயர் பண்ணிவிட்டு போய்ச் சேர்வதுதான் வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டிருந்தோம். "ஆனால் நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியிலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். 1 கொரி. 2:10" அதாவது நம்முடைய உள்ளான மனிதனுக்கு தேவன் இந்த இரகசியங்களை வெளிப்படுத்தினார். அந்த இரகசியங்களைத்தான் தொகுத்து புத்தக உருவில் இங்கே எழுதிக்கொண்டிருக்கிறேன். இதை எழுதுகிற நானும், வாசிக்கிற நீங்களும் பாக்கியவான்கள்!

பரிசுத்தாவியானவர் நமக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டார். அது ஆதியில் ஏதேனில் இருந்தது. அதை நாம் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக அதை வாக்குத்தத்தங்களாக மாற்றி, (ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் – **capsule** போல) வைத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டின் காலத்திலும், நியாயப்பிரமாணத்தின் காலத்திலும் (இயேசு உயிர்தெழும்வரை) அவை நிபந்தனைகளின் அடிப்படையில் இருந்தது. நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாமல், வாக்குப்பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரிக்கவும் முடியாமல் நம் முற்பிதாக்கள் தோல்வியுடனேயே மரித்தார்கள்.

அந்த வாக்குத்தத்தங்கள் **(Promise)** இயேசுகிறிஸ்துவின் வழியாக நமக்கு வரும்படியாக தேவன் ஏற்பாடு செய்துவிட்டதால், இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அது சொந்தமாயிற்று. அது யாராக இருந்தாலும் சரி, நிபந்தனையில்லாமல் அவர்களுக்கு வந்தது. நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி நிபந்தனைகளை இயேசு பொறுப்பெடுத்துக் கொண்டதால், எல்லா ஆசீர்வாதங்களும், ஐசுவரியங்களும், சுகபோக வாழ்க்கையும் நமக்கு இலவசமாக கிடைக்கிறது.

நமக்கென்று நியமித்ததை நாம் பெற்றுக் கொள்வோம். அதெல்லாம் எதற்கு? இயேசு போதுமே என்று இருக்காதீர்கள். நீங்கள் ஆசீர்வாதங்களை உதறித்தள்ளும் ஒவ்வொரு வினாடியிலும் பூமிக்கு ஆபத்து அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பூமியை நாம் தேவனுடைய நியமத்திற்கேற்றபடி ஆளுகை செய்வதற்கு நாம் ஆசீர்வதிக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும். "இயேசுவை ஏற்றுக் கொண்டோமா, பரலோகம் போய் சேர்ந்தோமா என்று இருக்காமல் இதெல்லாம் என்னத்துக்கு" என்ற சுயநலப்போக்கு? அது கிறிஸ்துவின் சிந்தையல்ல.

இந்த பிரமாண்டமான பூமியை (பூமி 6,00,00,000,00,00,000,00,00,000 டன் எடையுடையது – ஆறு கோடி கோடி கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.) நம்மை நம்பி ஒப்படைத்திருக்கிறார். (ஆதி. 1:28) அவர் பரலோகத்தில் உள்ள எந்த **Hevenly beings**-ஐயும் நம்பி ஒப்படைக்கவில்லை,

தேவதூதர்களிடமும் ஒப்படைக்கவில்லை, அண்ட சராசரங்களின் வேறெந்த சக்தியையும் நம்பி ஒப்படைக்கவுமில்லை. நாம் அவரைப் போலவே படைக்கப்பட்டிருப்பதால் நம்மால் முடியும் என்றே தேவன் நம்பினார். அவருடைய நம்பிக்கை தவறானதல்ல, நம்மால் முடியும் தான். ஏனென்றால் அவருடைய சாயல், ஆற்றல், ஞானம் எல்லாவற்றையும் நமக்குள் வைத்திருக்கிறார். அதனால் அவரைப்போலவே நம்மால் செயல்பட முடியும் என்பது அவருக்குத் தெரியும்.

அதனால்தான் பராக்கிரமசாலியே என்று கிதியோனைப் பார்த்து தைரியமாகச் சொல்கிறார். எனக்கு பிரியமானதைச் செய்வான் என்று தாவீதைப் பார்த்து ஆணித்தரமாகச் சொல்கிறார். வா உன்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக மாற்றுவேன் என்று பேதுருவைப் பார்த்து சவாலிடுகிறார். கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று நாத்தான்வேலை மன நிறைவோடு பாராட்டுகிறார். சிநேகிதனே என்கிறார், ஸ்தீரியினிடத்தில் பிறந்தவனில் யோவான் ஸ்நானகனே பெரியவன் என்கிறார். இவையெல்லாம் நம்மைப் பார்த்து தேவன் கூறும் காரியங்களாகும். ஏதோ நம்மை **encourage** பண்ணுவதற்காக (உற்சாகப்படுத்த) இப்படியெல்லாம் தேவன் பேசவில்லை, உண்மையைப் பேசினார்! நமக்கே தெரியாமல், நமக்குள் மறைந்திருந்த, சத்துருவால் மறைக்கப்பட்டிருந்த தெய்வத்துவம் வாய்ந்த மனிதனைச் சுட்டிக் காட்டி நிஜத்தைப் பேசுகிறார்!

உன்னால் முடியும் ... உனக்குள் இருக்கும் உன்னை நம்பி ... என்று பாடிய உலக கவிஞனுக்கு மனிதனுக்குள் இன்னொரு மனிதன் தெரிகிறான், அவன் தேவசாயலாக இருக்கிறான், அவனால் எல்லாம் முடியும் என்று தெரிந்திருக்கிறது. ஆனால் தெய்வத்துவத்தை தங்களுக்குள்ளாகப் பெற்றிருக்கும் தேவ ஜனங்களோ... என்னால் எதுவும் முடியாது, நான் குப்பை, புழு, தேவனே நீர் வாரும், ஆளுகை செய்யும்... என்று ஒப்பாரி வைக்கிறார்கள். தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு நடக்கிறார்கள். தேவனை அறியாத உலக ஜனங்கள் பேசிப் பேசியே ஜெயிக்கிறார்கள். தேவனை அறிந்த ஜனமோ ஏசி ஏசியே மோசம் போனார்கள்.

நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான் ... என்ற பாடல் வரிகளை நாம் பாடியிருக்க வேண்டியது. "... நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும். நீதி. 10:24" நாம் நம்முடைய உரிமைகளைத் தவறவிட்டதால், சாத்தான் நமக்கு முன்னதாகவே அதை எடுத்துக் கொண்டு போய்விட்டான். இப்போது அவன் தான் நினைத்ததையெல்லாம் நடத்தி முடித்துக் கொண்டிருக்கிறான். நாமும் வார்த்தைகளைத்தான் பேசுகிறோம், பூமிக்குரியவர்களும் வார்த்தைகளைத்தான் பேசுகிறார்கள். நாம் வார்த்தைகளின் **negative side**-ஐ பிடித்துக்கொண்டோம், அவர்களோ **positive side**-ஐப் பிடித்துக்கொண்டார்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தும் அறியாமையினால் நாம் செய்த எதிர்மறை வார்த்தைகள் பூமியில் சாத்தானின் விருப்பத்தை நிறைவேற்றியது. அவர்களோ சாத்தானின் ஆளுகைக்குட்பட்டவர்களாக இருந்தாலும் ஞானமாக சாதகமான நல்லவார்த்தைகளை, வெற்றியின் வார்த்தைகளைப் பேசினதால் அது அவர்களுக்கு வெற்றியைக் கொண்டு வந்தது. ஆனால் இவை இரண்டாலும் தேவனுடைய சித்தம் பூமியில் நிறைவேறப் போவதில்லையே! இந்த பூமிக்கு நாம்தான் பொறுப்பு, சரியான வார்த்தைகளைப் பேசி பூமியையும் அதன் நிறைவையும் நல்லபடியாக வைக்கும் பொறுப்பில் நாம்தான் வைக்கப்பட்டிருக்கிறோம்.

முதலாவதாக வேதத்தை வாசித்து, தியானித்து, ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக சூழ்நிலைக்கேற்ற, தேவைக்கேற்ற வாக்குத்தத்த வசனங்களை அடிக்கோடிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதற்கடுத்தபடியாக அந்த வசனங்களை நம் தேவைகளோடு பொறுத்தி வார்த்தைகளால் வெளிப்படுத்தவேண்டும்.

இதுவரை நம் இருதயத்திற்குள் **silent** ஆக இருந்த விசுவாசத்திற்கு உயிரோட்டம் உண்டாகிறது. உயிரூட்டப்பட்ட விசுவாசம் நாம் ஜெபித்த காரியத்தை பூமியில் உருவாக்கிவிடுகிறது. உலக ஜனங்கள் நல்ல, வெற்றியான வார்த்தைகளைப் பேசினாலும், அவை பைபிளில் இருந்து எடுக்கப்பட்டதல்ல. வேத வசனங்களுக்கு ஒத்திசைவான சில பொன்மொழிகளையும், அறிஞர்களின் வார்த்தைகளையும், தங்களுக்கு நல்லதாகத் தோன்றுகிற வார்த்தைகளையும் எடுத்துப் பேசுகிறார்கள். இவைகள் நல்ல காரியங்களை உருவாக்கினாலும், தேவனுடைய சித்தம் இந்த பூமியில் நிறைவேறுவதற்கு ஏதுவான வலுவுள்ள வார்த்தைகளாக அவை இருப்பதில்லை. ஏதோ

அவர்களுடைய வாழ்க்கையை நல்லபடியாக வாழ்ந்து முடிக்க கொஞ்சம் உருப்படியான காரியங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள், அவ்வளவுதான். உலகம் தோன்றிய நாள்முதல் மனுக்குலம் பேசு பேசென்று பேசிக்கொண்டேதான் இருக்கிறது. ஆனால் உருப்படியாக எதைச் செய்தோம்? பூமி சாபத்தால் **decrease** (குறைந்துக்கொண்டே) போனதுதான் மிச்சம்.

**First and Second Laws of Thermodynamics** விஞ்ஞான விதிகளை கொண்டே இதை தீர்மானிக்கலாம். முதல் விதிப்படி பூமியில் புதிதான சக்தி எதுவும் உருவாக்கப்படுவதுமில்லை, அழிக்கப்படுவதுமில்லை. ஆதியில் உருவாக்கப்பட்ட சக்திதான் வெவ்வேறு சக்தியாக உருமாறுகிறது. இரண்டாவது விதி என்ன சொல்கிறது என்றால், ஒரு சக்தி மற்றொரு சக்தியாக மாற்றப்படும்போது மொத்த சக்தியில் ஒரு பகுதி வீணாக செலவழிந்து போகிறது என்பதாகும். பூமி தோன்றிய நாள்முதல் இதுதான் நடக்கிறது. மனிதனின் மீறுதலால், அதனால் வந்த சாபத்தால், அதனால் தோன்றிய தான்தோன்றித்தனமான பாவ வாழ்க்கையால், அதனால் தோன்றிய சீரழிவுகளால் இந்த விஞ்ஞான விதிகள் பூமியில் நிறைவேறிக்கொண்டே வருகின்றன.

நாம் சரியானபடி சத்தியத்தை அறிந்து, சரியான வார்த்தைகளைப் பேசத் தொடங்குவோமானால் இந்த விஞ்ஞான விதிகளை செயலிழக்க வைக்கலாம். நம்முடைய வார்த்தைகளின் மூலமாக புதிய சக்திகளை பூமியில் உருவாக்கி அதற்கு **First law of God's words** என்ற புதிய விதியை உருவாக்கலாம். ஒரு சக்தியை இன்னொன்றாக மாற்றுவதற்குப் பதிலாக நாம் உருவாக்கிய புதிய சக்திகளையே பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல அப்படி நாம் உபயோகிக்கும் புதிய சக்தி வெளிப்படும்போது அதனுடைய ஆற்றல் அதிகரிக்கவும் செய்யும்! **Second Law of God's words** என்று பெயர் வைத்துக் கொள்ளலாம். இப்படியே வரிசையாக உருவாக்கலாம்...

எல்லாம் நம் கையில், நம்மை எவ்வளவு **Powerful, Strong and efficacious** ஆன மனிதர்களாக படைத்திருக்கிறார் என்று பாருங்கள்! புதியதோர் உலகம் செய்வோம் ... உலகம் பிறந்தது எனக்காக ... நாளை நமதே ... வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும் ... மனிதன் என்பவன் தெய்வமாகலாம் (அதாவது தெய்வம்போல) ... என்றெல்லாம் பாடினார்கள் தான். ஆனால் இவர்களெல்லாம் தேவனைச் சார்ந்திராததால், இயேசுவை அறியாததினால் ஒவ்வொரு காலகட்டங்களுடன் முடிவடைந்து போனார்கள். அவர்களுடைய விசுவாசம் சுயத்தின் மீது **(will power)** அஸ்திபாரமிடப்பட்டிருந்தது.

ஆனால் நம்முடைய அஸ்திபாரம் அதுவல்ல, நாம் ஜெயிக்கப் பிறந்தவர்கள். நாம் இந்த பூமி மீது பிறப்பதே ஒரு ஜெயம்தான் தெரியுமா? நம்முடைய கருவறையிலேயே நம் ஜெயம் ஆரம்பித்துவிட்டது. 10 மில்லியன் உயிரணுக்களின் போட்டியில் நீந்திக் கடந்து **First Prize** வாங்கி, கருமுட்டையுடன் இணைந்து வெற்றிக் கோப்பையுடன்தான் வெளியே வருகிறோம்! பூமியின் மீது பிறந்த எந்தவொரு மனிதனாக இருந்தாலும் சரி, அது யாராக இருந்தாலும் சரி, அவன் வெற்றி (பெற்றதால்) பெற்றுத்தான் பிறக்கிறான். பிறந்தவுடனேயே பூமியின் சாபத்தைப் பார்த்து அழுதுகொண்டே... எனக்கொரு ஆசை, பிறந்தவுடன் சிரிக்கும் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்று! பிறக்க வைப்போம், அதற்கேற்றபடி பேசுவோம். தேவ சித்தம் செய்வோம், பூமியை ஆளுகை செய்வோம். சாபத்தை மாற்றுவோம், ஏதேனை உருவாக்குவோம்!

"எனக்கொரு தீர்க்கதரிசன கற்பனை...

நான் ஏதேனுக்குள் போனேன்...

ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழி திறந்திருந்தது...

காவலாளிகளைக் காணவில்லை! (கேரூபீன்கள், சுடரொளிப்பட்டயம்)"

தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே நமக்காக எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணி வைத்துவிட்டார். அதை நாம் கண்டுபிடிக்கிறோமா என்று கவனித்தபடி நமக்காக காத்திருக்கிறார். கண்டுபிடித்தவர்கள் பாக்கியசாலிகள், கண்டுபிடித்த இரகசியத்தைச் சொல்லுகிறோம், பெற்றுக் கொண்டால் நீங்களும் பாக்கியம் பெறுவீர்கள். உலக ஐசுவரியவான்களின் பட்டியலில் சத்தியத்தை அறிந்த தேவனுடைய பிள்ளைகள் வந்தாலன்றி, பூமியின் சாபத்தை மாற்ற முடியாது. பூமியின் கர்ப்பவேதனையை நீக்கி, இழந்த வாழ்க்கையை மீட்டுக்கொடுத்து, பரலோக பூமியை மீண்டுமாக

சிருஷ்டித்து, அதிலே ஏதேனை உருவாக்கி, ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்கும் வரையிலும் நம் ஆவியை அமர்ந்திருக்க விடாதிருப்போம்!

யோசித்துப் பார்க்க உங்களுக்கு நேரம் கொடுக்கப்படுகிறது...

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பார்கள்;

நம் பிதாவாகிய தேவன், ஆண்டவர் இயேசு, பரிசுத்தாவியாகிய தேவனைப் பொறுத்தவரை அது உண்மையல்ல.

தேவனுடைய அன்பு அளவுக்கு மிஞ்சியதால் நஞ்சும் அமிர்தமாகிப்போனது (சாபம் ஆசீர்வாதமாக மாறினது)"

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். அப். 17:30"

"நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். 1 தீமோத். 1:17"

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதி (acceptable) யாயிருப்பதாக. சங். 19:14

*இரகசியங்கள் இன்னும் இன்னும் தொடரும்...*